சம்ஸார சாகரம்

441

துமிலன்

12 MAR 1945

தமிழ்ப் பண்ணை

M.S. DORAI

நாமக்கல் கவிஞர்
எழுதிய
என் கதை
வெளி வந்து விட்டது
விலை ரூ. 6-8-0

சம்ஸார சாகரம்

துமிலன்

894·8113

12 MAR 1945
MADRAS

தமிழ்ப் பண்ணை

தியாகராய நகர் :: சென்னை

முதற் பதிப்பு 1943
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

03113

விலை ரூ. 2-8-0

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்.

முன்னுரை

இந்தத் தொகுதியை வெளிக் கொணர்ந்ததற்குக் குற்ற வாளி நான் அல்ல. தமிழ்ப்பண்ணைக் காரியாலயத்தார்தான்.

அந்தக் காரியாலய நிர்வாகி ஸ்ரீ நா. அண்ணாமலை என்னிடம் ஒரு நாள் வந்து "இந்த வருஷம் மாமாங்கம் வருகிறது ஸார்" என்று பேச்சை ஆரம்பித்தபோது நான் "அது வந்தால் வந்துவிட்டுப் போகட்டும். ரயில்வே கம்பெனிக்காரர்கள் நான் வரவேண்டாமென்று விளம்பர மூலமாகவும், அறிக்கைகள் மூலமாகவும் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். என் கனத்தால் இஞ்சின் தண்டவாளத்தினின்று கீழே இறங்கிவிட்டது என்ற பழிச் சொல்லுக்கு நான் ஆளாகப் போவதில்லை......" என்று பதிலளித்தேன்.

அவர் இடைமறித்து "நான் சொல்ல வந்தது கும்பகோணத்துக்குப் போவதைப் பற்றி இல்லை. நீங்கள் ஒரு மாமாங்கமாக எழுதி வருகிறீர்கள். ஆனால் ஒரு புஸ்தகம் கூட வெளி வரவில்லையே. ஒன்று வெளியிட்டாகவேண்டும். நான் வெளிக்கொண்டு வரப்போகிறேன்" என்றார். நான் சம்மதிக்காவிட்டால் அவர் சத்யாக்கிரகம் செய்யவும் தயாராயிருப்பார்போலிருந்ததால் அவர் ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொண்டேன்.

நான் இதுவரை எழுதியுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட கதைகள், கட்டுரைகளின் நகல்களை ஒழுங்காகச் சேகரித்து வைத்துக் கொள்ளவில்லையாகையால், அவற்றைத் தேடி எடுத்துக் கதைகளைப் பொறுக்கும் பொறுப்பை பிரசுரகர்த்தர்களுக்கே விட்டு விட்டேன்.

முடிவு இந்தத் தொகுதி.

இதில் வரும் 'இலக்கண விரோதம்', 'நாவல் வேண்டாம்', என்பவற்றைத் தவிரப் பாக்கி எல்லாம் அநேகமாக குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் மனஸ்தாபங்கள், சச்சரவுகள், தொல்லைகள் இவற்றைப் பற்றி இருப்பதால் 'சம்ஸார சாகரம்' என்ற நாமகரணம் சூட்டியிருக்கிறது.

கதைகளில் சில 'ஆனந்த விகடன்' பத்திரிகையிலும் பெரும்பாலானவை 'கல்கி' பத்திரிகையிலும் வெளியானவை. இந்தப் பத்திரிகைகளின் சொந்தக்காரர்களுக்கு சம்பிரதாயமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என். ராமஸ்வாமி.

பொருளடக்கம்

		பக்கம்
மௌன நாடகம்	...	1
சீர்திருத்தம்	...	17
நடக்காத கலியாணம்	...	32
சினிமா ராணி	...	46
நாவல் வேண்டாம்	...	55
இலக்கண விரோதம்	...	64
ஸரஸி விடுதூது	...	75
மன்னமங்தல் கத்திரிக்காய்	...	89
ராஜசுந்தரி	...	100
பயங்கர நார்த்தனர்	...	139
என் மனைவி	...	154
ஒட்டியாணக் கலகம்	...	168

மௌன நாடகம்

இடம்: ஒரு வீட்டின் ஹால்.

காலம்: பகல் இரண்டு மணி.

பாத்திரங்கள்: ஜயராமனும், அவனது மனைவி விசாலமும்.

[ஜயராமன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். விசாலம் அங்கே வந்து அவன் பக்கத்தில் கீழே அமருகிறாள்.]

விசாலம்: எனக்கு ரொம்ப நாளாக உங்களுடன் சாவகாசமாகப் பேச வேண்டுமென்று ஆசை. நமக்குக் கல்யாணம் ஆகிக் கிட்டத்தட்ட நான்கு வருஷமாகிறது. ஆனால் இது வரைக்கும் அப்படிப் பேச சந்தர்ப்பமே வாய்க்கவில்லை.

[ஜயராமன் ஆச்சர்யத்துடன் அவளைப் பார்க்கிறான்.]

எதற்காக அப்படிப் பார்க்கிறீர்கள்? அம்மா வெளியில் போயிருக்கிறார். வருவதற்கு இன்னும் கொஞ்ச நேரம் ஆகும். அதற்குள் என் மனதில் இத்தனை நாளாக அடக்கி வைத்திருந்ததையெல்லாம் சொல்லித் தீர்த்து விடப் போகிறேன்.

[ஜயராமன் வெளியே கிளம்புவதற்குத் தயாராய் எழுந்து நிற்கிருன்.]

ஒன்றும் சொல்லாமல் இப்படிக் கிளம்பினுல் என்ன என்று அர்த்தம்? ஆனல் நான் உங்களே வெளியில் போகவிடப் போவதில்லே. நீங்கள் இன்னெரு அடி எடுத்து வைத்தீர்களோ வாசற்படியிலே போய்ப் படுத்துக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்வேன். எனக்கு உங்களுடன் எல்லாம் சண்டை போடச் சக்தியில்லே. ஆகையால் இப்படிச் செய்வதைத் தவிர வேறு வழி ஏது? சொல்லுங்களேன்.

[ஜயராமனின் ஆச்சர்யம் அதிகமாகிறது. "என்னதான் சொல்லப் போகிருள். கேட்கலாம்" என்ற தீர்மானத்துக்கு வந்தவன்போல் நாற்காலியில் உட்காருகிருன். அவளே ஏற இறங்கப் பார்க்கிருன்.]

அப்படி வாருங்கள் வழிக்கு. நமக்கு நான்கு வருஷத்துக்கு முன்னே கல்யாணம் ஆயிற்று. என்ன நான் சொல்வது சரி தானே!

[ஜயராமன் வாயைத் திறந்து ஒன்றும் சொல்லாமல் 'சரி' என்பது போலத் தலேயை ஆட்டுகிருன்.]

நீங்கள் வாயையே திறப்பதில்லே யென்று தீர்மானம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்

போலிருக்கிறது. ஆனால் அதற்காக நான் பேசாதிருக்கப் போவதில்லை. என் மனசில் குமுறிக் கொண்டிருப்பதைச் சொல்லி விடத் தான் போகிறேன். எங்கேயோ பார்க்கிறீர் களே, கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங் களேன். நமக்குக் கல்யாணம் ஆன வருஷம் நான் என்ன செய்து கொண்டிருந்தேன்? வடக்கே பம்பாயில் பள்ளிக்கூடத்தில் நான் காம் பாரம் படித்துக் கொண்டிருந்தேன்; எல்லா விளையாட்டுகளும் விளையாடுவேன்; பாட்மிண்டன் ஆடுவேன்; டென்னிஸ் ஆடு வேன்; புட்பால்கூட ஆடுவேன்.

பெரிய மிராசுதாரென்று தங்களுக்கு என்னை நிச்சயம் பண்ணினார்கள். தங்களைக் கண்டதும் எனக்குப் பிடித்துவிட்டது. கல் யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டேன். கல்யாணம் நடந்தது. சாதாரணமாக இந்த நாளில் பெண்கள் கல்யாணமான அன்றே அக முடையானுடன் பேசுகிறார்கள். கல்யாணப் பந்தலில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போதே வெடுக்கென்று கிள்ளி விளையாடுகிறார்கள். ஆனால் நான் அப்படி யெல்லாம் செய்தேனா? இல்லை. நான் உங்களுடன் தனியாக நாலைந்து தடவை பேச முயன்றேன். ஆனால் அதற்கு நீங்கள் இடங் கொடுக்கவில்லை. 'நம் அப்பா அம்மா நம்மை ரொம்ப நாகரிகமாக வளர்த்து விட்டார்கள். ஆனால் இங்கே அடங்கி ஒடுங்கித்

தான் இருக்க வேண்டும்' என்று என்னுடைய ஆசையை அடக்கிக் கொண்டு இருந்தேன்.

[ஜயராமன் தலையை மேலும் கீழும் ஆட்டுகிறான்.]

நீங்கள் ஆடிக்கு எங்களூருக்கு வந்தீர்கள். பிறகு ஆறு மாசத்துக்கு வந்தீர்கள். அப்பொழுதெல்லாம் என்னோடு பேசினீர்களா? கிடையாது. நீங்கள் மாட்டில் திண்ணையிலே, திண்ணையிலே போய் உட்கார்ந்து விடுவீர்கள். சாப்பிடும்போதாவது நிமிர்ந்து பார்ப்பீர்கள் என்று எண்ணினேன். குனிந்த தலையை ஏன் நிமிர்கிறீர்கள்? ஆடி யன்று நான் வேண்டுமென்றே உங்கள் இலையில் ஏழெட்டு கரண்டி மோர்க் குழம்பைக் குத்திக்கொண்டிருந்தேன்.

[ஜயராமன் ஆச்சர்யப்பட்டவனைச் சிரிக்கிறான்.]

அப்பொழுதாவது கோபித்துக் கொண்டு ஏதாவது சொல்வீர்களென்று நினைத்தேன். ஆனால் நீங்கள் வாய் திறக்க வேண்டுமே. தலையை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. எனக்கு அப்போது என்ன ஆத்திரம் வந்ததுதெரியுமா! ஆனால் நீங்கள் இப்படிச் செய்யச் செய்ய நாளாவர்த்தியில் எனக்கு உங்கள் மேல் ஆசை இன்னும் அதிகமாயிற்றே தவிர, குறையவில்லை. நீங்கள் எப்பொழுது வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசுவீர்கள், கேட்டு ஆனந்தமடைவோம் என்று தவியாய்த் தவித்தேன்.

இரண்டு வருஷங் கழித்து ஒரு தரம் நான் உங்களூருக்குவந்திருந்தபோது உங்களைத் தனியே சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்பொழுது நான் லஜ்ஜையுடன் நின்று கொண்டிருந்தேன். 'விசாலம்! ஏன் நிற்கிறாய்? இப்படி வா! இங்கே உட்கார்' என்றீர்கள். அந்த வார்த்தைகளை இப்பொழுதும் நினைத்துப் பார்த்துப் புளகாங்கித மடைகிறேன். நீங்கள் கூப்பிட்டும் வராமல் நான் சற்றுத் தயங்கினேன். உடனே எழுந்திருந்து வந்து என்னைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனீர்கள்.

[அவன் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடுகிறது.]

என்னமோ சாஸ்திரத்தின் பெயரைச் சொல்லி நாலைந்து நாளைக் கெல்லாம் என்னை மறுபடியும் ஊருக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். மறுபடியும் இரண்டு மாதங்கள் கழித்து நான் உங்கள் வீட்டுக்கு வந்தேன். உங்கள் வீட்டில் எல்லாம் கர்நாடகமென்று எனக்குத் தெரியும். கூடிய வரையில் இந்த வீட்டுக்குத் தகுந்தபடி நடக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டேன். அப்படியே நடந்து வருகிறேன். நீங்கள் முதலில் என்னைப் பார்க்க வந்தபோதே என்னுடைய தோழிகள், உங்களைக் 'கட்டுப் பெட்டி' என்று பரியாசம் பண்ணினார்கள். நடுவில் உங்களுக்கு

உடம்புக்கு வந்தபோது தலைமயிர் உதிர்ந்து விட்டது. உங்கள் மாமாவும் கிராப் வைத்துக் கொள்ளச் சொன்னார். இல்லாவிட்டால் நீங்கள்

[ஜயராமன் முகத்தில் கோபம் தோன்றுகிறது.]

இருந்தாலும் உங்கள் முகத்திலிருந்த அந் தப் பெருந் தன்மையான களையையும், உங்க ளுடைய தங்கமான குணத்தையும் பார்க்கப் பார்க்க என் ஆசை அதிகரிக்கிறது. நீங்கள் ஜபதபங்கள் ஒழுங்காகச் செய்வதால் உங்கள் முகத்தில் ஏற்பட்டிருந்த தேஜஸ் என்னை உங்க ளுக்கு அடிமையாகச் செய்தது. உங்களைப் பார்க்கும் போதெல்லாம் ஸ்வாமி விவேகா னந்தரோ அல்லது ராமகிருஷ்ண பரம ஹம்ஸரோ ஞாபகம் வரும்.

[அவன் பெருமை யடைகிறான்.]

நான் இங்கே வந்து என்னுடைய நடை யுடை பாவனைகளையே மாற்றிக் கொள்ளும்படி யாயிற்று. எங்கள் வீட்டில் எட்டு மணி வரை யில் தூங்குவேன். இங்கே நாலு நாலரை மணிக்கே எழுந்திருந்து வீட்டுக் காரியங்களைக் கவனிக்கும்படியாயிற்று. நான் இங்கே வீட்டு வேலைகள் அதிகமென்று சொல்ல வரவில்லை. ஏனென்றால், பெரிய காரியங்களை யெல்லாம் அம்மாவே செய்து விடுகிறாா. நான் செய்தால் சண்டைக்கு வந்து விடுவார்.

இங்கே வந்தபிறகு பூப்போடுதல் போன்ற காரியங்களை மறந்தேன். ஆனால் ஒன்று ஒப்புக் கொள்கிறேன். நான் எங்கள் ஊரிலிருந்த போது பொழுது விடிந்தால் பொழுது போனால் எனக்கு வியாதிதான். தலைவலி, வயிற்று வலி, கண்வலி ஏதாவது இருக்கும். ஆனால் இங்கே வந்த பிறகு அதெல்லாம் போய்விட்டது.

வந்த இரண்டாவது தினம் நான் ஒரு நாவலை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தேன். அப்பொழுது அம்மா என் பக்கத்தில் உட் கார்ந்து 'என்ன படிக்கிறாய்?' என்று கேட் டார். 'நாவல்' என்றேன். 'நானும் கேட்கி றேன், வாய்விட்டுப் படியேன்' என்றார். நான் படித்தேன். நான் அப்போது படித்தது இன் னும் ஞாபகமிருக்கிறது. அதைச் சொல்கி றேன். கேட்கிறீர்களா?

[ஜயராமன் நாற்காலியில் சற்று எழுந்து உட்காருகிறான்.]

'அந்தக் கட்டழகி கனகாம்புஜம் அன்று மாலையில் தன் வீட்டு மெத்தையில் ஒரு நாற் காலியில் உட்கார்ந்த வண்ணம் எதிர் வீட்டுப் பக்கம் நோக்கினாள். அங்கே ஒரு வாலிபன் கையில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு தன்னையே கவனிப்பதைப் பார்த்தாள். அவ ளுக்கு அவனை மறுபடியும் பார்க்க வேண்டு மென்று தோன்றிற்று. அவனைப் பார்க்க

அவன் தலையை நிமிர்ந்த சமயம் 'கனகம்' என்று அவள் கணவன் கூப்பிடும் சப்தம் கேட்டது........'

அம்மா இதைக்கேட்டதும் காதைப் பொத்திக் கொண்டு, 'இந்தப் புஸ்தகம் படித்தது போதும்' என்று சொல்லி விட்டார். இரண்டு தினங்களுக் கெல்லாம் நீங்கள் என்னிடம் ஒரு புஸ்தகக் கட்டைக் கொண்டு வந்து கொடுத்தீர்கள். அதில் 'பதிவிரதைகள் மகாத்மியம்', 'வேதநாயகம் பிள்ளை பாடல்', 'கமலாம்பாள் சரித்திரம்' முதலிய புத்தகங்கள் இருந்தன.

வேதநாயகம் பிள்ளை பாடலில் ஸ்திரீகளைப் பற்றி யிருக்கும் பாடல்கள் சிலவற்றை அம்மா பாடச் சொல்லிக் கொடுத்தார். நானும் ஆசையுடன் சொல்லிக் கொண்டேன். இந்தப் புத்தகங்களைப் படித்துப் பார்த்துத்தான் எனக்கு என் கடைமையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டு மென்பதில்லை. இருந்தாலும் உங்களைத் திருப்தி செய்வதற்காக அதை யெல்லாம் படித்தேன். திருப்பித் திருப்பிப் படித்தேன்.

இவற்றைப் படித்ததன் பயனாய் நாளடைவில் எனக்குக் கம்ப ராமாயணம், திருக்குறள் முதலியவற்றையும் படிக்க வேண்டுமென்று தோன்றியது. நான் இந்தப் பழைய கதை யெல்லாம் ஏன் சொல்கிறேன் தெரியுமா ? ஒரு மனுஷியால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் நான் உங்களுக்கு ஏற்றபடியெல்லாம்

நடந்து வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவிக்கத்தான்.

இப்படி யிருக்கும்போது போன வருஷம் என் தலையில் ஒரு பெரிய இடி விழும் போலிருந்தது.

[எங்கேயோ பார்த்துக்கொண்டிருப்பது போலிருந்த ஜயராமன் திடுக்கிட்டு அவளைத் திரும்பிப் பார்க்கிருன்.]

கல்யாணமாகி நாலு வருஷமாகியும் எனக்குக் குழந்தை பிறக்கவில்லை யென்று அம்மாவுக்குக் குறை. எத்தனையோ தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டார். ஒரு பலனும் இல்லாமல் போகவே உங்களுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கலாமா வென்று கூட யோசனை செய்தார்.

[தாயாரைப் பற்றிக் குறை கூறுவதைக் கண்டிப்பது போல் ஜயராமன் முகத்தைச் சிணுத்துக் கொள்கிருன்.]

நீங்கள் தாய் சொல் தட்டாத பிள்ளை. பிள்ளைக் குழந்தை பிறந்தால்தான் மோட்ச லோகம் கிடைக்குமென்று நம்பிக்கையுள்ளவர்கள். ஆனல் நீங்கள் கூட அம்மாவின் அந்த யோசனைக்குச் சிறிதும் இடங்கொடுக்கவில்லை. அதற்காக நான் உங்களை எவ்வளவு பாராட்டினேன் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

[ஜயராமன் பெருமிதமடைகிருன்.]

ஆனால அதைப் பற்றிய கவலை என் மனதை எப்பொழுதும் வாட்டிக்கொண்டே யிருக்கிறது. நான் பத்து நாளைக்குமுன் ஒரு சொப்பனங் கண்டேன். சுவாமிநாத ஸ்வாமி வந்து 'உனக்கு ஒரு பிள்ளை பிறக்கும்' என்று சொன்னது போலிருந்தது.

[அவன் தன்னை யறியாமல் உற்சாக மடைகிறான். நாற்காலியில் அசைந்து உட்காருகிறான்.]

அன்று முதல் நான் வந்து....வந்து ஒரு காரியம் செய்து வருகிறேன். இதைப் பார்த்தீர்களா இந்தப் பூநூல் குல்லாவை!

[இடுப்பிலிருந்து எடுத்துக் காண்பிக்கிறாள். ஜயராமன் கண்கள் ஆச்சரியத்தால் பெரிதாகின்றன.]

குழந்தைக்காக இதைத் தைத்துக் கொண்டிருக்கிறேன். முந்தாநாள் ராத்திரி இதைத் திருட்டுத் தனமாகத் தைத்துக் கொண்டிருந்த போது நீங்கள் வந்து விட்டீர்கள். அப்பொழுது நான் அதை ஒளித்ததைப் பார்த்துவிட்டு, 'என்ன ?' என்று கேட்டீர்கள். 'ஒன்றுமில்லை' என்று சொன்னேன். நான் அப்படி ஒளித்ததற்கு இன்னொரு புருஷனாக இருந்தால் சந்தேகப் பட்டிருப்பான். ஆனால் நீங்கள் எப்பொழுதும் பெருந் தன்மையுடன் நடந்து கொள்ளுகிறீர்கள். ஒரு வார்த்தை பேச

வில்லை. ஆனால் அப்படிப் பேசாதது எனக்கு ரொம்பக் கோபந்தான் வந்தது. நிஜமாகவே சொல்கிறேன். நீங்கள் என்னை அடிக்கடி கோபித்துக்கொள்ள வேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது. இப்படி நான் பேசுவதற் காகவாவது கோபித்துக் கொள்ளுங்களேன்.

[ஜயராமன் குல்லாவையே ஆச்ச ரியத்துடன் கவனித்துக் கொண் டிருக்கிறான்.]

இந்தக் குல்லாவைக் குழந்தைக்கு இப்ப டிப் போடுவேனாக்கும்!

[தன் தலையில் வைத்துக் கொண்டு காண்பிக்கிறாள். ஜயராமன் சிரிக்கிறான்.]

இது மட்டுமா? குழந்தைக்கு ஸ்டாக்கிங்ஸ் கூடத் தைத்திருக்கிறேன்.

[மடியில் மறைத்து வைத்திருந்ததை எடுக்கிறாள்.]

குழந்தை சுவாமிநாதன் இந்த ஸ்டாக் கிங்ஸைப் போட்டுக் கொண்டு டக் டக் என்று நடப்பான்.

[இரண்டு கைகளிலும் இரண்டு ஸ்டாக்கிங்ஸை வைத்துக் கொண்டு காலைத் தூக்கித் தூக்கி வைப்பது போல் காண்பிக்கி றாள். அவளுக்குத் தன்னை அறி

யாமல் சிரிப்பு வருகிறது. ஜய ராமனும் சிரித்து விடுகிருன். விசாலம் தான் பைத்தியம் மாதிரி நடந்து கொள்வதைப் பற்றி எண்ணிப் பார்த்ததும், சிறிது நேரம் மௌனமா யிருக் கிருள். ஆனல் மறுபடியும் ஆரம்பிக்கிருள்.]

குழந்தைக்கு சுவாமிநாதன் என்றுதான் பெயர் வைக்கணும். அம்மாவிடம் சொல்லுங் கள். என்ன, சொல்லுகிறீர்களா ?

நான் என்னமோ சொல்ல ஆரம்பித்து என்னமோ சொல்லிக் கொண்டு போகி றேனே. அம்மா வருவதற்கு நாழியாகி விட் டது. நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடு கிறேன். இந்த வீட்டில் எனக்கு ஒரு விதத் திலும் சுதந்திரம் கிடையாது. உங்களுக்குப் பரிமாறக் கூட சுதந்திரம் இல்லை யென்ருல் அந்த வயிற்றெரிச்சலை எங்கே போய்ச் சொல் வது ? முக்கால் வாசி நாளைக்கு, அம்மாவே உங் களுக்குப் பரிமாற வந்து விடுகிருர். நான் இலை போட்டு, பலகை போட்டு, தீர்த்தம் எடுத்து வைக்கிறதோடு சரி. கல்யாணம் ஆகி இத்தனை நாள் ஆச்சே ? ஒரு நாளாவது என்னை உங்க ளுக்கு நெய் குத்த விடுகிறதில்லை. நான் என்ன குறைத்தா குத்தி விடுவேன் ? அல்லது நிறையக் குத்திக் கொண்டால் திருஷ்டி வைத்து விடுவேனு ? சொல்லுங்களேன்.

[ஜயராமன் உதடுகளை இறுக்கிக் கொள்கிறான்.]

வாயை இன்னும் கொஞ்சம் கெட்டியாக மூடிக் கொள்ளுங்கள். எங்கள் ஊரிலிருந்து அப்பாவோ அம்மாவோ வந்தால் நான் அவர்களுடன் தனியாகப் பேசக் கூடாதென்றும் அம்மாவுக்கு எதிரில்தான் பேச வேண்டும் என்றும் சொல்லி விட்டீர்கள். எனக்கு ஏதாவது சாமான் வேண்டுமென்றால் நான் உங்களிடம் சொல்லி நேரே வாங்கிக் கொள்ளக் கூடாது. நான் அம்மாவிடம் சொல்லணும். அவர் 'ஏண்டா!' என்னமோ கேட்கிறாளேடா! வாங்கிக் கொடேண்டா!' என்று சொல்லணும். அப்புறம்தான் நீங்கள் வாங்கி வருவீர்கள்.

விஷயம் அத்தோடு போச்சா? சாமான் வாங்கி வந்தால் அதை என் கையில் கொடுத்து விடுவீர்களா? அம்மாவிடம்தான் கொடுப்பீர்கள். அம்மா 'இந்தா விசாலம்' என்பார். அப்புறந்தான் நான் அதை எடுத்துக் கொண்டு போகணும். எங்கேயாவது வெளியில் போக வேண்டுமென்றாலும் இப்படித்தான்.

இதெல்லாவற்றையுமாவது பொறுத்துக் கொண்டுவிடலாம் போலிருக்கிறது. ஆனால் நான் அந்தப் புடவையைத்தான் கட்டிக் கொள்ள வேண்டும், இந்தப் புடவையைத்தான்

கட்டிக் கொள்ள வேண்டுமென்று அம்மா சொல்கிறதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. வாங்கின புடவை யெல்லாம் பளிச்சு பளிச்சுன்னு ஒரு முழம் சரிகை போட்டிருக்கு. டிராமாவில் கட்டிக்கொண்டு வருகிறாப்போலே இதெல்லாம் யாருக்குப் பிடிக்கிறது? எனக்கு இனிமேல் கதர் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டு மென்றிருக்கிறது. ஆனால் என் இஷ்டப்படி நடக்கப் போகிறதா! தலை விதிப் படிதானே நடக்கும்!

[ஜயராமன் முகத்தில் சிறிது கோபம் தோன்றுகிறது. அவள் சொல்வது தவறு, அப்படி யெல்லாம் பேசக் கூடாது என்பது போலத் தலையை மெதுவாக ஆட்டுகிறான்.]

மனசிலே வைத்துக் கொண்டிருப்பதை விடச் சொல்லித் தீர்த்து விட்டால் தேவலை என்று சொல்லிவிட்டேன். ஆனால் சொல்லச் சொல்ல இந்தப் பேச்சை ஏன் எடுத்தோம் என்று தோன்றுகிறது. அம்மாவுக்கு நீங்கள் ஒரே பிள்ளை. உங்கள்மேலே அவர் பிராணனை வைத்துக் கொண்டிருக்கிறார். என் மேலேயும் ஆசையாய்த்தான் இருக்கிறார். ஆனால் என் இஷ்டப்படி யெல்லாம் நடக்க முடியவில்லையே

என்று நினைத்தால் கோபமாய்த்தான் வரு கிறது.

'அம்மா அட்படி என்னை அறியாமல் உன்னை என்ன பண்ணி விடப் போகிருர்? ஏதோ சில்லறை விஷயங்களில் அவள் இஷ்டப்படி நடந்தால் என்ன வந்து விட்டது? என்னைப் பெற்றெடுத்த அவள் திருப்தி யடை யட்டுமே. பழைய காலத்து மனுஷாளுக்குக் கொஞ்சம் அதிகாரம் பண்ணுகிற ஆசை உண்டு. பண்ணி விட்டுப் போகட்டுமே!' என்று ஒரு சமயம் சொல்லியிருக்கிறீர்கள்.

ஆனல் நீங்கள் சொன்னதும் நியாயந் தான்? கல்யாணம் பண்ணின மறு நாளே அந்த உலகமறியாத பெண் வைத்ததுதான் வீட்டில் சட்டம் என்ருல் அது நன்ருகவா இருக் கிறது! இல்லைத்தான். நாளைக்கு எனக்கு ஒரு நாட்டுப்பெண் வந்தால் அவள் என் இஷ்டப் படி நடக்க வேண்டுமென்று நான் ஆசைப்படு வேனு, மாட்டேனு! கட்டாயம் ஆசைப்படு வேன்.

ஆகையால் நான் இதுவரையில் சொன்ன தையெல்லாம் மறந்து விடுங்கள். நான் இனி மேல் எப்படி நடந்து கொள்கிறே னென்று பாருங்கள். அம்மா இன்னும் வரக் காணுமே.

[விசாலம் கடைசியில் சொன்ன வற்றைக் கேட்டுக் கொண்டே

வந்த அவள் மாமியார் உள்ளே நுழைகிருள். வயதால் தளர்ந் திருந்த அவள் முகம் மலர்ந்திருக் கிறது. அவளைக் கண்டதும் விசாலத்துக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. "உனக்கு இஷ்ட மான புடவையை வாங்கிக் கொள்ளேன். உன்னை யார் வேண்டாமென்று சொன்னது?" என்று மாமியார் அன்புடன் கேட்கிருள்.]

விசாலம்: சுவாமிநாதனுக்கு என்ன வாங் குகிறது?

[ஜயராமன் குப்பென்று சிரித்து விடுகிருன்.]

சீர்திருத்தம்

தம்பதிகளுக்குள் முதன் முதல் எப்பொழுது சச்சரவு ஏற்படுகிறது? விவாகமான தின மன்றேயா, ஒரு மாதங் கழித்தா, அல்லது ஒரு வருஷங் கழித்தா?

சம்சார சாகரத்தில் காலை வைத்த வாலிபர்களிடையே இதைப்பற்றிப் பலத்த அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது. விவாகமான முதல் மாதத்திலேயே வாழ்க்கைப் போராட்டம் தொடங்கி விடுகிறதென்று சிலர் கூறுகின்றனர்கள். சிலர் இரண்டு மாதத் தவணை கொடுக்கிறார்கள். யுத்தக் கொடி பறக்கவிட மூன்று மாதக் கெடு சொல்லும் பொறுமைசாலிகளும் இல்லாமலில்லை.

ஆனல், ராமநாதன் விஷயம் இந்தக் கெடுக்களுக்கெல்லாம் விதிவிலக்கானது. அவனுக்கும், கோமளத்துக்கும் விவாகமான இரண்டாவது வாரமே அவர்களுக்குள் சச்சரவு ஆரம்பமாகி விட்டது.

ஒருநாள், ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்த ராமநாதன் "கோமளம்!" என்று கூப்பிட்டான்.

"ஊம்!" என்று சமையல் அறையிலிருந்து பதில் வந்தது.

"கோமளம்!"

"ஊம்!"

"ஊம் என்ருல் என்ன அர்த்தம்?" என்று ராமநாதன் உரக்கக் கேட்டான்.

சிறிது நேரம்வரை இதற்குப் பதிலில்லை. "கோமளம்!" என்று மறுபடியும் ஆத்திரத்துடன் கூப்பிட்டான்.

"வந்து விட்டேன்" என்று அதே ஆத்திரத் தொனியில் பதில் கிடைத்தது.

"எத்தனை நாழி?"

"அதான் வந்துகொண்டே இருக்கிறேனே. அதற்குள் மூச்சுவிடாமல் கூப்பிட்டால்?"

"ஏது, பேச்செல்லாம் பலமா யிருக்கு?"

"சரி, சரி, எதற்காகக் கூப்பிட்டீர்கள்? சொல்லுங்கோ."

"நீ சொன்னதை இன்னொருதரம் சொல்லு. 'சரி — சரி! சொல்லுங்கோவா?"

"நான் என்ன தப்பாகச் சொல்லி விட்டேன்?"

"சொல்வதற்கு இன்னும் என்ன பாக்கி வைத்திருக்கிருய்? 'சரி, சரி,' அந்த இரண்டா

வது 'சரி'க்கு என்ன அர்த்தம்? சொ....ல்லுங்கோ! அந்த 'சொ'விலே எவ்வளவு அழுத்தம்? சொல்லச் சொல்லி எனக்கு உத்தரவு போடுகிருயாக்கும்?"

"நான் சாதாரணமாய்த்தான் சொன்னேன். அதை நீங்கள் தப்பாய் எடுத்துக்கொண்டால் நான் என்ன பண்ணுகிறது? இன்ன எழுத்துக்கு இவ்வளவு சப்தம் போட்டுப் பேசணுமென்று கணக்குப் போட்டுக் கொண்டிருப்பாளா? இனிமேல் இதற்கெல்லாம்கூட ஸ்வரம் பாடிப் பழகிக்கொள்ள வேண்டியது தான்."

"ஊம்! பிரசங்கம் நடக்கட்டும்" என்று ராமநாதன் உறுமினன்.

"எனக்கு எத்தனையோ வேலையிருக்கு. நான் ஒண்ணும் பேசிக் கொண்டிருக்கக் காத்துக் கொண்டிருக்கவில்லை."

"ஓஹோ! காத்துக் கொண்டிருக்கவில்லையா? அப்படியானல் என்னோடு பேசப் பிடிக்கவில்லை யென்று சொல்லி விடேன்!"

"அதெல்லாம் கிடக்கட்டும். என்னை எதற்காகக் கூப்பிட்டீர்கள்?"

"அதெல்லாம் கிடக்கட்டுமா? பேஷ்! நான் ஒண்ணு சொன்னல் உனக்கு அவ்வளவு அலட்சியம்! நீ போய் உன் காரியத்தைப் பார். எனக்குத் தாகம் எடுத்து, அது அடங்கி அரை மணிநேரம் ஆகிவிட்டது."

"இதை முன்னடியே சொல்லக்கூடாதா?" என்று கூறி விட்டுக் கோமளம் உள்ளேபோய் ஒரு டம்ளரில் ஜலம் கொண்டுவந்து அவனிடம் நீட்டினுள். ராமநாதன் அதை வாங்கிக்கொள் ளாமலும் அவள் பக்கம் திரும்பிப் பாராமலும் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொண்டு தன் கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கவே அவள் டம்ளரை ஊஞ்சல் பலகை மீது வைத்தாள்.

"உன் கோபத்தை டம்ளரின் மீது காண் பிக்க வேண்டாம்" என்று ராமநாதன் சீறி னன்.

"எனக்கு ஒன்றும் கோபமில்லை. ஏன் இன்று இப்படி...."

"கோப மில்லாமல்தான் டம்ளரை அப்படி டக்கென்று வைத்தாயாக்கும்?"

"அட ராமச்சந்திரா! இன்று யார் முகத் தில் விழித்தேனே தெரியவில்லையே!"

"அட ராமநாதா' என்று என் பெயரைத் தான் சொல்லேன். இன்று என் முகத்தில்தான் விழித்தாய்? இனிமேல் அப்படிப்பட்ட பெரிய பாபத்தைப் பண்ணிவிடாதே."

"ஏன் இப்படி ஒண்ணுமில்லாததற் கெல் லாம் கோபம்வருகிறது? இதற்கெல்லாம்கூடப் பள்ளிக்கூடத்தில் பரீக்ஷை வைக்கிருளா?"

"என்ன சொன்னே! எனக்கா கோபம் வருகிறது? நான் எவ்வளவோ பொறுமையாய்

இருக்கிறேன்" என்று இரைந்து கொண்டே டம்ளரை வேகமாகக் கீழே தட்டிவிட்டான்.

அப்பொழுது மெத்தையிலிருந்து ராமநாதனுடைய தந்தை சிவசாமியும் தாயார் ஜானகி அம்மாளும் கீழே இறங்கி வந்துகொண்டிருந்தனர். "பார்த்தீர்களா? தினம் நீங்கள் இல்லாத சமயத்திலே இது மாதிரிதான் ஏதாவது நடக்கிறது. சண்டை வலுப்பதற்கு முன் நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு ஜானகிஅம்மாள் கீழே இறங்கிவந்தாள். பிறகு ஒன்றும் தெரியாதவள்போல் "என்னமோ சப்தம் கேட்டதே, என்ன?" என்று கோமளத்தை விசாரித்தாள்.

"ஒன்றுமில்லை. டம்ளர் தவறிக் கீழே விழுந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே கோமளம் அதை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள். ராமநாதனும் மிகவும் மும்முரமாகப் படிப்பவன் போலிருக்கவே ஜானகி அம்மாள் விஷயத்தை மேலே தொடர்ந்து பேசவில்லை.

அன்று மாலை சிவசாமியும் அவர் மனைவியும் இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"கல்யாணம் ஆகி முழுசாக ஒரு மாசங்கூட ஆகவில்லை. அதற்குள் இத்தனை சண்டையா!" என்று ஜானகி ஆச்சரியப்பட்டாள்.

"இந்த அழகிலே காதல் கல்யாணம் வேறே இலட்சணம்!"

"அதைச் சொல்லுங்கோ."

"எனக்குத்தான் எங்க அப்பா அம்மா என்னைக் கேட்காமல் கல்யாணம் பண்ணி வைத்துவிட்டா. உன்னை நான் மாலை யிடுகிற போதுதான் பார்த்தது."

"பார்க்காமல் பண்ணிக் கொண்டதில் என்ன குறைந்து போச்சு?"

"இந்தா, சண்டைக்கு வராதே. நான் பேச்சுக்குச் சொன்னேன். நம்ப ராமுவுக்கு எத்தனையோ பேர் நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பெண் கொடுக்க வந்தா. ராமுவோ 'கோமளத்தைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன். இல்லாவிட்டால் சந்நியாசியாய்ப் போய்விடுவேன்' என்று குதியாய்க் குதித்தான். அந்தப் பெண்ணும் 'என்னை வேறு யாருக்காவது கொடுப்பதா யிருந்தால் தற்கொலை செய்து கொண்டு விடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தாளாம். அப்படிப் பட்டவர்கள் இப்படி எலியும் பூனையுமாய் இருப்பார்க ளென்று யார் எதிர்பார்த்தா?"

"நான் தலையிட்டால் நாஸூக்காயிராது என்று இதுவரை பேசாதிருந்தேன். இனிமேல் சும்மா இருக்கக் கூடாது. அவர்களைச் சீர் திருத்தி யாகணும். அவன் புருஷன். அவன் கோபித்துக் கொண்டால்கூடத் தணிந்து போக வேண்டுமென்று கோமளத்துக்குப் புத்திமதி சொல்கிறேன். அவனிடமும்

கோபத்தை விட்டுவிடும்படி சொல்லிப் பார்க்கிறேன்" என்றாள் ஜானகி அம்மாள்.

"ஜானகி! அதனால் எல்லாம் ஒரு பிரயோசனமும் ஏற்படாது. நீ சொன்னதற்காக இரண்டுநாள் பேசாதிருப்பா. அப்புறம் வழக்கம்போல் சண்டை ஆரம்பித்துவிடும்" என்றார் சிவசாமி.

"வாஸ்தவந்தான். என்ன இருந்தாலும் ராமு கொஞ்சம் முன்கோபக்காரன். கோபத்துக்கு அவன் உங்களைக் கொண்டிருக்கிறான்."

"என்னை வம்புக் கிழுக்காதே!" என்று சிவசாமி எச்சரித்துவிட்டு, "இவர்கள் சண்டையை நிறுத்த எனக்கு ஒரு வழி தோன்றுகிறது" என்றார்.

"என்ன?"

"இவர்களுக்குச் சண்டையில் என்றென்றைக்கும் வெறுப்பு ஏற்படும்படி செய்துவிட வேண்டும். அதற்காக நீயும் நானும்........"

"இந்த வீட்டைவிட்டு எங்கேயாவது போயிருக்க வேண்டுமா?"

"நாம் ஓரிடத்துக்கும் போகவேண்டியதில்லை."

"பின்னே?"

"நாம் இரண்டு பேரும் அவர்களைப் போலவே சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்" என்றார் சிவசாமி.

இதைக் கேட்ட ஜானகி அம்மாள் ஆச்சரியத்துடன் "அவர்களுக்காக நாம் சண்டை போட்டுக் கொள்ளவாவது? பைத்தியக்காரத் தனமான்னு இருக்கு."

"சண்டை யென்றால் நிஜச் சண்டையா? விளையாட்டுச் சண்டைபோட்டுக்கொள்ளலாம்."

"ஊஹூம். விளையாட்டுக்குக்கூட உங்களோடு சண்டைபோட என் மனசு ஒருநாளும் கேட்காது."

"அப்படிச் சொல்லாதே! ஒரு நாலைந்து நாளைக்குச் சண்டை போட்டுக்கொள்வோமே, என்ன தலை முழுகிப்போய்விடப் போகிறது? தமாஷாய்ப் பொழுது போகும்" என்று சிவசாமிசொல்லவே ஜானகி அந்த ஏற்பாட்டுக்குச் சம்மதித்தாள்.

ஆனால் முதல் முதல் எப்படிச்சண்டையை ஆரம்பிப்பது? இதைப்பற்றிப் பெரியவர்களிருவரும் தீவிரமாய் யோசனை செய்துகொண்டிருந்தனர். ஜானகிக்கு எத்தனையோ வழிகள்தோன்றின. இருந்தாலும் 'அவர்' முதலில் ஆரம்பிக்கட்டும், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்தாள். சிவசாமி எவ்வளவோ யோசனை செய்து பார்த்தும் அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. முதல் நாள் கழிந்தது. இரண்டாவது நாள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த போதுதான் அவருக்குச் சண்டைபோட சந்தர்ப்பம் ஏற்பட்டது. சாப்பிட்டுக் கொண்டி

ருந்தவர் திடீரென்று இலையில் பரிமாறியிருந்த சாதத்தை உற்றுக் கவனிக்கத் தொடங்கினர்.

"என்ன அப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் ?" என்று ஜானகி கேட்டாள்.

சிவசாமி மிகவும் சிரமப்பட்டுச் சாதத்திலிருந்து ஒரு சிறிய கல்லைப் பொறுக்கி எடுத்தார். அதை எடுத்துத் தன் மனைவியிடம் காண்பித்து "இது என்ன ?" என்றார்.

"நீங்கள்தான் சொல்லுங்களேன்."

"இது கல். இப்படிக் கல்லையும் கட்டியையும் போட்டுச் சமைத்தால் என் உடம்பு என்னத்திற்கு ஆகும்? நேற்றெல்லாம் வயிற்றை வலித்ததற்குக் காரணம் இப்போது தெரிகிறது" என்றார் சிவசாமி.

"இன்றைக்குக் கல் அகப்பட்டால் நேற்றைக்கு வயிற்றை வலிப்பானேன்? இத்தனூண்டு கல்லுக்குப் பிரமாதப் படுத்துகிறீர்களே!" என்றாள் ஜானகி.

"இத்தனூண்டு கல்லா! அப்படியானல் இனிமேல் பெரிய பாறாங்கல்லாகப் பார்த்துப் போடு!"

"போடுகிறேன். ஒரு வண்டியிலே நிறைய கல் கொண்டுவந்து போடச்சொல்லுங்கோ."

"என்ன வாய் அதிகமாகிறது ?"

"எனக்கு எப்போதும் இருக்கிற வாய் தான் இருக்கு" என்று ஜானகி நிதானமாகக் கூறித் தன் வாயையும் திறந்து காண்பித்தாள்.

“எனக்கு இப்போ வரகோபத்திலே.......” என்று சிவசாமி இலையிலிருந்த சாதத்தை ஒதுக்கிவிட்டு எழுந்திருக்கப் போனுர். ஆனுல் அவர் அரை வயிற்றுடன் எழுந்திருக்க விரும்ப வில்லை. தவிர, தாம் விளையாட்டுக்காகச் சண்டை போடுவதும் ஞாபகம் வரவே கோபத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு நன்ருகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தார்.

ராமநாதனும் கோமளமும் பெரியவர்கள் சச்சரவிட்டுக் கொள்வதைப் பார்த்து ஆச்சரி யப்பட்டனர். ராமநாதனுக்கு ஒன்றுமே புரிய வில்லை. ஏனெனில் அவனுக்கு விவரம் தெரிந் ததிலிருந்து இது வரையில் அவன் தன் பெற் ரேர்கள் சண்டைபோட்டுக் கொண்டு பார்த் ததே இல்லை.

சிவசாமியும் ஜானகியும் தங்கள் ஏற்பாட் டின்படி தினம் குறைந்தது இரண்டு தடவை யாவது சண்டை போட்டுக்கொண்டு வந்தார் கள். அப்பொழுது ஜானகி பேசுவதையும் நடந்துகொள்வதையும் பார்க்கும்போது “நம்ம அம்மாவா இப்படிச் செய்கிருள்!” என்று ராமநாதனுக்குத் தோன்றும்.

பெரியவர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது முதல் அவன் தன் மனைவியிடம் ஒரு மாறுத லைக் கவனித்து வந்தான். கோமளம் இப் பொழுதெல்லாம் அவன் கோபமாய்ப் பேசும் போது பதிலுக்குப் பதில் சொல்லிச் சண்

டையை வளர்த்திக்கொண் டிருப்பதில்லை. எதற்கும் சிரித்துக்கொண்டே பதில் சொல்ல ஆரம்பித்தாள். இதன் பயனாய் அவன்கூட அவளுடன் அநாவசியமாய்ச் சச்சரவிடுவதைத் தன்னை யறியாமலே குறைத்துக்கொண்டு வந்தான்.

ஒரு நாள் அவன் வெளியில் போவதற்காகச் சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டு கிளம்பினான். அப்பொழுது சட்டையில் பொத்தானில்லாதது தெரிந்து தேடிப்பார்த்தான். அகப்படவில்லை. அவனையும் மீறி பழைய கோபம் வந்துவிட்டது.

“இதெல்லாம் பார்த்து வைக்காமல் என்ன பண்ணுகிறாயோ தெரியவில்லை!” என்று கோமளத்தைக் கோபித்துக்கொண்டு சட்டையைக் கழற்றி வீசி எறிந்தான்.

அவன் செய்ததைக் கவனித்துக்கொண்டிருந்த சிவசாமி, பிள்ளைக்குப் புத்திபுகட்ட இதுதான் நல்ல சந்தர்ப்பமென்று எண்ணி “ஜானகி!” என்று உரக்கக் கூப்பிட்டார்.

“ஊம்!” என்று பதில் வந்தது.

“என்ன ஊம்! எருமைமாடு மாதிரி.”

“உங்காத்து எருமைமாடு இப்படித்தான் கத்துமாக்கும்?”

“சரி, வாயை மூடு! என் சட்டைப்பையிலே ஏன் கர்சீப் எடுத்து வைக்கவில்லை? எத்தனை நாள் உனக்குச் சொல்கிறது!”

"என்ன சீப் ?"

"சுத்த மண்டு! ஒரு இங்கிலீஷ் வார்த்தைக்குக்கூட அர்த்தம் தெரிகிறதில்லை. கைக்குட்டையை ஏன் எடுத்து வைக்கவில்லை என்று கேட்கிறேன்."

"எனக்கு வேறு வேலை கிடையாதாக்கும்? இதையெல்லாம் எடுத்துவைத்துக் கொண்டிருந்தால் யார் சமையல் செய்கிறது ? சமையல்காரன் வைத்திருக்கிறீர்களா ?"

"முன்னப் பின்னே பழக்கமிருந்தான்னு தெரியப் போகிறது ? சுத்தப் பட்டிக்காடு. உங்காத்திலே வயல்வெளிக்குப் போகிறதற்கு யார் கைக்குட்டை யெடுத்துக்கொண்டு போயிருக்கப் போரு ?" என்ரூர் சிவசாமி.

அவ்வளவுதான், வந்தது ஆபத்து.

"நாங்கள் எல்லாம் நாகரிகமற்றவாள்! பட்டிக்காட்டுப் பேர்வழிகள். எங்காத்திலே ஒருத்தரும் கைக்குட்டையே பார்த்ததில்லை. அப்படிப்பட்ட குடும்பத்திலே வந்து தெரியாத்தனமாய் என்னைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டீர்கள். என்னல் இனிமேல் உங்களுக்குக் கஷ்டம் வேண்டியதில்லை" என்று சொல்லி 'ஒ' வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

ராமநாதனும் கோமளமும் அவளை எவ்வளவோ சமாதானப்படுத்திப் பார்த்தார்கள். ஆனல் அழுகை அதிகமாயிற்று.

சிவசாமிக்கோ பரம சந்தோஷம். தன் மனைவி இவ்வளவு நன்றாக நாடகம் நடிப்பதைக் கண்டு அவர் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கையில் ஜானகி உள்ளேபோய் ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தாள்.

"எதற்காகப் பெட்டி?" என்று கேட்டார் சிவசாமி.

"எதற்காகவா? பட்டிக்காட்டு மனுஷாள் சகவாசம் உங்களுக்கு வேண்டாம். நான் எங்க ஊருக்குப் போகிறேன். நன்றாக இங்கிலீஷ் கற்றுக்கொண்டு, கைக் குட்டையைப் பற்றித் தெரிந்து கொண்டு அப்புறம் வந்து சேருகிறேன்" என்றாள்.

சிவசாமி இதைக் கேட்டுத் திகைத்துப் போனார். அப்பொழுது பக்கத்தில் ராமுவும் கோமளமும் இல்லாதிருக்கவே "ஜானகி! நாம் விளையாட்டுக்கோசரம் சண்டை போட்டுக் கறோம்" என்று இரகசியமாய்ச் சொன்னார்.

ஆனால் ஜானகி அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவளாய்ச் சில புடவை துணி மணிகளைச் சுருட்டிப் பெட்டியில் வைக்க ஆரம்பித்தாள்.

"மறந்துபோய் விட்டாயா? **நாம் விளையாட்டுக்கோசரம் சண்டை போட்டுக் கொள்கிறோம். நாம் விளையாட்டுக்கோசரம் சண்டை போட்டுக் கொள்கிறோம்"** என்று இரண்டு மூன்று தடவை சொன்னார்.

அவர் இப்படிச் சொல்லச் சொல்ல அவள் கோபம் இன்னும் அதிகமாயிற்று. "விளையாட்டாவது, வினையாவது! எங்காத்தை அவமானப் படுத்தவேண்டும் என்கிறதற்காகவே நீங்கள் இந்த ஏற்பாடு பண்ணி யிருக்கேள்" என்ருள்.

அப்பொழுது அங்கே வந்த கோமளம் "இல்லே மாமி! நிஜமாகவே விளையாட்டுச் சண்டைதான்" என்று ஜானகி அம்மாள் காதில் ரகசியமாய்க் கூறினுள்.

கோமளமே அப்படிச் சொன்னதைக் கேட்டபோதுதான் ஜானகிக்குக் கோபம் எல்லாம் பறந்துபோய்த் தானும் தன் கணவனும் சண்டைபோட ஏற்பாடு செய்து கொண்டது ஞாபகம் வந்தது.

"உனக்கு இந்தச் சண்டை எல்லாம் விளையாட்டு என்று எப்படித்தெரியும்?" என்று தன் நாட்டுப்பெண்ணைக் கேட்டாள்.

"ஒருநாள் அவர் கோபத்திலே டம்ளரை ஜலத்தோடு வீசி எறிந்தாரே, அன்றைக்கு மாமாவும் நீங்களும் பேசிக்கொண்டிருந்ததை நான் அகஸ்மாத்தாகக் கேட்டேன். நீங்கள் எங்களைச் சீர்திருத்துவதற்காக விளையாட்டுக்காகச் சண்டை போட்டுக்கொள்ளப் போவது தெரிந்தது. அதை நான் உங்கள் பிள்ளையிடம் கூடச் சொல்லவில்லை. ஆனல் நான் மட்டும் சரியாக நடந்து வந்தேன். அதிலிருந்து எங்க

ளுக்குள் அநேகமாகச் சண்டை நின்று போய் விட்டது என்று சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கிறேன். அப்படியிருக்க நீங்களே வந்து........"

"இல்லை. கோமளம்! நீயே சொல்லு. பிறந்த வீட்டைப்பற்றிப் பரிகாசம் பண்ணினல் ஒரு பொம்மனுட்டிக்குக் கோபம் வருமா, வராதா?" என்று கேட்டாள் ஜானகி.

"கட்டாயம் வரும்" என்ருள் கோமளம்.

நடக்காத கலியாணம்!

ஓரே ஒரு ஊரில் தங்கமய்யர் என்று ஒருவர் இருந்தார். அவரும் அவரது தர்ம பத்தினி சுவர்ணம்பாளும் தங்களுக்கு ஐந்து பெண் குழந்தைகள் பிறக்கவேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். கருணை வள்ளலாகிய கடவுள், அவர்களுடைய வேண்டுதலுக்கு இணங்கி ஒன்று கூடச் சேர்த்து வள்ளிசாக அரை டஜன் பெண் குழந்தைகளை அவர்களுக்கு அனுக்ரஹித்தார்.

இந்தக் குழந்தைகள், எந்தவித வியாதியுமின்றி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தன.

தமது முதல் ஐந்து பெண்களையும் கலியாணம் செய்து கொடுக்கத் தங்கமய்யர் சிரமப்படவில்லை. கடைக்குட்டி கனகத்துக்கும் இந்த வருஷம் கலியாணம் நடந்தேறிவிட்டது. அவள் விவாகம் இன்னும் சுலபமாக முடிந்ததென்றே சொல்லவேண்டும்.

தங்கமய்யர் வசித்த ஊரில் வியாக்கிரம்

அய்யர் என்ற அழகான பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவருக்கு நரசிம்மன் என்று ஒரு பையன் உண்டு. ஒருநாள் மத்தியானம் அவன் வெளியில் போய்விட்டு வீடு திரும்பிய போது தன் எதிரில் ஒரு பெண் புஸ்தகமும் கையுமாய் வருவதைக் கண்டான். அவள் இவன் சமீபம் வந்தபோது ஒரு துரும்பு தடுக்கிக் கீழே விழுந்தாள். எதிரில் ஒரு வாலிபன் வருவதைக் கண்டதும் அவள் வெட்கப்பட்டு எழுந்தாள். அந்தச்சமயம் நரசிம்மனது இரண்டு கண்களும் அந்தப் பெண்ணுடைய ஒன்றரைக் கண்களும் சந்தித்தன. ஆனல் அவர்கள் ஒன்றும் பேசிக் கொள்ளாமல் தத்தம் வழியே சென்றனர்.

பயித்தியம் பிடித்தவனைப்போல் நேரே வீடு சென்ருன் நரசிம்மன். தோட்டத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த தந்தையிடம் போய் "அப்பா! நான் வழியில் ஓர் அழகான பெண்ணைப் பார்த்தேன். துரும்பு தடுக்குவது கூடப் பொறுக்க மாட்டாமல் கீழே விழும்படி அப்படிக் கொடிபோலிருக்கிருள். அவளுடைய மேடான நெற்றியைப் பார்க்கும்போது உயர்ந்த புத்தியுள்ளவள் என்று தோன்றுகிறது. அவளுடைய கண்களை நீங்கள் அதிர்ஷ்டக் கண்களென்று சொல்வீர்கள். மூன்று வருஷமாக வேலை அகப்படாமல் தவிக்கும் எனக்கு அந்தக் கண்களின் அதிர்ஷ்டத்தினல் நல்ல வேலை கிடைத்தாலும் கிடைக்கும்.

அவள் தெற்குத் தெரு தங்கமய்யர் பெண் போலிருக்கிறது. அப்பா! அவள் கீழே விழுந்த பிறகு என்னைப் பார்த்துக்கொண்டே எழுந்தபோது ஏதோ ஒரு விதமான சக்தி என் உடலுக்குள் ஊடுருவிப் பாய்ந்தது. அவள்மீது நான் காதல் கொண்டுவிட்டேன். அப்பா, அந்தக் கண்ணாடிக் கட்டழகியைத்தான் தாங்கள் எனக்கு விவாகம் செய்து வைக்கவேண்டும். இல்லாவிட்டால் நான் என்ன பண்ணுவேனோ தெரியாது'' என்றான்.

''நச்சு! நீ ஏதாவது அப்படிப் பண்ணி விடாதே. அந்தப் பெண்ணை உனக்குக் கலியாணம் செய்து வைத்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்'' என்று வியாக்கிரம் அவனுக்குத் தைரியம் கூறினார்.

''அதற்காக நீங்கள் முழுதும் ஸ்நானம் பண்ணாமல் கிளம்பி விடாதேயுங்கள்'' என்று நரசிம்மன் கேட்டுக்கொண்டான்.

அதே சமயம் கனகம் தன் வீட்டில் தன் தந்தையிடம் சொன்னாள் :—

''அப்பா! நான் பள்ளிக்கூடத்திலிருந்து அகத்துக்கு வருகிறபோது ஒருத்தரைப் பார்த்தேன். அப்பொழுது ஒரு துரும்பு தடுக்கி நான் கீழே விழுந்ததைப் பார்த்தால் அவருக்கு நமஸ்காரம் செய்வதாகவே தோன்றியது. அவர் ரொம்பவும் கெட்டிக்காரரா யிருப்பார் போலிருக்கிறது. ஏனென்றால் அவருக்கு மற்ற

வர்களைப்போல ஒன்றுமட்டு மல்ல, இரட்டை மண்டை இருக்கிறது. அவரைப் பார்த்தது முதல் என் மனதை என்னமோ பண்ணு கிறது. நான் அவருக்குத்தான் வாழ்க்கைப் படுவேன். இல்லாவிட்டால்..................” என்ருள்.

“கனகம்! நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் இன்றைக்கே பேசி ஏற்பாடு செய்கிறேன். இந்த விஷயம் முடிகிற வரையில் எனக்குத் தூக்கமே வராது” என்ருர் தங்கமய்யர்.

“அப்பா! நீங்கள் ஒருநாள் இரண்டு நாள் முந்திப் பிந்தி நிச்சயம் பண்ணிலுைம் பாதகமில்லே. ஆனல் அதற்காகத் தங்கள் தூக்கத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்” என்று கனகம் கெஞ்சினுள்.

மேற்படி சம்பாஷணைகள் நடந்த தினமன்று மாலே ஆறேமுக்கால் மணிக்கு வியாக்கிரமய்யர் ஏதோ வைத்ததை எடுக்கப்போவது போல் தெருவில் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது எதிரில் வந்த ஒருவருடன் மோதிக்கொண்டார். வியாக்கிரத்துக்குக் கோபம் வந்து விட்டது.

“என்னங்காணும்! நான் தங்கமய்யர் அகத்துக்கு என் பிள்ளைக்கு வரன் பார்க்கப் போகிறது தெரியாமல் இப்படி வந்து முட்டிக் கொள்கிறீரே!” என்று கேட்டார்.

"யார் நீங்கள். உங்கள் பையன் வந்து....
........இரட்டை மண்டை........"

"ஆமாம்! ஆமாம்" என்றார் வியாக்கிரம்.

"அப்படியானால் ரொம்ப பேஷாய் போச்சு. நான் தான் தங்கம். குட்டி உங்கள் பையனைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள். ஆனால் யார், எந்த அகம் என்று தெரியவில்லை. எதற்கும் நாலு தெருவில் தேடிப்பார்த்து விட்டு வரலாமென்று கிளம்பினேன்."

வியாக்கிரமய்யர் இந்தப் பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்டு "எல்லாம் பகவான் செயல்! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாச்சு" என்று சொல்லி ஒரு புகையிலைத் துண்டை வாயில் அடைத்துக்கொண்டார். "குழந்தைகள் இஷ்டப்படி கலியாணத்தைப் பண்ணி வைத்து விட வேண்டியது. அவர்கள் ஒருத்தர் மேல் ஒருத்தர் ஆசையா யிருக்கும்போது நாம் குறுக்கே நிற்கக்கூடாது" என்று கூறினார்.

"நாளைக்கு அகமுடையான்—பெண்டாட்டி யாய் இருப்பது அவர்களா, நாமா"? என்றார் தங்கம்.

"சரியான வார்த்தை."

"எனக்கு இந்தச் சம்பந்தம் ரொம்பப் பிடித்திருக்கிறது. இப்பொழுது என் பின்னால் வீட்டுக்கு வந்தாலும் பெண்ணை அனுப்பி விடுகிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் தங்கம்.

பிறகு இருவரும் தெருவில் காலியாயிருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, கலியாண விவரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந் தனர். முட்டிக்கொண்டதால் சிறிது புடைத் திருந்த நெற்றியைத் தங்கமய்யர் தடவி விட்டுக் கொண்டே, "ஆனல் ஒரு விஷயம். முதலி லேயே உள்ளதைச் சொல்லி விடுகிறேன். குட்டி ஜாதகத்திலே செவ்வாய் தோஷமிருக் கிறது. இன்னும் என்னென்னமோ தோஷங் கள் இருக்கின்றனவாம்" என்ருர்.

"இதுதானு! என்னமோ பிரமாதமாகச் சொல்லப்போகிறீரென்று பார்த்தேன். தோஷம் இருந்தால் அதுமட்டில் ஜாதகத் தில் இருந்துவிட்டுப் போகிறது. நாம் நாளைக்கே கலியாணம் நிச்சயம் செய்துவிடலாம்" என்று வியாக்கிரம் அய்யர் முடிவு கூறினர்.

பிறகு இருவரும் தத்தம் வீடு சென்ருர்கள்.

மறு நாள் வியாக்கிரமய்யர், அவர் தம்பி நாகேசுவரன், அவர் மனைவி சுந்தரி முதலிய வர்கள் தங்கமய்யர் வீட்டுக்குக் கலியாணம் நிச்சயம் செய்ய வந்தனர். ஆனல் கனகமும் அவள் தாயார் சுவர்ணம்பாளும் அன்று வழக் கம்போலக் கலகலப்பாக இல்லை. ஒரு வேளை கனகத்துக்கு மனது மாறிவிட்டதோ என்று தங்கமய்யர் சந்தேகப்பட்டார்.

"கனகம்! ஏன் இப்படி யிருக்கிருய்?" என்று கேட்டார்.

"அப்பா! கலியாணம் நிச்சயம் பண்ணுவதற்குமுன் நான் சொல்கிற விஷயத்தைப் பற்றியும் ஒரு முடிவு பண்ணிவிட வேண்டியது" என்றாள் அவள்.

"என்ன செய்யணும்? நகை தானே?"

"நகையைக் கொண்டு உடைப்பில் போடுங்கள். நான் சொல்லுவது மாமியாரைப் பற்றி. அவர் என்னைத் தனிக் குடித்தனம் பண்ணப் போகச் சொல்லவே கூடாது. அப்படி நான் இந்த ஜன்மத்தில் என்னை மீறிப் போவதாயிருந்தாலும் அவர் என்னிடமே வந்து இருக்க வேண்டும். 'அங்கே போயிருந்தேன், இங்கே போயிருந்தேன்' என்று சால்ஜாப்பு சொல்லக் கூடாது. அவர் அகத்தில் இல்லாமல் இருந்தால் எனக்குக் கலியாணம் பண்ணிக் கொண்டது போலவே இராது" என்றாள்.

இதெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு வந்த சுந்தரி, "பயப்படாதே. என்னாலே முடிஞ்ச மட்டும் உன்னை விட்டுப் பிரியவில்லை" என்று வாக்குக் கொடுத்தாள். இந்த நல்வாக்கைக் கேட்டதும் கனகத்தின் முகம் மலர்ந்தது.

சுவர்ணம்பாள் மட்டும் முன்போலவே இருந்ததைக் கண்டு, "ஏன் உங்களுக்கு உடம்பு சரியாயில்லையா?" என்று சுந்தரி அவளை விசாரித்தாள்.

"ஆமாம்! நீங்கள் சொன்னதில் குட்டி கவலை பாதிதானே தீர்ந்தது? அவள் முழுக்க

சந்தோஷமா யிருக்கவேண்டுமானல் நாத்த ஞரும் வருஷத்திலே ஏழு மாஸமாவது அவள் வீட்டில் வந்திருக்கணும்" என்ருள்.

"நான் அதற்கும் ஏற்பாடு பண்ணுகிறேன். நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை" என்று சுந்தரி சொல்லவே சுவர்ணம்பாள் பரம திருப்தி யடைந்தாள்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த போது நாகேசுவரன், "எங்கே, அண்ணவைக் காணேம்?" என்று கேட்டுக் கொண்டே வந் தான். அவர் போன இடம் ஒருவருக்கும் தெரியவில்லை. நாகேசுவரன் கவலையுடன் தெரு வில் சென்று தேடியபோது ஏழெட்டு வீட்டுக் கப்புறமுள்ள ஒரு வீட்டுத் திண்ணையில் அவர் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

"ஏன் அண்ண, இங்கே வந்து உட்கார்ந் திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"போடா போ!"

"விஷயத்தைச் சொல்லுங்களேன்."

"அந்தச் சம்பந்திப் பிராமணன் அரைப் பயித்தியம்போ லிருக்கிறது. கடைசியில் ஏதா வது எக்கச்சிக்கமாகப் பண்ணி விடுவாரோ வென்று பயமா யிருக்கிறது. கலியாணத்தில் அவரவர்கள் செலவை அவரவர்கள் செய்து கொள்வதென்று பேச்சு. குழந்தைக்கு அவ ரவர்கள் இஷ்டத்தைப் பொறுத்து நகை போடுவதென்றும் முடிவு செய்திருந்தோம்.

ஆனல் அந்த மனுஷர் சொன்னபடி செய்ய மாட்டார்போலிருக்கிறது. என்னைத் திருட்டுத் தனமாகப் பார்த்துக் கொண்டே இரும்புப் பெட்டியைத் திறந்து கரன்ஸி நோட்டுக் கட்டுகளை எண்ணிக் கொண்டிருந்தார். கலியாணம் நிச்சயம் பண்ண நாலுபேர் வந்திருக்கிறபோது அவர், 'இந்தாருங்கள்! ஏதோ என்னாலானது எதிர்ஜாமீன் நாலாயிரம் ரூபாய்!' என்று பணத்தைக் கொடுத்து என் மானத்தை வாங்கி விடுவார் போலிருக்கிறது. என் பிள்ளையை எத்தனையோ செலவு செய்து பி.ஏ. வரையில் படிக்க வைத்தேன். எனக்கு இன்னும் இரண்டு பெண் கலியாணத்துக்கு இருக்கிறது. அதற்காக நான் என் பிள்ளைக்கு எதிர் ஜாமீன் வாங்கி விடுவேனே?'' என்று சொல்லிப் பிரலாபித்தார்.

அப்படி ஒன்றும் நடக்காமல் பார்த்துக் கொள்வதாக நாகேசுவரன் அவருக்குத் தைரியம் சொல்லி அழைத்துக்கொண்டு போனன். அவன் தங்கமய்யரைத் தனியாகக் கூப்பிட்டுச் சென்று விஷயத்தைத் தெரிவித்தபோது அவர் பிரமித்துப் போய்விட்டார். தாம் ரகசியமாய்ச் செய்ய நினைத்திருந்தது வெளியாய் விட்டதைக்கண்டு ஆச்சரியம் அடைந்தார். சம்பந்திக்குக் கோபம் வராதிருப்பதற்காகத் தாம் எதிர் ஜாமீனகத் தம்பிடிகூடக் கொடுக்கவில்லை யென்று நாகேசுவரனிடம் சத்தியம்

செய்து கொடுத்தார். ஆனல் மனசில் மட்டும் "கலியாண மானதும் பணத்தைப் பையன் பேருக்கு பாங்கியில் கட்டிவிடுகிறேன் அப்பொழுது இவர்கள் என்ன பண்ணமுடியும்." என்று எண்ணிக்கொண்டார்.

கடைசியில் விவாகம் நிச்சயமாகி அதற்கு நாளும் குறிக்கப்பட்டது.

கலியாண தினத்தன்று காலையில் பிள்ளை தங்கியிருந்த வீட்டில் எல்லோரும் பரம திருப்தியுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

"ஸார்! நான் இது மாதிரி காப்பி என் ஆயுஸிலே குடித்ததில்லை. இந்தக் காப்பிக் கொட்டை எங்கே வாங்கினர் என்று விசாரிக்க வேண்டும்" என்று ஒருவர் சொன்னர்.

"அது கொஞ்சம் தண்ணிமாதிரிதான் இருந்தது. கறுப்பாகக்கூட இருந்தது. ஆனல் பாருங்கோ, நாக்கில் ஒட்டிக்கொண்டு விடமாட்டேனென்கிறது. யாரப்பா அது, இன்னெரு டம்ளர் காப்பி கொண்டுவா!"

"காப்பி கிடக்கட்டும். மல்லிகைப் பூவையும் தோற்கடிக்கும் அந்த இட்லியைச் சொல்லுங்கள்" என்ருர் மற்றொருவர்.

"அதை விடுங்கள். நாம் எத்தனையோ இடத்தில் ஜலம் சாப்பிடுகிறோம். இவர்கள் வீட்டுக் கிணற்று ஜலத்துக்கு ஒன்றும் ஈடாகாது" என்ருர் இன்னெருவர்.

இப்படி, தங்கமய்யர் வீட்டுக் கிணற்று

ஜலம் முதல் எல்லாவற்றையும் புகழ்ந்து கொண்டிருந்தபோது பையன் பரதேசக் கோலத்துடன் கிளம்பி விட்டான். அவன் காலில் பாதக்குறடு அணிந்து, மேலே சால்வை போர்த்திக் கொண்டு கையில் ஒரு மடிசஞ்சியுடன் நடந்து சென்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது. மடிசஞ்சியில் வழிப் பிரயாணத்துக்கு உபயோகமாகும்படி சத்துமா, பொருவிளங்காய் உருண்டை முதலி யன வைக்கப்பட்டிருந்தன.

நரசிம்மன் தங்கமய்யர் வீட்டு வாசல் பக்கத் தில் வந்ததும் அவர் வழியை மறித்து நின்று "நல்ல வேலை பண்ணுகிறீர்! நேற்று இராத் திரி நிச்சய தாம்பூலம் நடந்தபோது என் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதித்து விட்டு இப்பொழுது கிளம்பி விட் டீரே! இது அழகா?" என்றார்.

"மாப்பிள்ளை இப்படிப் போவது ஏமாற்று தல், நம்பிக்கைத் துரோகம் முதலிய ஸெக்ஷன் களின் கீழ்வரும்" என்றார் பக்கத்திலிருந்த ஒரு வக்கீல்.

"என்ன சொல்கிறீர்?" என்று சொல்லிப் பையன் வக்கீல் பக்கம் திரும்பினான். அந்தச் சமயம் பார்த்துத் தங்கமய்யர் மடிசஞ்சியைப் பிடுங்கி வைத்துக்கொண்டார்.

தன் வீட்டு மாடியில் நின்றுகொண்டு இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த கன

கம் ஒரு பெருமூச்சு விட்டாள். நரசிம்மன் தன் தகப்பனர் வார்த்தையையும் மீறிக் காசிக்குப் புறப்பட்டுவிட்டால் என்ன செய்வது? தானும் அவன்பின் போவதற்காக அவள் ஒரு மூட்டை கட்டி வைத்துக்கொண்டு தயாரா யிருந்தாள். ஆனல் அவன் பிரயாணத்தை நிறுத்திக்கொள் ளவே தானும் மூட்டையை எறிந்துவிட்டு மாலே யிடக் கீழே இறங்கி வந்தாள்.

மாலே மாற்றுதல், ஊஞ்சல் முதலியன ஆயின. மாங்கல்யதாரணம் நடப்பதற்கு ஐந்து நிமிஷமிருக்கும். அப்பொழுது பெண் வீட்டு சாஸ்திரிகளின் பக்கத்தி லமர்ந்திருந்த ஒரு குட்டிசாஸ்திரிகள் புது தினுஸாக ஒரு மந்திரம் சொல்லிக்கொண் டிருந்தார். உற்றுக் கேட்ட போது "மாங்கல்யம் மறக்காதேயும்" என்று மந்திரத்தோடு நடுவே நடுவே சொல்வது கேட்டது. பெரிய சாஸ்திரிகள் பல ஜோலிக் காரராகையால் தமக்கு ஞாபக மூட்ட இந்த மாதிரி ஏற்பாடு செய்துவைத் திருந்தார்.

மாங்கல்யதாரணம் ஆகவிருந்த சமயம் அங்கே கூடியிருந்த இஷ்டமித்திர பந்துக்கள் எல்லோரும் தும்மல் வராதிருப்பதற்காக ஒருவர் மூக்கை ஒருவர் பிடித்துக் கொண்டனர். பிறகு பலர் வெற்றிலேப் பாக்கு வாங்கிக்கொண்டு விருந்து சாப்பிடத் தத்தம் வீடு சென்றனர்.

விவாக தினத்தன்று பகல் விருந்திஞல் அஜீரணம் உண்டாகாதிருப்பதற்காகத் தங்க

மய்யர் இரவு போஜனத்துக்குப் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்திருந்தார். அந்தச் சாப்பாட்டைப் பற்றி ஊராரும் சம்பந்தி சுந்தரி அம்மாளும் நாளைக்கும் பெருமையாகச் சொல்லிக் கொள்கிருர்கள். அந்த வேப்பம் பூ ர்சத்தையும், மணத்தக்காளி வற்றலையும்போல் இது வரையில் எங்குமே அமைந்ததில்லையாம்.

காலையில் விவாகத்திற்குப் பிறகு சம்பந்திகள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது வியாக்கிரமய்யர், "கலியாணத்தின் முக்கிய அம்சம் என்னமோ ஆகிவிட்டது. முக்கியமான பந்து ஜனங்களும் வந்து விட்டுப் போய்விட்டார்கள். கலியாணத்தை இன்றுடன் நிறுத்திக் கொண்டு விடலாமே!" என்ருர்.

"பேஷாய்!" என்ருர் தங்கமய்யர்.

ஊர்வலத்தைப் பற்றிய பேச்சு எழுந்தபோது மோட்டார் வண்டியா, 'ஸாரட்'டா, ரிக்ஷாவா என்று பல வாகனங்களைப் பற்றி யோசனை செய்தார்கள். மாப்பிள்ளைக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. "வண்டிகளில் ஏறினல் யாருக்கு ஊர்வலம் என்று சந்தேகம் வந்து விடுகிறது. கலியாணத்துக்கு வந்திருப்பவர்களில் பாதிப் பேர் வண்டியில் ஏறி உட்கார்ந்து விடுகிருர்கள். எனக்கு ஒரே யடியாக உட்கார்ந்து உட்கார்ந்து கால் மரத்துப் போயிருக்கிறது. ஹாய்யாக நடந்தே ஊர்வலம் செல்லலாமே! நாலு பேர் நன்ருகப் பார்க்கும்படி

ஐந்து மணிக்கு நடத்தி விடலாமே" என்ருன் நரசிம்மன்.

சம்பந்தி அம்மாமார்கள் இருவரும் இதைக் கேட்டுப் புளகாங்கிதமடைந்தனர். பிள்ளை இஷ்டப்படியே ஊர்வலம் நடைபெற்றது.

பிறகு ஆசீர்வாதம் ஆயிற்று. ஒவ்வொரு வரும் அவரவர்கள் சக்திப் பிரகாரம் பெண் ணுக்கும் பிள்ளைக்கும் பரிசுகள் ஓதினர். அவற்றில் சில அம்சங்களை மட்டும் கீழே தந் திருக்கிறேன் :—

புஸ்தகக் கடைப் பொன்னம்பலம்—பதி விரதா மஹாத்மியக் கதைப் புத்தகம்.

தபாலாபீஸ் சேஷய்யர்—பிள்ளையின் விலாசம் அச்சடித்த கவர்க் கட்டு 1, ஒரு பாக் கெட் கொய்னு மாத்திரை.

டிரில் மாஸ்டர் தண்டபாணி—இரண்டு கர்லாக் கட்டைகள்.

மளிகைக் கடை மாதர்பூதம்—இரண்டு மணங்கு புளி.

மாமா முத்துசாமி அய்யர் தமது பேருக் கிருந்த நூறு ரூபாய் பிராமிஸரி நோட்டு ஒன்றை மருமகன் பேருக்கு 'மேடோவர்' செய்து ஓதினர். அந்தப் பணத்தை வசூல் செய்து விட்டால் பையன் மிகவும் சாமர்த்திய சாலி என்று அவர் ஒப்புக்கொள்ளத் தயாரா யிருந்தார்.

ஸினிமா ராணி

ஸினிமா நக்ஷத்திரம் சௌந்தர்ய குமாரி ஒரு பெரிய நிலைக் கண்ணாடிமுன் உட்கார்ந்து தன் அழகைப் பார்த்து வியந்து கொண்டிருந்தாள். அப்பொழுது அந்தக் குமாரி தன் தலையில் தோன்றிய ஒரு நரைமயிரைத் தள்ளிவிட்டு "ஹூம்!" என்று ஒரு பெருமூச்சு விட்டாள். உடனே "ஏக்கம்" என்ற வார்த்தை அவள் வாயிலிருந்து கிளம்பிற்று.

பிறகு உதட்டைக் கடித்துக்கொண்டு கண்ணைக் கசக்கிக் கொண்டாள். "துக்கம்" என்ற வார்த்தை புறப்பட்டது.

அடுத்தாற்போல் புருவத்தை நெரித்துக் கொண்டு உதட்டை விரல்களால் தடவிவிட்டுக் கொண்டாள். அதன் முடிவில் "ஆழ்ந்த யோசனை" என்று சொல்லிக்கொண்டாள்.

பிறகு அவளது வலது மூக்குத் துடித்தது. "நியாயமான கோபம்" என்று கூறினாள். இது மாதிரி, தான் செய்த ஒவ்வொரு காரியத்தைப்பற்றியும் ஒவ்வொன்று சொல்லிக் கொண்டே போனாள் :—

இடது மூக்குத் துடித்தது.

"காரணமற்ற கோபம்."

மூக்கு முழுதும் துடித்தது.

"பிரமாத கோபம்."

இரண்டு காதுகளும் அகன்டன.

"தாங்க முடியாத கோபம்."

கண்ணை மூடினுள்.

"சாந்தம்."

உதடுகள் அரும்பின.

"புன்னகை."

கடைசியாக "ஹஹ்ஹஹ்ஹா" என்று வாய்விட்டுச் சிரித்துவிட்டுப் "பரம சந்தோஷம்" என்று சொல்லிக்கொண்டாள்.

அவள் வாய்விட்டுச் சிரித்த மறு நிமிடம் தவசுப் பிள்ளை தம்புசாமி தன் கையிலிருந்த அரிவாள்மணையுடன் ஓடோடியும் வந்தான்.

"என்ன அம்மா! இப்படி நீங்களே சிரித்துக் கொள்கிறீங்களே? உடம்பு சரியாயில்லையா?" என்று கவலையுடன் கேட்டான். அப்பொழுது அவன் கவலையே உருவாய் இருந்தான். அதைச் சௌந்தர்ய குமாரி கவனித்தாள்.

"உடம்பும் இல்லை. ஒன்றுமில்லை. நான் முகபாவம் பயிற்சி செய்துகொண்டிருக்கிறேன். தாங்க முடியாத சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்வது எப்படி என்பதற்காகச் சிரித்துப் பார்த்தேன்" என்றுள்.

"சிரிப்பைக் கேட்டுப் பயந்து போய்விட்டேன் அம்மணி!" என்று அவன் சொன்ன போது அவன் முகத்தில் பயம் தத்ரூபமாகத் தோன்றிற்று.

"அட, உன் முகத்தில் பாவங்கள் எல்லாம் அப்படியே தெரிகின்றனவே!"

"நமக்கும் ஏதோ கொஞ்சங் கொஞ்சம் ஆக்ட் பண்ண வரும். டான்ஸ்கூட வரும். அம்மா! அரிவாள்மணை டான்ஸ் பண்ணட்டுமா?", என்று சொல்லிவிட்டு எஜமானியின் பதிலை எதிர்பார்க்காமலே நடனம் பண்ண ஆரம்பித்துவிட்டான்.

நடனம் ஆடினுன் வெகு நாகரிகமாகவே
அரிவாள் மணையைத் தூக்கிக் கொண்டு...

என்று, இந்த நடனத்துக்குப் பாட்டு வேறே. சௌந்தர்ய குமாரிக்கு எங்கே அரிவாள்மணை தன் தலைமேல் விழுந்து விடுமோ என்று பயம். மிகவும் சிரமப்பட்டு அவன் நடனத்தை நிறுத்தச் சொன்னுள்.

"நீ இவ்வளவு அருமையாக நடனம் செய்வாய் என்று எனக்கு இத்தனை நாளாய்த் தெரியாமல் போய்விட்டதே! நான் உன்னைப்பற்றி எங்க டைரக்டரிடம் சிபார்சு பண்ணுகிறேன்" என்று கூறிவிட்டு, "அப்பாடா!" என்று உடம்பை வளைத்து விட்டுக்கொண்டு பெருமூச்சு விட்டாள்.

"ஏன் அம்மா! உடம்பு வலியா?" என்று தம்புசாமி விசாரித்தான்.

"வலியா! பிராணன் போகிறது. இன்றைக்கு அந்தத் தர்பார் டான்ஸின்போது என் உயிரை வாங்கிவிட்டார்கள்."

"அந்த டான்ஸ் ஸீன் ஷூட்டிங்தான் ஆயிடுத்தே."

"ஆமாம். ஆனல் அது சரியாயில்லையாம். இன்றைக்கு இரண்டாந்தரம் ஒத்திகை நடந்தது. நான் எவ்வளவோ நன்ருக ஆடியும் சரியாயில்லை என்று சொல்லிவிட்டார்கள். எனக்குக் கோபம் வந்துவிட்டது. அப்புறம் எனக்குத் தோன்றியபடியெல்லாம் ஆடினேன். முதலில் இடது காலைத் தூக்கியாடினேன். பிறகு வலது காலைத் தூக்கி ஆடினேன். அப்படியும் எல்லாரும் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள்!"

"அப்புறம்?"

"கடைசியில் கண்டபடியெல்லாம் கூத்தாடத் தொடங்கினேன். ஒரே அமர்க்களம். 'பேஷ், பேஷ்' 'பலே, பலே' என்ற கோஷங்கள் எழுந்தன. சிலர் 'உஷ், உஷ்' என்று சீட்டி அடிக்கத் தொடங்கினர்கள். சிலர் தாங்கள் உட்கார்ந்த பெஞ்சியிலே என் நடனத்துக்குத் தகுந்தாற்போல் தாளம் போட்டார்கள். ஒருவர், நாற்காலியில் ஏறி நின்றுகொண்டு எனக்குப் போட்டியாக நடனம் செய்ய ஆரம்

பித்துவிட்டார். அப்பொழுதுதான் பட டைரக்டர், 'ஓ.கே.! இது பொது ஜனங்களுக்குப் பிடிக்கும்' என்று சொன்னர். அவர் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது. அவர் என்னிடம் வந்து, 'ரொம்ப ஸக்ஸஸ்புல்' என்றார். ஆனலும் தம்புசாமி, எனக்கு அப்படிக் கன்னபின்னவென்று நடனஞ் செய்ய மிகவும் வெட்கமா யிருந்தது.''

''உங்களுக்கே வெட்கமா யிருந்ததா! அப்படின்ன நடிக்க மாட்டேனென்று சொல்லி விடுகிறதுதானே?''

''சொல்ல முடியுமா? ஒப்பந்தத்திலே கையெழுத்து வாங்கி விடுகிறார்களே, அதிலிருந்து மீள முடியுமா?'' என்று சொல்லி ''ஹூம்'' என்று ஒரு பெருமூச்சு விட்டாள். பிறகு ''எனக்கு இதைப்பற்றிப் பேசினலே தலையை வலிக்கிறது. நல்லதாக ஒரு கப் காப்பி கொண்டு வா'' என்றாள்.

''இதோ!'' என்று தம்புசாமி ஓடிப் பத்து நிமிஷத்தில் காப்பி போட்டு எடுத்துக்கொண்டு வந்து ஒரு சிறிய மேஜைமீது வைத்தான்.

சௌந்தர்ய குமாரி காப்பியை எடுத்து முதல் வாய் சாப்பிட்டாள். அவள் வலது மூக்குத் துடித்தது. ''நன்றாய் இல்லையே!'' என்றாள்.

''நன்றா யில்லையா? இப்போ கறந்த பாலாச்சே? காப்பிப் பொடிகூட மத்தியானம் வாங்கியதுதான்'' என்றான்.

ஸினிமா ராணி செளந்தர்ய குமாரியின் இடது மூக்குத் துடித்தது. "காப்பி நன்ருய் இல்லையென்ருல் என்னென்னமோ சொல்கிருய்; மட்டமான காப்பிப் பொடி வாங்கினுப் போலிருக்கிறது" என்று கோபித்தாள்.

"மட்டப் பொடியா? முதல்தரமான "விந்தியா காப்பி'ப் பொடி யல்லவா வாங்கிப் போட்டிருக்கிறேன்" என்ருன்.

அவ்வளவுதான். செளந்தர்ய குமாரியின் மூக்கு முழுதும் துடிக்க ஆரம்பித்தது. காதுகள் இரண்டும் அகண்டன. (அவள் எப்பொழுதும் பாவத்துடன்தான் பேசுவாள்.) கையிலிருந்த காப்பியை எடுத்து வீசி எறிந்துவிட்டு "விந்தியா காப்பியாம்! அந்தப் பொடியை உன்னை யார் வாங்கச் சொன்னு! மொச்சக் கொட்டை வாசனை யல்லவா வருகிறது?" என்று கூச்சல் போட்டாள்.

தம்புசாமிக்கு இன்னது செய்வது என்று தெரியவில்லை. அவனுக்கும் முழு மூக்கும் துடிக்கத் தொடங்கியது. இருந்தாலும் நிதானப்படுத்திக்கொண்டு உள்ளே போய் ஒரு தினசரிப் பத்திரிகையை எடுத்து வந்தான். அதில் ஒரு மூலையில் செளந்தர்ய குமாரியின் படம் மாதிரி ஒன்று போட்டிருந்தது. அவளைவிடப் படம் எவ்வளவோ மடங்கு அழகாயிருந்தது. தம்புசாமி அந்தப் படம் இருந்த இடத்தில் கையை வைத்துக்கொண்டு " நான் இதிலிருப்பதைப்

படிக்கிறேன் கேளுங்கள்" என்று படத்தின் கீழிருந்ததைப் படிக்கலானன் :—

'**சிங்கார சக்கரவர்த்தி**,' '**தம்பிடிக்கு நாலு**,' '**பக்த சிகாமணி மிஸ் பூச்சிபாய், பி. ஏ.**,' '**எனக்கா கல்யாணம்?**' என்ற படங்களில் கதாநாயகியாய்த் திறம்பெற நடித்தவரும், ஈடு இணையற்ற தமிழ் நாட்டு சினிமா ராணியுமான செளந்தர்ய குமாரி சொல்லுகிறுர் :—

'நான் பிறந்தவுடனே என் பாட்டி '**விந்தியா**' காப்பி ஒரு டம்ளர் கொடு' என்று சொன்னளாம். அது முதல் இன்று வரையில் நான் விந்தியா காப்பியே சாப்பிட்டு வருகிறேன். மறு உலகத்திலும் அதையே சாப்பிடுவதாக நிச்சயித்திருக்கிறேன். விந்தியா காப்பிப் பொடியின் பிரத்தியேக வாசனைக்கு ஈடு, அதன் பிரத்தியேக வாசனையேதான்.

இப்படிக்கு
செளந்தர்ய குமாரி.'

படித்து முடித்ததும் "நீங்களே இப்படி சர்டிபிகேட் கொடுத்திருக்கிறீர்களே என்று தான் நான் விந்தியாபொடியை வாங்கினேன்" என்ருன் தம்புசாமி.

"உளருதே! என் படம் தினம் பத்திரிகையில் வருமே என்றல்லவா அதில் கையெழுத்துப் போட்டேன்? இனிமேல் அந்த விந்தியா மண்ணுங்கட்டியை வாங்கவே வாங்காதே" என்ருள் செளந்தர்ய குமாரி.

இதே சமயத்தில் விந்தியா கம்பெனியின் முதலாளி மாணிக்கம் நாயுடு தம் வீட்டில் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அங்கே வந்த அவர் நண்பர் "என்ன இப்படிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதாவது பண விஷயமா?" என்று விசாரித்தார்.

"எனக்கு என்றைக்கும் பணக்கஷ்டமே கிடையாது."

'பின்னே?"

"நேற்றுக் காப்பிக்கொட்டை வீசை 4—15—0 வீதம் விற்று விட்டேன்."

"விற்றால் என்ன?"

"பக்கத்துக் கடைக்காரன் ஐந்து ரூபாய்க்கு விற்றான். இப்படி ஏமாந்துபோய் விட்டோமே என்று இருக்கிறது......."

"இதற்கெல்லாம் கவலைப் படுவார்களா? நாளைக்கு இன்னும் இரண்டணாக் கூட வைத்து விற்று விட்டால் போகிறது. நாம் என்ன விலை விற்றாலும் கேட்கிறவா யார்!" என்று தைரியம் கூறினார். அதற்கப்புறம்தான் நாயுடுவுக்குச் சிறிது கவலை குறைந்தது.

"வாருங்கள்! ஏதாவது ஸினிமாவுக்குப் போய்விட்டு வரலாம். வியாபார விஷயத்தைக் கொஞ்சம் மறந்திருக்கலாம்" என்றார் நண்பர்.

"புதிதாக, நல்ல படம் ஏதாவது காண்பிக்கிறார்களா?"

"எனக்கா கல்யாணம் ?' என்ற படத்துக்குப் போகலாமா ?"

"அதிலே எந்த ஸ்டார் நடிக்கிறாள் ?"

"உங்களுக்குத் தெரியாதா ? உங்கள் விந்தியா காப்பிப் பொடிக்கு ஸர்டிபிகேட் கொடுத்திருக்கிறாளே, தமிழ் நாட்டு ஸினிமா ராணி செளந்தர்யகுமாரி—அவள்தான்."

"அந்தச் சனியன் நடிக்கிற படத்துக்கா வரச்சொல்கிறீர் ? அதன் மூஞ்சியும் மோறக் கட்டையும் !"

"அதென்ன அப்படிச் சொல்கிறீர் ? விளம்பரத்திலே பிரமாதப் படுத்திப் போட்டு விட்டு ?"

"போதுமே! அந்தப் போட்டோவைச் சரிப்படுத்திப் போடுவதற்குள் என் பிராணன் போய்விட்டது. மேலும், அப்போது அவள் நடித்த படம் எதுவும் நான் பார்த்துத் தொலைக்கவில்லை !"

"சரி, புதிசாக டார்ஸான் படம் வந்திருக்கிறது. அதில் கொரில்லாக்கள் நன்றாக ஆக்ட் பண்ணுகின்றனவாம் !"

"பேஷாய்ப் போச்சு! அந்தப் படத்தையே போய்ப் பார்க்கலாம் வாருங்கள்" என்று கிளம்பினார் மாணிக்கம் நாயுடு.

நாவல் வேண்டாம்

ராமு மற்றப் பையன்களைப் போல் அல்ல.

"அடே, படிக்கவேண்டாமடா! கொஞ்ச நேரம் வெளியில் போய் விளையாடிவிட்டு வாடா!" என்று அவன் தாய் தகப்பனர் கெஞ்சிக் கேட்கும்படி அவன் சதா சர்வகால மும் படித்துக்கொண் டிருப்பான். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் விஷமம் செய்யும் தங்கள் பிள்ளைகளுக்கு ராமுவை ஓர் உதாரண மாக எடுத்துக் காட்டு வார்கள். "நீங்களும் இருக்கிறீர்களே, உடனெடுத்த ராமுவைப் பாருங்கள். எடுத்த புஸ்தகத்தைக் கீழே வைக் கிறதுண்டா? அவனைப் பார்த்தாவது கற்றுக் கொள்ளுங்களேன்" என்று சொல்வது வழக்கம்.

எந்தப் புஸ்தகம் எடுக்கட்டுமே, ராமுவுக்கு முதலிலிருந்து கடைசி வரையில் தலைகீழ்ப் பாடந்தான். ஒரு சமயம் அவன் தமிழ்ப்பாட புத்தகத்தை எடுத்து, "டெக்ஸ்ட் புக் கமிட்டி யார் அங்கீகரித்தது. சங்கர வாசகம். சோணு சலம் கம்பெனியார் வெளியிட்டது. விலை அணு

பன்னிரண்டு. உரிமை பதிவு செய்யப்பட்டது'' என்று அட்டையிலிருந்தே நெட்டுருப்பண்ணத் தொடங்கியபோது அவன் தாயார் வந்தாள். "ஏண்டா கண்ணு! இப்படி மூச்சுவிடாமல் படித்தால் உடம்பு எதற்கு ஆகும்? இராத்திரி யெல்லாம் தலைவலி யென்று சொன்னுயே. பேசாமல் படுத்துக்கொண்டிரு. என் கண்ணல்லவா?'' என்று கெஞ்சினுள்.

ராமுவுக்குக் கோபம் வந்துவிட்டது. "இனிமேல் என்னைக் கண்ணு கிண்ணு என்று கூப்பிடக்கூடாது. எனக்குப் பத்து வயஸு ஆகவில்லையா?'' என்று சொல்லிப் பிரமாதமாகக் கோபித்துக்கொண்டான். வகுப்பில் எல்லாவற்றிலும் முதல் மார்க் வாங்கிப் பரிசுகளும் பெற்றிருந்த அவனைத் தாயார் இன்னும் குழந்தையாக மதித்துக் 'கண்ணு' என்றும், 'தங்கம்' என்றும் கூப்பிட்டால் கோபம் வராமல் என்ன செய்யும்? அந்தக் கோபம் இதுமாதிரி சமயங்களில் வராவிட்டால் பின் எப்பொழுதுதான் வருகிறது?

ஐந்தாவது பாரம் வரையில் ராமு மிக நன்ருய்ப் படித்து வந்தான். அவனுக்கு எதை எடுத்தாலும் நெட்டுருப் பண்ணும் சுபாவ மிருந்தாலுங்கூட விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளும் சக்தியும் இருந்தது. நல்ல புஸ்தகங்களைப் படிக்க வேண்டுமென்ற ஆசையும் வளர்ந்து வந்தது. பாடப்புத்தகத்தில் கம்பரின்பாட்டோ,

ஷேக்ஸ்பியரின் பாட்டோ வந்தால், தான் பெரிய வகுப்புகளுக்குப் போனதும் அவர்களுடைய நூல்களை முழுதும் படிப்பதென்று தீர்மானித்துக்கொள்வான்.

* * * *

ராமு எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு வந்துவிட்டான். அவன் அதுவரையில் படித்ததெல்லாம் படிப்பில் சேர்ந்ததில்லையே. அந்த வருஷம் எப்படியாவது பரீக்ஷை தேறினால் தானே காலேஜ் வாசற்படிகளில் காலைவைக்க முடியும்? இதற்காக அவன் பல நோட்ஸ் (அர்த்த) புத்தகங்கள் வாங்கினான். இங்கிலீஷ் புஸ்தகத்துக்கு நோட்ஸ், தமிழ்ப் பாடத்துக்கு நோட்ஸ், சரித்திரத்துக்கு நோட்ஸ், பூகோள சாஸ்திரத்துக்கு நோட்ஸ் என்று பாக்கியில்லாமல் வாங்கிப் படித்தான். போதாததற்கு வகுப்பு உபாத்தியாயர்களும் கத்தை கத்தையாக நோட்ஸ் சொல்லிப் பையன்களை எழுதிக்கொள்ளச் சொன்னார்கள். படிப்பதற்குப் பயப்படுபவன் ராமுவா! அவன் எல்லாவற்றையும் படித்து மூளையிலேற்றி வைத்திருந்தான்.

ராமு எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு வந்து நான்கைந்து மாதங்களாகி யிருக்கும். ஒரு நாள் அவன் வெகு நேரம்வரை சாப்பிட வராமல் படித்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவன் தந்தை அவனிடம் வந்தார். அவர் வருவதைக் கண்ட ராமு தன் கையிலிருந்த ஒரு புத்தகத்

தைத் துடையின்கீழ் ஒளித்து வைத்துக் கொண்டான்.

"சாப்பிடாமல் அப்படி என்ன படித்துக் கொண்டிருக்கிருய்?" என்று தந்தை கேட்டார்.

"ஒன்றுமில்லை, அப்பா! நான் வந்து...." என்று ராமு அவர் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் பதில் சொல்லிவிட்டுத் திறுதிறு வென்று விழித்தான்.

அவருக்கு உடனே சிறிது சந்தேகம் தோன்றி, "நீ இப்போது என்ன புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தாய்? எடு, பார்க்கலாம்" என்ருர்.

ராமு வேறுவழியில்லாமல்தான் ஒளித்து திருந்த புஸ்தகத்தை எடுத்துத் தலைகுனிந்த வண்ணம் அவரிடம் நீட்டினன். அதன் மேலட்டையிலிருந்த பெயரைப் பார்த்தபோது அவர் அடைந்த ஆச்சர்யத்துக்கு அளவில்லை. அது "நாட்டியக்காரியின் சுயசரிதம்" என்ற புஸ்தகம்.

படிப்பு விஷயத்தில் தன்னை யாரும் குறை சொல்லும்படி ராமு இதுவரை இருந்ததில்லை. ஆதலால் அவனது தந்தையும் அவனிடம் ரொம்பக் கடுமையாக இருக்க விரும்பாமல், "இனிமேல் இது மாதிரி அபத்தங்களைப் படிக்காதே" என்று எச்சரித்து விட்டுப் போனர்.

அளவுக்கு மீறிப் பாடப்புத்தகங்களைப் படித்ததன் பயனுக அவனுக்கு இப்பொழுது

இதுபோன்ற கதைகளைப் படிக்கவேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. நாளடைவில் அவன் காதல் ரசம் ததும்பும் நாவல்களையும், மர்மமும் திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த புத்தகங்களையும் படிக்கத் தொடங்கினன். அவனுக்கே இந்தமாறுதல் ஆச்சர்யமாயிருந்தது. தந்தைக்குத் தெரியாமல் அத்தகைய புஸ்தகங்களைச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் படித்து வந்தான்.

ராமுவின் தந்தைக்கு அவன் இப்படித் திருட்டுத்தனமாய்ப் படிப்பது தெரியாமலில்லை. இவ்வளவு காலமாக இல்லாமல் இப்பொழுது திடீரென்று அவனுக்குத் துப்பறியும் நாவல்கள் முதலியவற்றில் எப்படி ஆசை பிறந்திருக்கக்கூடும் என்று தீவிரமாக யோசிக்கலானர்.

இதற்காக அவர் தாமே துப்பறியும் வேலை செய்யும்படி யாயிற்று. ஒரு நாள் ராமு தூங்கிக் கொண்டிருந்தபோது அவனுடைய புஸ்தகப் பெட்டியைச் சோதனைசெய்து பார்த்தார். அதில் அவனுடைய பாட புத்தகங்களும் பத்துப் பதினைந்து 'நோட்ஸ்' புத்தகங்களும் மேலாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் அடியில் 'இருட்டறை மர்மம்', 'பதினைந்து காதலிகள்' முதலிய நாவல்கள் ஒளித்து வைக்கப் பட்டிருந்தன. அவர் புஸ்தகங்களை முன்போல் அடுக்கிவிட்டுப் போய்ப் படுத்துக் கொண்டார். இரவு முழுவதும் இதே சிந்தனை

யாயிருந்து ராமுவின் நாவல் படிப்பை நிறுத்த ஒரு வழி கண்டுபிடிக்க முயன்ருர். கண்டுபிடித்தும் விட்டார்.

சில தினங்கள் கழித்து ஒரு நாள் ராமு பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அவன் தந்தை அவனிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தார். ''ரயில்வே படுகொலை அல்லது துப்பறியும் சிசுபாலன்'' என்ற அந்த நாவலைப் பார்த்ததும் அவன் முகத்தில் அசடு தட்டியது. ஆனல் அவன் தந்தை சிரித்துக்கொண்டே, ''ராமு, இதை நன்ருய்ப் படித்து வை. நான் உன்னை இதில் கேள்விகள் கேட்கப் போகிறேன். நீ எல்லாவற்றிற்கும் சரியாகப் பதில் சொல்லவேண்டும். படிக்கிறதுதான் படிக்கிருய்; விஷயங்களை நன்ருகவாவது தெரிந்துகொள்ளேன்'' என்று அன்புடன் சொன்னர்.

அவர் பரிகாசம் பண்ணுகிருரோ என்று எண்ணி ராமு தயங்கி நின்ருன்.

''நான் இந்தப் புஸ்தகத்தைப் படித்துப் பார்த்து அத்தியாயம் அத்தியாயமாக அர்த்தம், குறிப்புகள் முதலியன இந்த நோட்டில் எழுதி வைத்திருக்கிறேன். இதையும் அத்துடன் சேர்த்துப் படி. ஞாயிற்றுக்கிழமையன்று இந்த நாவல் சம்மந்தமாகப் பரீக்ஷைவைக்கப்போகிறேன்'' என்று சொல்லி ஒரு பெரிய நோட்டையும் அவன் கையில் கொடுத்தார்.

ராமு அவற்றை வாங்கிக்கொண்டு சென்ருன். தன் தந்தை கண்டிப்பான பேர்வழி யென்றும், சொன்னபடி கேட்காவிட்டால் அவருக்குப் பிரமாதமாகக்கோபம் வந்துவிடும் என்றும் அவனுக்குத் தெரியும். ஆகையால் நாவலேயும், அதற்குத் தந்தை எழுதிக்கொடுத்த வியாக்யானத்தையும் நன்ருய்ப் படித்தான்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது. தகப்பனுர் ராமுவைக் கூப்பிட்டு அவன் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து, "இதில் கேள்விகள் எல்லாம் எழுதி யிருக்கிறேன். படித்துப் பார்த்து சரியாகப் பதில் எழுது" என்ருர்.

அதில் காணப்பட்ட கேள்விகளில் சில வருமாறு :—

(1) 'ரயில்' என்ற வார்த்தையின் வரலாறு என்ன ? ரயில் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது ?

(2) துப்பறியும் சிசுபாலன் நடை உடை பாவனேகளி லிருந்தும், அவன் செய்யும் காரியங்களி லிருந்தும் அவன் எந்த வருஷம், எந்த மாதம், எந்தத் தேதி பிறந்தானென்று கண்டு பிடிக்கவும்.

(3) 'துப்பு' என்ற பதத்தின் பல வித அர்த்தங்களேயும் மூன்று பக்கத்துக்குக் குறையாமல் எழுதவும்.

(4) இந்த நாவலும் கந்தபுராணமும் எந்தெந்த அம்சங்களில் ஒரே விதமா யிருக்கின்றன ? எந்தெந்த அம்சங்களில் வித்தியாசப்படுகின்றன ?

ராமுவினது தந்தை இதெல்லாவற்றையும் பற்றித் தாம் எழுதிய நோட்டில் குறிப்பிட்

டிருந்ததால் அவன் விடையளிக்கச் சிரமப்பட வில்லை. ஆனால் தன் தந்தை எதற்காகக் கஷ்டப்பட்டு நாவலுக்கு அர்த்தம், வியாக்யானம் முதலியன எழுதிக் கொடுத்துப் படிக்கச் சொன்னா ரென்றும், பள்ளிக்கூடத்தில் பரீக்ஷைக் கேள்விகள் கேட்பதுபோலக் கேட்டா ரென்றும் அவனுக்குத் தெரியவில்லை.

அவன் தந்தை அவன் எழுதிக்கொடுத்த விடைகளைப் படித்துவிட்டு "ரொம்ப நன்றாய் எழுதியிருக்கிறாயே" என்று மகிழ்ந்தார்.

அடுத்த வாரம் அவர் "மாயாபுரி மர்மம்" என்ற புத்தகம் வாங்கி வந்து அதற்கும் முன் போலவே 'நோட்ஸ்' எழுதிக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். முன்போல் பரீக்ஷையும் வைத்தார்.

அவர் மூன்றாவது தரம் நாவல் வாங்கக் கடைக்குப் போவதாகக் கிளம்பியபோது ராமு கண் கலங்க அவர் எதிரில் வந்து நின்றான்.

"அப்பா! நான் இனிமேல் சத்தியமாய் நாவலே படிப்பதில்லை. இனிமேல் எனக்கு ஒன்றும் வாங்கிக் கொடுக்கவேண்டாம்" என்று கெஞ்சினான்.

"அப்படிச் சொல்லு!"

"எதற்காக அப்பா இப்படிப் பரீட்சை வைத்தீர்கள்?" என்று கேட்டான்.

"எதற்காகவா? சொல்கிறேன். இத்தனை

நாளாய் இல்லாமல் திடீரென்று உனக்கு ஏன் நாவல்களில் ஆசைபோயிற்று என்று யோசனை செய்து பார்த்தேன். உன்பாட புத்தகங்களுக்கு எழுதி வெளியாக்கப்பட்டிருக்கும் ஏகப்பட்ட 'நோட்ஸ்'களைப் படித்தும், பரீக்ஷைக் கேள்விகளுக்குப் பதிலளித்தும் உனக்கு நல்ல புத்தகங்களை யெல்லாம் படிக்கும் ஆசை அடியோடு போய்விட்டது. இந்த ஆபத்துக்களெல்லாம் இல்லாத நாவல்களைப் படிப்பதில் திருப்தியடைந்தாய், ஆகையினால்தான் இப்படிச் செய்தேன் !'' என்றார்.

22 MAR 1945
MADRAS

இலக்கண விரோதம்!

ஒருநாள் எனக்குப் பொழுதே போகவில்லை. அதற்காக, சினிமா போகலாமா, கவி கட்டலாமா, எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாமா அல்லது ஹாஸ்யக் கட்டுரை எழுதலாமா, என்ன செய்யலாமென்று யோசனை பண்ணிப் பார்த்தேன். இது விஷயத்தில் சுலபமாக ஒரு முடிவுக்கு வரக்கூடவில்லை. ஆகவே, மேலும் தீவிரமாக யோசனை செய்து திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்து ஹாஸ்யக் கட்டுரை எழுதுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

ஆனால் ஹாஸ்யமாக எழுதுவது எப்படி? அதைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காகச் சில புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தேன். அவற்றுள் ஒன்றில், "ஹாஸ்யத்தை மனிதன் சிருஷ்டித்துவிட முடியாது; அது தானாகவே வரவேண்டும். சொல்லப்போனால் ஹாஸ்யமாக எழுதும் திறமை உதித்திருக்க வேண்டும். கவிஞன் மாதிரி ஹாஸ்ய எழுத்தாளனும் பிறக்கிறான். ஒருவன் எவ்வளவு முயன்றாலும்

ஹாஸ்யமாக எழுதிவிட முடியாது'' என்று போட்டிருந்தது.

"ஹாஸ்ய எழுத்தாளனும் **பிறக்கிறான்**'' என்ற அந்த மூன்று வார்த்தைகளும் என் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. அதிலும். 'பிறக்கிறான்' என்ற வார்த்தை ஒரு கடப்பாரையைப்போல் பதிந்துவிட்டது.

உடனே நான் வீட்டிலிருந்த பெட்டிகளை யெல்லாம் குடைந்து, என் குடும்ப ஜாதகப் புத்தகத்தைத் தேடி எடுத்து வந்தேன். அதைப் பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டே போனபோது, மனது திக் திக் என்று அடித்துக்கொண்டது. என் ஜாதகம் இருக்கிறதோ இல்லையோ என்ற பயம். நல்ல வேளையாக ஒரு பக்கத்தில் என் ஜாதகமும் எழுதப்பட்டிருந்தது. நான் பிறந்த வருஷம், மாதம், தேதி, கிழமை, திதி, நட்சத்திரம், லக்கினம் எல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் குறிப்பிட்டிருந்தார்கள். நான் பிறந்தேன் என்பதில் கொஞ்சங்கூடச் சந்தேகமே இல்லை.

ஆம்; நான் பிறந்தவன் தான்!

'ஹாஸ்ய எழுத்தாளன் பிறக்கிறான்.'' நானும் பிறந்திருக்கிறேன். ஆகவே நான் ஹாஸ்யமாக எழுத முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்துவிட்டது!

அடுத்த நிமிடமே நான் ஹாஸ்யக் கட்டுரை எழுதத் தொடங்கினேன், என்று சொல்ல வேண்டியதில்லை.

இவ்வாறு தொடங்கி நான் எழுதிவரும் கட்டுரைகளைப் பற்றிப் பலர் பலவிதமாக அபிப்பிராயப் படுகிறார்கள்.

வால்மீகி ராமாயணத்தைப் படித்துவிட்டு 'ஸ்ரீ ராமர் மீசை', 'சீதா தேவி என்ன புடவை கட்டிக்கொண்டாள்' என்ற 'ஆராய்ச்சிக் கட்டுரைகள்' எழுதியிருந்தேன். அவற்றைப் படித்த ஒரு பெண்மணி, "இது மாதிரி இன்னும் எழுதுவதா யிருந்தால் நான் இனிமேல் எதிர்வாதம் செய்வதையே விட்டு விடுகிறேன்" என்று கூறினாள். என் மனைவி அவற்றைப் படித்து இப்படிச் சந்தோஷப் படுவாளென்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

ஒரு நண்பர் ஒரு நாள் என்னிடம் கோபமாக வந்து, "ஐயா உம்மீது நஷ்ட ஈடுக்கு ஏன் தாவா செய்யக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணம் சொல்லும்" என்று கேட்டார். நான் பயந்து போய், "அப்படி நான் என்ன பண்ணிவிட்டேன்?" என்று கேட்டேன். அவர், "இன்னும் என்ன ஐயா பண்ணணும்? உம்முடைய கட்டுரைகளைப் படித்துச் சிரித்ததினால் விலாவெலும்பெல்லாம் சுளுக்கிக் கொண்டுவிட்டன. அதற்கு வைத்தியம் செய்து கொள்ளும் செலவை நீர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று சொல்லிச் சிரித்தார். அந்த மனிதர் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு போகும்போது, பத்து ரூபாயா அல்

லது நூறு ரூபாயா - எத்தனை கடன் வாங்கிக் கொண்டுபோனு ரென்று எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை.

எனது பழைய வாத்தியார் ஒருவர். "அட ராமசாமி! நான் உன் மணிக்கட்டில் அடித்துச் சரியாக வியாசம் எழுதும் முறையைச் சொல்லிக் கொடுத்த தெல்லாம் வீணுய்ப் போயிற்று. நீ எழுதியதைப் படித்தபோது உனக்கு ஏதோ உடம்பு சரியாக இல்லை என்றே தோன்றுகிறது. நல்ல வைத்தியராகப் பார்த்துச் சிகிச்சை செய்துகொள்" என்று எழுதியிருந்தார்.

என்னைப்போலக் கட்டுரைகள் எழுதும் நண்பர் ஒருவர், "தங்கள் கட்டுரைகளைப் படித்துப் பார்த்தேன். இன்னும் இரண்டு மூன்றுதரம் படித்துப் பார்க்கிறேன். சிரிப்பு வந்ததும் தந்தி அடிக்கிறேன்" என்று எழுதியிருந்தார்!

ஒரு விமர்சகர் எழுதியதைக் கீழே தந்திருக்கிறேன் :—

இந்தக் கட்டுரையின் முதல் வாக்கியத்தைப் படித்த மாத்திரத்திலேயே நாம் அதன் யோக்கியதையைப் பற்றி ஒருவாறு ஊகித்துக் கொண்டோம். உடனே படிப்பதை நிறுத்திவிட்டு நடுவில் ஒரு வரியைக் கவனித்த போது, நாம் ஊகித்தது சரியென்றே தோன்றிற்று. கடைசியில் ஒரு வார்த்தையை அகஸ்மாத்தாகப் பார்த்தபோது நமது சந்தேகம்

ஊர்ஜிதமாயிற்று. பிரஸ்தாபக் கட்டுரையைப் படிப்பதனுல் சிரிப்பு ஏற்படுகிறதா இல்லையா என்ற வாதத்தில் நாம் இப்பொழுது இறங்கப் போவதில்லை. சிரிப்பு ஏற்படுகிறதென்றே வைத்துக்கொண்டு பார்ப்போம். அப்படிப் பார்க்கும்போது, நாடு இருக்கும் நிலைமையில், மக்கள் இருக்கும் நிலைமையில், மாடுகள் இருக்கும் நிலைமையில், அமுக்கருக்கிழங்கு விற்கும் நிலைமையில், நாம் சிரிக்கவேண்டியது அவசியமா என்று நமது பலங்கொண்டமட்டும் பக்கத்தில் நிற்கும் பையனை நாலு அறை அறைந்து கேட்கிறேம். நாம் இந்தக் கட்டுரையில் ஒரு வாக்கியமும், ஒரு வரியும், ஒரு வார்த்தையும் பார்த்துவிட்ட மகா பாபத்திற்குப் பிராயச்சித்தஞ் செய்து கொள்வதற்காக நூற்றெட்டுமுறை அரிச்சந்திர நாடகம் மயான காண்டத்தைப் பார்ப்பதென்று பிரதிக்ஞை செய்து கொள்வதுடன் தற்கால சாந்தியாக பக்கத்திலிருக்கும் பையனை ஒரு கிள்ளுக்கிள்ளி அவன் அழுவதைக் கேட்டனுபவிக்கவும் தீர்மானித்திருக்கிறேம்.

இன்னெருவர் ஹாஸ்யக் கட்டுரைகளையும் கதைகளையும் விலைக்கு வாங்குபவர். அவர் எழுதிய கடிதத்தில், "ஐயா! தங்கள் கட்டுரைகளில் எந்த எந்த இடத்தில் எதற்காகச் சிரிக்க வேண்டும் என்பதற்குத் தகுந்த காரணங்களை எடுத்துக் கூறவும். அப்படிச் சிரிக்கும்போது

எந்த எந்த இடத்தில் எவ்வளவு அங்குலம் வாயைப் பிளக்கவேண்டும் என்பதற்கு ஒரு 'கிராப்' போட்டு அனுப்பவும்" என்று கோரியிருந்தார்.

இது மாதிரி பலதிறப்பட்ட அபிப்பிராயங்களைப் படித்துப் பெருமையடைவேன். ஏதோ என்னால் பலர் சந்தோஷமோ கோபமோ அடைகிறார்களே என்று எண்ணும்போதெல்லாம் ஆனந்தசாகரத்தில் ஆழ்ந்து விடுவேன். அதன் பயனாய் பலத்த ஜலதோஷம் ஏற்படுமே என்பதைக்கூட நான் லட்சியஞ் செய்வதில்லை.

ஆனால் சமீபத்தில் இதற்குமாறான நிலைமை ஏற்பட்டது. ஒரு நாள் நான் என் வீட்டில் பரம திருப்தியுடன் உட்கார்ந்திருந்த போது ஒருவர் அடிமேலடிவைத்து என் மேஜையண்டை வந்தார். அவர் உடம்பில் கோட்டும், தலையில் முண்டாசும், முகத்தில் கோபமும் துக்கமும் தரித்திருந்தார். அவர் கையில் ஒரு பெரிய தடியும், ஆறு விரல்களும் இருந்தன. அவர் தடியைப் பொத்தென்று மேஜைமீது வைத்துவிட்டு, என் முகத்தை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு சட்டைப் பையிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்தார். அதைப் பிரித்து அதிலிருந்த ஒரு கட்டுரையைக் காட்டி, "இதை நீர்தானே எழுதியது? சொல்லிவிடும்" என்று கேட்டார்.

“ஆம்” என்றேன்.

“தயவு செய்து இதைக் கொஞ்சம் படித்துக் காட்டும்” என்றார். நான் படித்தேன். படிக்கப் படிக்க அவர் முகத்தில் கோபம் அதிகமாயிற்று. நான் படித்தது வருமாறு:—

“கணபதியும் சோமுவும் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள். அவர்களுக்குள் எப்பொழுதாவது சில்லறை மனஸ்தாபம் ஏற்பட்டால் அதை ஏதோ ஒரு சின்ன அரிவாள், அல்லது விறகுக் கட்டையை உபயோகித்துத் தீர்த்துக்கொண்டு விடலாமென்றிருப்பவர்கள்.

“ஆனால் இந்த நண்பர்களின் மனைவிமார் இதற்கு நேர் விரோதமாய் இருந்தார்கள். திரிபுரசுந்தரமும் சண்பகமும் பிராண சிநேகிதிகள். இவர்கள் ஒற்றுமைக்கு ஒன்றிரண்டு உதாரணங்கள் சொல்லாமற் போனால் எனக்குத் தூக்கம் வராது. ஒருநாள் திரிபுரத்தின் பிள்ளை பழனி, சண்பகத்தின் எட்டாவது பிள்ளை கந்தனைப் பலமாக அடித்துவிட்டான். கந்தன் அழுது கொண்டேபோய்த் தன் தாயாரிடம் புகார் செய்தான். உடனே அவளுக்குப் பிரமாத கோபம் வந்து அத்தனையையும் தன் பிள்ளைமீது செலுத்தினாள். ‘ஏண்டா! கந்தா! நம்ப பழனி, அடித்தால் அழலாமாடா! விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருடா!’ என்று சொல்லிவிட்டுப் பழனியைப் பார்த்து, ‘பழனி, நீ அவனை இன்னும் நாலு அடி அடி. கையை வலிக்குமேயென்று பயப்படாதே, உங்கம்மாவையும், விட்டு அடிக்கச்சொல்லு. நானும் இரண்டு அடிக்கிறேன் அவனும் தன்னை நாலு அடி அடித்துக்கொள்ளட்டும்’ என்று உற்சாகமாகக் கூறினாள்,

தான் பிள்ளைபெற்றதன் பயனை, அன்றுதான் அனுபவித்ததாக அவள் இறுமாப்பு அடைந்தாள். சண்பகம்தான் இப்படியென்றால் திரிபுரம் இதைவிட ஒரு படி அதிகமாகப் போவாள். ஒரு சமயம் சண்பகம் தன் வயதைப்பற்றி விசாரித்தபோது, அவள் சற்றுக் கூட யோசனை பண்ணாமல், "முப்பது வருஷம் ஆறு மாதம், நான்கு நாள், ஏழேகால் நிமிஷம் ஆகிறது; உன்னைவிட எனக்கு அதிக வயது மூன்று நிமிஷம்" என்றாள். இவர்களுடைய ஒற்றுமையைப் பார்த்து ஊரார் மூக்கில் விரலைவைத்து ஆச்சரியப்பட்டார்கள்; இன்னும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் பயனாய் அவர்கள் மூக்குகள் சப்பையாகக் கூடப் போய்விட்டன.

"ஆனால் அந்த ஊரார் அதே சமயத்தில் திரிபுரத்துக்கும் சண்பகத்துக்கும் ஏற்பட்டிருந்த ஒற்றுமையைப் பார்த்துப் பொறாமையும் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் சண்டை ஏற்படாதா என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். வெகு சீக்கிரத்தில் அவர்கள் எதிர்பார்த்தபடியே நடந்தது. ஒருநாள் திடீரென்று அவர்கள் சிநேகம் குலைந்தது. குலைந்தது. குலைந்தது. குலைந்தே போய்விட்டது.

"இந்த மனஸ்தாபத்துக்கு உண்மையான காரணம் என்னவென்று தெரியவில்லை. இரண்டு சிநேகிதிகளும் ஒருவர் விஷயத்தில் ஒருவர் பிராணத் தியாகம் செய்துகொள்ளவும் தயாரா யிருப்பவர்களாயிற்றே. ஏன் சண்டை வந்தது? ஒரு வேளை திரிபுரத்தின் தோட்டத்திலிருந்து ஒரு வாழை இலையைச் சண்பகம் அறுத்து எடுத்துக்கொண்டு வந்ததினாலிருக்குமோ என்று பலர் சந்தேகப்பட்டார்கள்.

திரிபுரத்தின் ஸீமந்த புத்திரன் சிவானந்தமும், சண்பகத்தின் ஸீமந்த புத்திரி பார்வதியும் தங்கள் தாய்மார்களுக்குள் ஏற்பட்ட சண்டையைப் பார்த்து மனங்கலங்கினார்கள். ஏனென்றால் அவர்களிருவரும் காதலர்கள். ஒரு நாளிரவு சந்திரன் நல்ல பசும்பால் போலக் காய்ந்து கொண்டிருந்தபோது அவர்களிரு வரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிவானந்தம் என்ன செய்வதென்று தெரியாமல் "ஓய்! கடவுளே!" என்றான்.

கடவுள் வரவில்லை. ஆனால், அப்பொழுது மறைந்த மேகங்களிடையேயிருந்து சந்திரன் தோன் றினான். சிவானந்தத்தைப் பார்வதி என்னென்னமோ கேள்விகள் கேட்டாள். அவன் அவற்றிற்குப் பதில் சொல்லாமல் பயித்தியம் பிடித்தவனைப்போல் சந் திரனையே கவனித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு திடீரென்று மறைந்து போனான்."

நான் மேலே படிக்க முயன்றபோது, "போதும், நிறுத்தும்!" என்றார் வந்தவர்.

"நீர் பேசுவது, நடந்து கொள்வது ஒன் றுமே எனக்குப் புரியவில்லை" என்றேன்.

"புரியாது ஐயா, புரியாது. நீர் இலக் கணத்தைக் கொலைசெய்யச் சூழ்ச்சி செய்வ தெல்லாம் எனக்குத் தெரியாதாக்கும்? உமது கட்டுரையில் முதல் பாராவைப் பாரும். 'மனஸ் தாபங்கள் அரிவாளால் தீர்த்துக் கொள்ளப் படும்' என்று ஒரு பெரிய சண்டையைப்பற்றி வார்த்தைகளை எத்தனை குறைத்து எழுதியிருக்

கிறீர். அடுத்த பாராவில் இரண்டு ஸ்திரீகளுக்கு முள்ள ஒற்றுமையைப்பற்றி மிகைபடக் கூறி யிருக்கிறீர். மூன்ருவது பாராவில் "குலேந் தது, குலேந்தது......." என்று கூறியதையே திருப்பித் திருப்பி எழுதியிருக்கிறீர். நான்கா வது பாராவில் ஒருவருக்காக ஒருவர் பிராணத் தியாகம் செய்துகொள்ளும் சுபாவமுள்ளவர் கள் வாழையிலேக்காகச் சண்டை போட்டுக் கொண்டார்களென்று மாறுகொளக் கூறி யிருக்கிறீர். ஐந்தாவது பாராவில் 'ஓய் கட வுளே' என்று பொருந்தாத வார்த்தையை உபயோகித்திருக்கிறீர். 'அட' என்றபதத்திற் குப் பதிலாக 'ஓய்' என்ற வழூஉச் சொல்லே ஏன் ஐயா, புகுத்தினீர்? ஆருவது பாராவில் தன்னேத் 'தானே சுற்றிக் கொண்டது சந் திரனு அல்லது சிவானந்தமா என்று தெரியா மல் மயங்க வைத்திருக்கிறீர்" என்று பல்லேக் கடித்துக் கொண்டே சொன்னர்.

அவர் சொல்வதொன்றும் புரியாமல் நான் திகைத்துக்கொண்டிருந்தபோது, "நீர் ஓர் இலக் கண விரோதி" என்று ஒரு போடு போட்டார்.

"பெரியவரே, விஷயத்தைப் புரியும்படி யாய்ச் சொல்லும்" என்று கேட்டுக்கொண் டேன்.

"இதைச் சொல்ல வேறு வேண்டுமாக்கும்! உமது கட்டுரையில் முதல் ஆறு பாராக்கள் எழுதுவதற்குள்ளேயே,

"குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்

என்ற ஆறு குற்றங்கள் இழைத்திருக்கிறீரே. கட்டுரை முடிவதற்குள் இன்னும் எத்தனை குற்றங்கள் இழைத்திருப்பீரோ?" என்று சொல்கொண்டே போய்விட்டார்.

அவர் சென்றபிறகு அவர் கூறிய இலக்கண விதிகள் கூறியதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தேன். ஹாஸ்யமாக எழுதுவதற்குக் கையாளவேண்டிய யுக்திகளைப்பற்றி நமது பெரியவர்கள் இப்படி விவரமாக இலக்கணம் ஏற்படுத்தி வைத்திருப்பது எனக்குப் புலனாயிற்று.

ஸரஸி விடு தூது

நரசிம்மன் தன் வேட்டகத்தின் மாடியில் ஓர் அறையில், கூண்டிலடைபடாத ஒரு சிங்கம்போல் அங்கு மிங்கும் உலவிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் மனத்தில் தான் ஜயந்தியை விவாகம் செய்துகொண்ட நாள் முதல் அந்தக் கணம்வரை நடந்த சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி மறைந்தன. அதே சமயம் மேஜையின் மீதிருந்த அவனுடைய 'டயரி' அவன் கண்ணில் படவே நாற்காலியில் போய் உட்கார்ந்து அதைப் பிரித்துப் பார்த்தான். அந்த டயரியில் எழுதப்பட்டிருந்த சில குறிப்புகளின் விவரம் வருமாறு :

5-10-43. ஜயந்தியின் ஜாதகம் பார்த்தது.

6-10-43. ஜயந்தியையே நேரில் சந்தித்தது.

8-10-43. ஜயந்திக்கும் எனக்கும் கல்யாணம்.

9-10-43. காலை எக்ஸ்பிரஸ் வண்டியில் பம்பாய் பிரயாணம்.

10-10-43. மாதுங்காவில் குடித்தன ஆரம்பம்.

10-10-43. ஒரு ஸெட் சாப்பாட்டுக்கு ஹோட்டலுக்கு அட்வான்ஸ் கொடுத்தது.

17-10-43. பத்து நாள் லீவில் தீபாவளிக்காக ஜயந்தியுடன் மெயிலில் சென்னைப் பிரயாணம்.

19-10-43. சென்னை, காலை பத்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தது.

இவற்றைப் படித்த பிறகு மறுபடியும் எழுந்து கோபமாக நடக்கலானான்.

அவன் கோபத்துக்குக் காரணம் இதுதான்: அன்று பகல் போஜனத்துக்குப் பிறகு ஜயந்தி வெற்றிலைத் தட்டை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போனாள். அப்பொழுது கீழே அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் சிலர் வந்தனர்.

"ஜயந்தியைப் பார்க்கலாமென்றால் கண்ணில் அகப்படமாட்டேனென்கிறாளே" என்று ஒரு அம்மாள் ஜயந்தியின் தாயாரிடம் புகார் செய்தாள்.

"இரண்டு பேரும் ஊரிலேயிருந்து சேர்ந்தாப் போல்தானே வந்திருக்கிறார்கள். அதற்குள்ளே என்ன பேச்சு? ஊரில் போய்ச் சாவகாசமாகப் பேசிக்கொள்ளட்டுமே" என்று இன்னொருத்தி சொன்னாள்.

"இந்தக் காலத்துக் குழந்தைகளே அப்படித்தான்" என்று இன்னொருத்தி வேதாந்தம் பேசினாள்.

இந்த வம்புப் பேச்சையெல்லாம் கேட்கச் சகிக்காமல் ஜயந்தியின் தாயார் "ஜயந்தி! இங்கே கொஞ்சம் வந்து விட்டுப் போ" என்று கூப்பிட்டாள். ஜயந்தியும் உடனே திரும்பி விடுவதாகக் கூறிவிட்டுக் கீழே இறங்கி வந்தாள்.

அவள் போய்க் கால் மணி ஆயிற்று. அரை மணி ஆயிற்று, முக்கால் மணியும் ஆயிற்று. அவள் வராமற் போகவேதான், மாடியில் நரசிம்மன் அப்படிக் கோபமாக உலாவிக் கொண்டிருந்தான். அவள் வராவிட்டாலும் போகட்டும், நாமாவது கீழே போகலாம், ஹாலிலோ, வராந்தாவிலோ உட்கார்ந்து கொள்ளலாம் என்று கீழே இறங்கக் கிளம்பினன். ஆனல், அவன் மாமனர் ஞாபகம் வரவே மாடிப் படியில் வைத்த காலைப் பின் வாங்கிக் கொண்டான். ஏனென்றல், அவன் ரயிலிலிருந்து வந்ததும் வராததுமாக அவன் மாமனர் "மாப்பிள்ளை! மாடிக்கு வாருங்கள்" என்று உபசாரம் செய்து அழைத்துப் போனர். சிறிது நேரம் கழித்து அவன் கீழே இறங்கி வந்தபோது மறுபடியும் அவர் "அடடா! நீங்கள் ஏன் கீழே வரவேண்டும்? மாடிக்குப் போங்கள்" என்று சொல்லி மாடிக்கு அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்துவிட்டு வந்தார்.

அவர் சொல்வதைத் தட்ட அவனுக்குத்

தைரியம் வரவில்லை. ஆனால் சிறிது நேரம் கழித்து அவர் வெளியில் போய்விட்டாரென்று நினைத்துக் கொண்டு நரசிம்மன் கீழே இறங்கி வந்தான். கடைசிப் படியில் ஒருகாலும், ஹாலில் ஒரு காலும் வைத்தபோது "மாப்பிள்ளை, நீங்கள் எதற்காகக் கீழே வரவேண்டும்? மேலேயே இருங்கோன்னா!" என்று கூறிக்கொண்டே எங்கிருந்தோ எதிரே வந்து நின்றார் மாமனார். நரசிம்மன் வந்த சுவடு தெரியாமல் திரும்பி ஓடினான்.

அவனுடைய மாமனார் இப்படி அவனை விரட்டிக் கொண்டே இருந்ததற்குக் காரணம், தான் தன் மனைவியுடன் அடிக்கடி பேசித் தொந்தரவு செய்யாதிருப்பதற்குத்தான் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவர் அப்படிச் செய்ததன் ரகசியமே வேறு. யாராவது வந்து, "மாப்பிள்ளை எங்கே!" என்று கேட்டால், "மாப்பிள்ளையா! மாடியிலிருக்கிறார்" என்று சொல்வதில் அவருக்கு ஒரு பெருமை. அதற்காகவே கடன் வாங்கி மாடியில் ஓர் அறை கட்டியதன் அருமை அவருக்கல்லவா தெரியும்?

நரசிம்மனுக்கு வந்த கோபத்தில் அவனுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. வாழ்க்கையிலேயே அவனுக்கு வெறுப்புண்டாய் விட்டது. நாற்காலியில் இரண்டு மூன்று தடவை உட்கார்ந்து எழுந்திருந்தான். எழுந்

திருக்கும்போதெல்லாம் நாற்காலியைப் பொத்துப் பொத்தென்று தூக்கி வைத்தான். அந்தச் சத்தம் கேட்டுக்கூட ஜயந்தி வருவதாகக் காணும். அப்பொழுது அவன் எதிரில் யாராவது ஒரு காஷாய வஸ்திரத்தை நீட்டியிருந்தால் அதை எடுத்துத் தரித்துக்கொண்டு கட்டாயம் துறவியாகப் போயிருப்பான். அந்தச் சமயத்தில் அப்படி யாரும் அவனுக்கு உதவி செய்யாமற் போகவே அவன் கோபம் அதிகமாயிற்று. அறைக்குள் முன்னேவிட வேகமாய் அங்குமிங்கும் நடக்க ஆரம்பித்தான். அந்த வேகத்தில் மாடி அதிர்ந்தது. மாப்பிள்ளை மாடியை இப்படிப் பலமாக அனுபவிப்பதில் மாமனுருக்குப் பரம ஆனந்தம்.

நரசிம்மன் நடையின் வேகம் மணிக்குப் பத்து மைல் விகிதத்துக்கும் அதிகமாய்க் கொண்டிருந்தபோது ஜயந்தி சிரித்த வண்ணம் அங்கே வந்தாள். தன் கணவன் இருந்த நிலைமையைப் பார்த்ததும் "என்னமோ கோபமாய் இருக்கிறுப் போல் இருக்கிறதே" என்றுள்.

"இருக்கிறுப் போல் இல்லை. இருக்கவே இருக்கிறது" என்றுன்.

"எதற்காகக் கோபம்?"

"எதற்காகவா? ஒன்றுந் தெரியாது போல் கேட்கிறுயே. உன் ஹிருதயத்தில் கையை வைத்துக்கொண்டு பார். உன் மனச்

சாட்சியைக் கேட்டுப் பார். உன் அந்தராத்மா நீ என்ன செய்தாயென்று உனக்குச் சொல் லும்.''

''நான் ஒரு பாவமும் அறியேனே.''

''நீ இங்கிருந்து போனுயா?''

''போனேன்.''

''போய்?''

''நான் வந்து.......''

''நீ என்ன சொன்னுலும் ஒப்புக்கொள்ள மாட்டேன். நீ போய்ச் சரியாக ஐம்பத்து மூன்று நிமிஷம் ஆகிறது, இத்தனை நாழியாக என்ன செய்துகொண்டிருந்தாய்? அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தாயாக்கும்?''

''ஐம்பத்து மூன்று நிமிஷம் என்று இவ் வளவு கணக்காகச் சொல்கிறீர்களே! நான் என்ன செய்துகொண்டிருந்தேன், தெரியுமா?''

''நீ எத்தனை தரம் முகத்தை சோப்புப் போட்டு அலம்பிக் கொள்கிருய், எத்தனை முறை பௌடர் ஒத்திக்கொள்கிருய் என்றெல் லாம் எனக்குத் தெரியவேண்டியதில்லை.''

''அதை யாரும் உங்களைத் தெரிந்து கொள்ளச் சொல்லவில்லை. உங்களால் தான் இங்கே வர இத்தனை நாழி ஆயிற்று!''

''என்னுலா?''

''ஆமாம்! உங்கள் ஸூட் கேஸைத் திறந்து கண்ணுடி எடுக்கப் போனேன். அப் போது பார்த்தால் உங்கள், கோட், ஷர்ட்

எல்லாம் எண்ணெய் பட்டுக் குட்டிச்சுவராகிப் போயிருந்தது. தைல பாட்டிலுக்குக் கார்க்குப் போடாமல் அப்படியே திறந்து வைத்து விட்டீர்கள் போலிருக்கிறது.''

''நான் ஒரு நாளும் அப்படி வைத்திருக்கவே மாட்டேன்.'

''வைத்திருக்க மாட்டீர்களா? சரி, அது கிடக்கட்டும். வழியில் ஸபோட்டா பழம் வாங்கினேமே. தின்று மீந்ததை என்ன செய்தீர்கள்?''

''என்ன செய்திருப்பேன், பழக் கூடையில் போட்டிருப்பேன்.''

''இல்லை. ஸூட்கேஸில் அடியில் போட்டு, மேலே துணியையும் வைத்து இறுக மூடிப் பூட்டி விட்டீர்கள். அது வேறு துணிகளை நாசஞ் செய்துவிட்டது.''

''ஒரு நாளும் இராது.''

''இராதா?'' என்று சொல்லிவிட்டுக் கீழே ஓடிப்போய்ப் பெட்டியை எடுத்து வந்தாள். ''லாண்டரி பையனை வரச் சொல்லிவிட்டு உங்களுக்கு வேறு சட்டை தைக்க ஏற்பாடு செய்தேன். அதனுல்தான் நாழியாகி விட்டது'' என்றுள்.

நரசிம்மன் தன் தவறை யுணர்ந்தான். ஆனல் புருஷ சிங்கமான அவனுக்குத் தன் தவறை ஒப்புக்கொள்ள இஷ்டமில்லை. அப்பொழுது ஜயந்தி ''நீங்கள் இன்றைக் கென்

னமோ என்னிடம் சண்டை போடுகிற தென்று ஆரம்பித்திருக்கிறீர்கள்!” என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டுப் பெட்டியிலிருந்த துணிமணிகளைக் கீழே எடுத்து வைத்தாள். அதைப் பார்க்கவே அவன் கோபம் அதிகமாகி “என்னது! என்னைப் பார்த்தா சண்டை போடுகிறவன் என்று சொல்கிறாய்!” என்றான்.

“இல்லை. உங்களுக்குப் பொறுமை இல்லை. அவ்வளவுதான்.”

“யாருக்கு? எனக்கா பொறுமையில்லை? இன்னொரு தரம் சொல்லு.”

“ஆமாம், உங்களுக்குப் பொறுமை இல்லை தான். அதை இழந்து விட்டீர்கள்! சண்டை போட்டுக்கொண்டே, யார் சண்டை போடுகிறார்கள் என்று கேட்கிறீர்களே?”

“அப்படியானால் நான் பொய் சொல்கிறேன் என்கிறாயா?”

“பொய் என்காமல், வேறு என்ன சொல்கிறது?”

“ஏது! உனக்கு அவ்வளவு தைரியம் வந்துவிட்டதா?”

“இப்படி ஏன் இரைந்து இரைந்து பேசுகிறீர்கள்? அப்புறம் யாராவது கொலை கிலை நடக்கிறது என்று நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்!”

“ஓஹோ! என்னைக் கொலைகாரன் என்று வேறு சொல்கிறாப் போலிருக்கிறது!”

"உங்களுக்கு வந்திருக்கிற கோபத்தைப் பார்த்தால் நீங்கள் கொலை செய்யவும் தயாரா யிருக்கிறாப் போலேதான் இருக்கிறது."

"உன்னைப்போல ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால் பொய் சொல்ல, கொலை செய்ய எல்லாத்துக்குந்தான் தோன்றும்."

ஜயந்தி, இந்தச் சச்சரவை அத்துடன் நிறுத்த விரும்பி "இன்றைக்கு யார் முகத்தில் விழித்தேனோ தெரியவில்லை. உங்களிடம் நான் சகஜமாகப் பேச வந்தது தப்பு. இனிமேல் பேசவில்லை. நான் போகிறேன்" என்று கூறி விட்டு அவன் பதில் சொல்லுமுன் கீழே இறங் கிப் போய்விட்டாள்.

சதிபதிகளுக்குள் யுத்த காண்டம் ஆரம் பித்து ஒரு மணி நேரமாய் விட்டது. அதற்குள் நரசிம்மன் கோபந் தணிந்துவிட்டது. தான் அநாவசியமாகச் சச்சரவு கிளப்பியதை உணர்ந்தான். உடனே மனைவியுடன் சமா தானமாகப் போக விரும்பினான். ஆனால் அவள் மேலே வரவில்லை. என்ன செய்வ தென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்த போது அங்கே அவன் மைத்துனி சரஸி வந் தாள். அவள் வெட்கப்பட்டுக்கொண்டு சற்றுத் தூரத்திலேயே நின்றாள். நரசிம்மன் எழுந் திருந்துபோய் அவளைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டான்.

"அக்கா ஏதாவது என்னிடம் சொல்லச் சொன்னுளா ?" என்று விசாரித்தான்.

"அக்கா பேசு இல்லே. துணி எல்லாம் கிழிக்கிரு" என்ருள் சரஸி. இதைக் கேட்டதும் நரசிம்மனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தான் கோபித்துக் கொண்டதில் ஏக்கமடைந்து பயித்தியமாகி விட்டாளோ என்று சிறிது சந்தேகம் தோன்றிற்று.

"கிழிக்கிருளா ?" என்று திகைப்புடன் கேட்டான்.

"இரண்டு இரண்டு சோமன். ஒரு ஒரு சோமன் பண்ரு" என்று பதில் வந்தது. ஜோடியாயிருக்கும் வேஷ்டிகளை ஒத்தையாகக் கிழித்து வைக்கிருளென்று நரசிம்மன் ஊகித்துக் கொண்டான். அவன் பயந் தெளிந்தது. பிறகு அவன் "நான் ஒன்று சொல்கிறேன். அதை அக்காவிடம் போய்ச் சொல்கிருயா ? காசு கொடுக்கிறேன்" என்ருன்.

"உனக்கு நான் காசு" என்று சொல்லிச் சரஸி தன் சட்டைப் பையிலிருந்து ஒரு தம்பிடியை எடுத்து அவனிடம் கொடுத்தாள். நரசிம்மனுக்கு வெட்கமாய்ப் போயிற்று. "வேண்டாம்" என்ருன்.

"இல்லே, உனக்குத்தான்" என்று சொன்னுள் சரஸி.

நரசிம்மன் "சரி" என்று வாங்கிக் கொண்டு, "நான் சொல்கிறதைக் கவனமாய்க்

கேட்டுக் கொள். அப்படியே அக்காளிடம் போய்ச் சொல். எனக்கு இங்கே பொழுதே போகவில்லை. அக்காள் மீது எனக்குக் கோபமே இல்லையென்றும் அவளும் அவள் கோபத்தை மறந்துவிட்டு இங்கே வரவேண்டு மென்றும் சொல்" என்றான்.

"சொல்றேன்" என்று தலையாட்டி விட்டுச் சரஸி தன் சகோதரியிடம் போய் நின்று விழித்தாள்.

"என்ன?" என்றாள் ஜயந்தி.

"அத்திம்பேர் கோபம் ஓடிப்போச்சு. உன்னை மாடி வா சொல்றா. பொழுது போ மாட்டேன் சொல்றது" என்றாள்.

ஜயந்தி இதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டாள். பிறகு குழந்தையைப் பார்த்து "நீ போய் நான் வரவில்லை என்று சொல். சும்மா இருந்தவளை முதலில் சண்டைக்கு இழுத்தது அவர்தான். நான் அங்கு வந்து பேச ஆரம்பித்தால் மறுபடியும் ஏதாவது சண்டை உண்டாகும். இங்கே எல்லாரும் சிரிப்பார்கள். ஊருக்குப் போய்ச் சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம் என்று சொல்லு" என்றாள்.

சரஸி இதைக் கேட்டுக்கொண்டு மாடிக் குப் போனாள்.

"அக்கா முதலிலே சண்டை இல்லே, நீ தான். எல்லாருக்கும் சிரிப்பு வரது. வல்லே சொல்றா. இங்கே பேச வேண்டாம். ஊருக்குப்

போச் சொல்ரு" என்று நரசிம்மனிடம் தெரி வித்தாள்.

"என்னை ஊருக்குப் போகச் சொல் கிருளா?" என்று உறுமினுன் நரசிம்மன். பிறகு, "அவள் இப்படிப் பிடிவாதம் பிடிப் பது நன்றுயில்லை. என்மேல் நிஜமான காதல் இருந்தால் உடனே வரவேண்டுமென்று சொல்லு" என்ருன்.

சரஸி தான் நரசிம்மனிடம் கொடுத்த தம்பிடியைக்கேட்டு வாங்கிக் கொண்டு ஜயந்தி யிடம் போனுள்.

"அத்திம்பேருக்கு நிஜ ஊதல் வேணு மாம். எடுத்துக்கொண்டு வரச்சொன்ன" என்று சரஸி கூறியபோது ஜயந்திக்கு ஒன் றும் விளங்க வில்லை. அவள் இந்தத் தகராறை மேலே வளர்க்க விரும்பாமல் "சரஸி! மறு படியும் அத்திம்பேரிடம் போ. டிபன் எப் போது சாப்பிடுகிருர், என்ன டிபன் அனுப்பு கிறது என்று கேட்டுவிட்டு வா" என்ருள்.

சரஸிக்குக் கால் வலித்தது. காலைப் பிடித் துக்கொண்டு குனிந்து குனிந்து பாட்டி மாதிரி மெத்தைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

"வயிற்றைப் பசிக்கிறதா கேட்டாள். என்ன தின்கிறே?" என்ருள்.

"எனக்கு இப்பொழுது தின்பதைப்பற்றி ஒன்றும் கவலை இல்லை. அவள்மீது உயிரையே வைத்திருக்கும்போது அவள் இப்படி நடந்து

கொள்கிறது நன்ருயில்லை என்று சொல்லு. டிபன் ஒன்றும் வேண்டியதில்லை. ஏதாவது பழம் கிழம் தின்கிறேன்."

ஸரஸி முக்கி முனகிக்கொண்டு கீழே வந்தாள்.

"அத்திம்பேர் கிழம், விஷம் தின்கறேன். உயிர் வைச்சிருக்கா" என்ருள்.

ஜயந்தி இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். அதற்குமேல் பிடிவாதம் பிடிக்க அவள் இஷ்டப்படவில்லை. "அவரை இங்கே டிபன் சாப்பிட வரச் சொல். அப்புறம் நானும் அவருடன் மாடிக்கு வருகிறேன். எனக்கு அவர் மேல் கோபமே கிடையாது என்று சொல்லிவிடு. நீ அவரைக் கையைப் பிடித்து இங்கே அழைத்துக்கொண்டு வா" என்ருள்.

சரஸி கையில் ஒரு முறுக்கை எடுத்துக் கொண்டு மெத்தைக்குச் சென்ருள்.

அவள் போய்க் கால் மணி நேரமாகியும் வராமற் போகவே ஜயந்தி பயந்து போய்விட்டாள். குழந்தை 'விஷம்', 'உயிர்' என்றெல்லாம் தன் கணவன் சொல்லியதாகச் சொல்லிற்றே........என்னமோ, ஏதோ என்று பயம். அவள் மாடிக்கு ஓடினுள்.

அதே சமயத்தில் நரசிம்மன் கீழேபோன குழந்தை இன்னும் தன் மனைவியிடமிருந்து பதில் கொண்டு வரவில்லையே என்று கவலையுடன் மாடிப் படிப் பக்கம் வந்து கீழே இறங்கலானுன்.

அங்கே சரஸி படிகளின் நடுவில் உட்கார்ந்துகொண்டு பலமாக யோசனை செய்து கொண்டிருந்தாள். அக்காளும் அத்திம்பேரும் இரண்டு பக்கமும் வருவதைப் பார்த்ததும் 'அக்கா, இதோ வரா" என்று நரசிம்மனிடம் சொன்னாள். ஜயந்தி குழந்தையைத் தூக்கி எடுத்துக்கொண்டு கணவனிடம் சென்றாள்.

அப்பொழுது இரேழிப் பக்கம் வந்த ஜயந்தியின் தகப்பனார் மாடிப் படியில் நடக்கும் சத்தம் கேட்டு "மாப்பிள்ளை, மேலேயே இருங்கோ. டிபன் அனுப்பச் சொல்கிறேன்" என்றார்.

மன்னமந்தல் கத்திரிக்காய்

சண்டிகேசுவர அய்யரும் மார்க்கபந்து அய்யரும் நண்பர்களானவிதமே அலாதி. அவர்கள் இரண்டு பேரையும் நன்கறிந்த எந்த மூன்ருவது நபரும் "இதோ மிஸ்டர் சண்டிகேசுவரன்! மாஜி மணல் மூட்டை ஸப்ளை கண்டிராக்டர்." "இதோ மிஸ்டர் மார்க்கபந்து! பாங்கில் எண்பதினுயிரத்து ஒன்பது ரூபாய் போட்டிருப்பவர்" என்று அவர்களைப் பரஸ்பரம் கர்நாடக முறையில் அறிமுகப்படுத்தி வைக்கவில்லை.

அவர்கள் நாகரிக முறையில் நண்பர்களானுர்கள் என்று சொல்ல வேண்டும்.

ஒரு நாள் இரவு சுமார் பதினேருமணி இருக்கும். எங்கும் ஒரே கும்பிருட்டாய் இருந்தது. சண்டிகேசுவரன் ஒரு தெருவோடு போய்க்கொண்டிருந்தபோது எதிரே சற்றுத் தூரத்தில் ஏதோ மாடு வருவதுபோல் தோன்றவே, அவர் முன் ஜாக்கிரதையாக "ஹாய்! ஹாய்" என்று விரட்டிக்கொண்டே போனுர். மறு நிமிடம் யாரோ அவர் மீது வந்து மோதிக்

கொண்டார். சண்டிகேசுவரனுக்கு மண்டையில் நன்ருக அடிபட்டு விட்டது. அவரைத் தவிர வேறு எந்த மனிதராகவாவது இருந்தால் "ஏங்காணும், உமக்குக் கண், கிண் இருக்கிறதா, இல்லையா?" என்று கேட்டுச் சண்டைக்குப் போயிருப்பார். ஆனல் சண்டிகேசுவரய்யர் ரொம்ப நிதானமாக "ஏன், ஸார்! உங்களுக்கு ஒன்றும் அடிபடவில்லையே! ஏன் இப்படி விளக்குகளை அணைத்துப் பிராணனை வாங்குகிருர்கள்?" என்று சொல்லி மற்றவரின் தலையைத் தடவிக் கொடுத்தார். "ஆமாம், ஸார்! இவர்களுக்கு வேறு வேலை இல்லை" என்ருர் மார்க்கபந்து. அந்த நிமிஷ முதலே அவர்களுக்குள் பிராண சிநேகிதம் ஆரம்பமாகி விட்டது.

நாளடைவில் இவர்களுடைய குடும்பத்தினரிடையேயும் நெருங்கிய பழக்க மேற்பட்டது. சிவகாமு (மிஸஸ் சண்டிகேசுவரன்) அம்மாளுக்கும், சேது (மிஸஸ் மார்க்கபந்து) அம்மாளுக்கும் எவ்வளவு ஒற்றுமை என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொன்னல் போதும். சிவகாமுவுக்கு எப்பொழுது தும்மல் வருகிறதோ அதே சமயத்தில் சேதுவுக்கும் தும்மல் வருமென்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இவர்கள் ஒற்றுமையைப் பற்றி ஊரெல்லாம் ஒரே பேச்சா யிருந்தது. இதனல் திருஷ்டி வந்து விடுமோ வென்று பயந்து சிவ

காமு அம்மாளும் காமு அம்மாளும் ஒருவருக் கொருவர் தங்களுக்குத்தானே அடிக்கடி 'சுற்றிப் போட்டு'க்கொள்வது வழக்கம்.

சண்டிகேசுவரனுக்கு விமலா என்ற ஒரு பெண்ணும், மார்க்கபந்துவுக்கு மாலதி என்ற ஒரு பெண்ணும் இருந்தார்கள். இரண்டு பெண் களுக்கும் கிட்டத்தட்ட பதினேழு வயது இருக் கும். இவர்களுக்காக இவர்களுடைய தந்தை மார் எத்தனை வரன்கள் பார்த்திருக்கிறார்கள் என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. எத் தனையோ முதல்தரமான வரன்கள் எல்லாம் வந்திருக்கின்றன. ஒரே ஒரு வரனை மட்டும் சொல்கிறேன்.

பிள்ளை குடும்பத்துக்கு ஒரே பிள்ளை. அழகில் அவனுக்கு ஈடு அவனேதான். எதிர் ஜாமீன் என்ற பேச்செடுத்தாலே பிள்ளையின் தகப்பனாருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வரும். தாயாருக்கோ காது செவிடு மைத்து னர், நாத்தனர் யாரும் கிடையாது

கல்யாணத்துக்காக ஒரு பெண்ணை வைத் துக் கொண்டிருக்கும் பெற்றோர்களின் மனத் தைக் குளிரச் செய்யும் எல்லா அம்சங்களும் உள்ள திவ்யமான வரன். இருந்தாலும் சண்டி கேசுவரனுக்கோ மார்க்கபந்துவுக்கோ இப்படி யிருந்தால் மட்டும் போதாது. ஜாதகம், முழுக்க முழுக்க அவர்கள் இஷ்டப்படி அமைந்திருக்க வேண்டும்.

மேலே சொன்ன வரனின் ஜாதகத்தை விமலாவுக்காகப் பார்த்தார்கள். அதைப் பார்த்த ஜோசியன் "எல்லாம் நன்றாயிருக்கிறது. ஆனால் கல்யாணம் பண்ணின ஐந்தாம் வருஷத்தில்.." என்று சொல்லி நிறுத்தினான்.

சண்டிகேசுவரய்யர் பயந்து போய், "ஐந்தாம் வருஷத்தில் என்ன ?" என்று கேட்டார்.

"தலையைப் பாதிக்கும்" என்றார் ஜோசியர்.

சண்டிகேசுவரய்யர் திகிலடைந்துபோய் "விஷயத்தைச் சொல்லி விடும்" என்று கெஞ்சினார்.

"பெண் தலையில் பித்த நரை தோன்றும்" என்றார் ஜோசியர்.

"அப்படியானால் இந்த வரன் வேண்டியதில்லை" என்று சண்டிகேசுவரன் சொல்லி விட்டார்.

மார்க்கபந்துவோ ஜோசியத்தில் இதை விட ஒருபடி அதிக நம்பிக்கையுள்ளவர். அவருடைய பெண்ணுக்குப் பேஷான ஒரு வரனுடைய ஜாதகம் வந்தது. அதைப் பார்த்த ஜோசியர், "எல்லா அம்சங்களும் நன்றாயிருக்கிறது. இந்த ஜாதகனுக்கு இரண்டு பெண்களும் மூன்று பிள்ளைகளும் உண்டாகும். ஆனால் அந்த மூன்றாவது பிள்ளை இருக்கிறானே அவனுக்கு உத்தியோகம் கிடைப்பது சிரமப்படும்" என்றார்.

"அப்படியானல் அந்த வரன் வேண்டிய தில்லே" என்று மார்க்கபந்து கூறிவிட்டார்..

இவ்விதம் இரண்டு பேரும் அலசி அலசிப் பார்த்துத் தள்ளிய ஜாதகங்களே யெல்லாம் சேர்த்தால் ஒரு பெரிய ஜனன ஜாப்தா தயார் செய்துவிடலாம்.

ஒரு சமயம் இவர்கள் தங்கள் நண்பர் ஒருவர் வீட்டில் நடந்த விவாகத்துக்குப் போயிருந்தார்கள். அங்கே இவர்களுக்குப் பக்கத்தி லமர்ந்திருந்த இரண்டு பேர் விவாக விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கவே அந்தச் சம்பாஷணையைக் கவனித்தார்கள்.

"சாமிநாதய்யர்! இந்த வருஷம் உங்காத்துக் கல்யாணச் சாப்பாடு உண்டோ, இல்லேயோ!" என்று ஒருவர் கேட்டார்.

"கல்யாணத்துக்கு என்ன அவசரம்?" என்ருர் சாமிநாதய்யர்.

"அவசரம் என்னவா? காலா காலத்தில் பண்ணினல்தான் தேவலே. பையன் என்ன அழகில் குறைவா? படிப்பில் குறைவா? ஜாதகமும் ரொம்ப யோக ஜாதகமாமே!"

"ஆமாம்! ஜாதகம் ஒரு தினுசு. மற்ற எந்தப் பெண்ணினுடைய ஜாதகத்துக்கும் சரியா யிருக்குமென்கிருர்கள். ஆனல், எனக்கென்னமோ ஸார், இதிலெல்லாம் நம்பிக்கையில்லே."

இதே தோரணையில் பேச்சு நடந்துகொண்

டிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் பேச்சுக் கொடுத்த ஆசாமி போய்விட்டார். சாமிநாதய்யர் மட்டும் தனியே இருந்தார்.

மேற்படி சம்பாஷணையை அரைகுறையாகக் கேட்டுக் கொண்டிருந்த நண்பர்களிருவர் காதிலும் "**எந்தப் பெண் ஜாதகத்துக்கும் சரியாயிருக்குமாம்**" என்ற வார்த்தைகள் விழுந்ததும் அவர்கள் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. சண்டிகேசுவரய்யர் தம் பெண்ணின் ஜாதகம் இருக்கிறதா என்று சட்டைப் பையைப் பார்த்துக்கொண்டார். அதே சமயத்தில் மார்க்கபந்துவும் தமது சட்டைப் பையைக் கவனித்தார். ஏனென்ருல் இரண்டு பேரும் தங்கள் குழந்தைகளின் ஜாதகங்களை எப்பொழுதும் கையில் தயாராய் வைத்திருப்பது வழக்கம்.

ஜாதகம் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன அவர்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது சாமிநாதய்யர் பிள்ளையின் ஜாதகத்தைத் தன் தன் பெண்ணுக்கு வாங்கிப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். நல்ல ஜாதகம் என்றதும் அவர்களுடைய சிநேகிதம் எல்லாம் பறந்து போயிற்று. ஒவ்வொருவரும் மற்றவருக்குத் தெரியாமல் காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்பினர்கள்.

சண்டிகேசுவரன் நண்பரைக் கூப்பிட்டு "இங்கே வாருங்கள் ஒரு சமாசாரம்" என்று தனியே அழைத்துக் கொண்டு போனர்.

"உங்கள் ஆத்தில் நாற்காலியில் மணிபர்ஸை வைத்துவிட்டு வந்து விட்டேன் போலிருக்கிறது. அதில் எழுநூறு ரூபாய்க்குமேல் பணமிருக்கிறது. யாராவது எடுத்துக் கொண்டு போய்விட்டால் என்ன பண்ணுகிறது? கொஞ்சம் டிரைவரைப் போய் விசாரிக்கச் சொல்கிறேளா?" என்ருர்.

"போகச்சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு நண்பர் போனுர்.

மறு நிமிடம் சண்டிகேசுவரன் சாமிநாதய்யரின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். தன் பெண் ஜாதகத்தைக் கொடுத்து விட்டுப் பதிலுக்கு அவர் பிள்ளையின் ஜாதகம் கேட்க வேண்டுமென்பது. அதற்குப் பூர்வாங்கமாகப் பேச்சுக் கொடுத்துக் கொண்டுவந்து "தங்களுக்கு எந்த ஊரோ?" என்று விசாரித்தார்.

"மன்னமந்தல்!"

"நம்மாத்துப் பெண்" என்று ஆரம்பித்தார். அதற்குள் மார்க்கபந்து வந்துவிடவே "மன்னமந்தல் கத்தரிக்காய் ரொம்ப விசேஷம் இல்லையா?" என்ருர்.

பெண்ணைப் பற்றிப் பேச ஆரம்பித்தவர் கத்திரிக்காய்ப் பேச்செடுத்ததைக் கேட்டு சாமிநாதய்யர் ஆச்சரியப்பட்டார். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "ஆமாம்!" என்ருர்.

"தூக்கு என்ன விலைக்கு விற்கும்?"

"ஒண்ணரை அணு இருக்கும்."

"வெள்ளை ராசியா, சிவப்பு ராசியா?"

சாமிநாதய்யர் தமக்கு வந்த சிரிப்பை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொள்வதைப் பார்த்த சண்டிகேசுவரன் "இதோ வந்துவிட்டேன், ஒரு அவசர விஷயம்" என்று எழுந்தார். ஆனல் அப்பொழுது நண்பரையும் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு போனர்.

"என்ன தலை போகிற விஷயம்?" என்று மார்க்கபந்து எரிந்து விழுந்தார்.

"இந்த மனுஷன் நம்பளைப் பரியாசம் பண்ணுகிருப் போலிருக்கிறது."

"ஏன்? அவர் சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்துச் சொல்லுகிறீரா?"

"ஆமாம்! இந்த மாதிரி மனுஷாளோடே சாவகாசமே வைத்துக்கொள்ளக் கூடாது?"

"ஆமாம்! நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டாம்."

"நீங்கள் என்ருல் என்ன அர்த்தம்?"

"நான் மாலதிக்கு அவர் பிள்ளை ஜாதகத்தை வாங்கிப் பார்க்கப் போகிறேன்."

"அதென்னமா பார்க்கலாம்.? நீங்கள் என்ன நினைத்துக் கொள்ளுவீர்களோ என்று தானே நான் அவரிடம் கல்யாணப் பேச்சை எடுக்க வில்லை. நீங்கள் மட்டும் இப்படி சுயநலத்துடன் நடந்து கொள்ளலாமா?"

"நீங்கள் கத்திரிக்காயைப் பற்றி எதற்காகப் பேசினீர்களென்று எனக்குத் தெரியாதாக்கும்?"

" சரிதான். நிறுத்திக் கொள்ளும்."

கடைசியில் நண்பர்களிருவரும் மனஸ்தாபத்துடன் பிரிந்தார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை.

மறுநாள் மாலை ஏழுமணி இருக்கும். சண்டிகேசுவரன் சாமிநாதய்யர் வீட்டுக்குள் நுழைந்தார். அவர் மிகச் சிரமப்பட்டு அவருடைய விலாசத்தை விசாரித்தறிந்து கொண்டிருந்தார். உள்ளே நுழையும்போதுதான் மாஜி நண்பர் சண்டிகேசுவரன் தெருவில் எங்காவது வருகிறாரா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனார்.

ஆனால் சாமிநாதய்யர் அறைக்குள் நுழைந்தபோது அவர் அடைந்த ஆச்சர்யத்துக்கு அளவில்லை. அங்கே சாக்ஷாத் மார்க்கபந்து உட்கார்ந்துகொண்டு கையில் ஒரு ஜாதகத்தை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சண்டிகேசுவரனுக்குத் திரும்பிப் போய் விடலாமா என்று கூடத் தோன்றிற்று. ஆனால் சாமிநாதய்யர் அவரை வரவேற்று உட்காரச் செய்தார்.

"ஒவ்வொருத்தர் கல்யாணம் நிச்சயம் பண்ணுகிறதென்றால் பெரிய ஆர்ப்பாட்டம் பண்ணுகிறார்களே, நாங்கள் அரை மணி நேரத்தில் நிச்சயம் செய்து விட்டோம்" என்றார் சாமிநாதய்யர்!

"நிஜமாகவா?" என்றார் சண்டிகேசுவரன்.

"ஆமாம் உங்க சிநேகிதர் பெண் மாலதியை என் பிள்ளை ராமசாமிக்குக் கொடுக்கத் தீர்மானமாகி விட்டது. அடுத்த மாதம் பத்தாந் தேதி நாள் நன்றாயிருக்காம்" என்றார் சாமிநாதய்யர்.

"ரொம்ப சந்தோஷம்!"

"விமலாவுக்கும் அன்றைக்கே நடத்தி விடலாமே" என்று மார்க்கபந்து சிரித்துக் கொண்டே கூறினார்.

சண்டிகேசுவரனுக்கு வந்த கோபத்தில் "ஓய் மார்க்கபந்து!" என்று ஆரம்பித்தார்.

சாமிநாதய்யர் இவர்கள் விஷயங்களையெல்லாம் நன்றாக விசாரித்து வைத்திருந்தாராதலால் சண்டை ஆரம்பிக்க விடாமல் குறுக்கிட்டு "நம்ம இரண்டாவது பையன் லக்ஷ்மணசாமிக்கு விமலாவைக் கொடுத்துவிடுங்கள்" என்றார்.

"என்னது, இரண்டாவது பையனா! உங்களுக்கு இன்னொரு பையனிருக்கிறாரா!"

"ஆமாம்! ராமசாமியும் லக்ஷ்மணசாமியும் இரட்டைப் பிள்ளைகள். இரண்டு பேருக்கும் கிட்டத் தட்ட ஒரே ஜாதகந்தான்" என்றார்.

இந்தப் பதிலைக் கேட்டதும் சண்டிகேசுவரய்யர் தமது மேல் அங்கவஸ்திரத்தை எடுத்து

நாற்காலியில் போட்டுவிட்டு ஆற அமர உட்கார்ந்தார்.

"ஆனல் ஒரு நிபந்தனை" என்ருர் சாமிநாதய்யர்.

"என்ன?" என்று சண்டிகேசுவரய்யர் கவலையுடன் கேட்டார்.

"கல்யாணத்தின் போது மன்னமந்தல் கத்திரிக்காய் ரஸவாங்கி போட வேண்டும்!" என்று பதில் வந்தது!

ராஜ சுந்தரி

(ஒரு தொடர் கதை!)

சாதாரணமாகப் பத்திரிகைகளில் 'நமது சரித்திரப் பகுதி', 'நமது சிறுவர் பகுதி' என்ற குட்டித் தலைப்புகளின் கீழ் கதைகள், கட்டுரைகள் வெளியாவதுண்டு. அதே மாதிரி 'நமது காதல் பகுதி' என்ற தலைப்பின்கீழ் ஏன் கதைகளும் கட்டுரைகளும் பிரசுரிக்கக் கூடாதென்று ஒரு நண்பர் கேட்டார். அவர் அப்படிக் கேட்டதற்குக் காரணம், சிறுவர்கள், முதலில் சிறுவர் பகுதியிருக்கும் பக்கத்தைப் புரட்டிப் படிப்பதுபோல, காதல் ரஸத்தை விரும்புபவர்கள், முதலில் காதல் பகுதியிருக்கும் பக்கத்தைப் புரட்டிப் படிக்க வேண்டுமென்றுதான். அதற்காக 'நமது காதல் பகுதி' என்ற தலைப்பின்கீழ் பிரசுரிப்பதற்காக இந்தக் காதல்கதையை எழுதுகிறேன்.

ஆனால், இங்கே நான் சொல்லப் போவது 'நமது சொந்தக் காதல்' விஷயமல்ல. ஏனென்றால், அதைப் பின்னொரு காலத்தில் "பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி" நான் எழுதப் போகும் 'என் சுய சரித்திரத்தில்' குறிப்பிடுவதாக உத்தேசம்!

நல்லது இப்போது ஒரு தொடர் காதல் கதை எழுத முயற்சிக்கலாம்.

ஒரே ஒரு ஊரில் கிருஷ்ணவேணி என்ற ஒரு பெண்ணிருந்தாள். அவள் குழந்தைப் பருவம் முதல் தன் அத்தை பிள்ளை ராகவனுடன் சேர்ந்து வளர்ந்து வந்தாள். ராகவனுக்கு அவள்மேல் அதிக ஆசை. ராகவன், தான் எது தின்றாலும் அவளுக்கு அதில் முக்காலே மூன்றுவீசம் பங்கு கொடுக்காமல் தின்ன மாட்டான். கிருஷ்ணவேணியோ பள்ளிக்கூடத்தில் ராகவனை உபாத்தியாயர் அடித்தால் தன்னையும் அடிக்கும்படி கேட்டுக்கொள்வாள்.

அவர்கள் பெரியவர்களானபோது கிருஷ்ணவேணியைத் தன் தங்கை பிள்ளை ராகவனுக்கே கொடுக்கவேண்டுமென்று அவள் தந்தை ஒற்றைக்காலில் நின்றார். ஆனால் பெண்ணின் தாயாரோ, ஏழை ராகவனுக்குக் கொடுக்கக்கூடாதென்றும், ஸிம்லாவில் ஐநூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் பார்க்கும் தன் தம்பி சீனுவுக்கே கொடுக்கவேண்டுமென்றும் அவளும் ஒற்றைக்காலில் நின்றாள். அதன்மேல் அவள் கணவன் ராகவனுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று தலைகீழாய் நின்று பார்த்தும் அவள் ஒப்புக்கொள்ளவில்லை.

கிருஷ்ணவேணியைச் சீனுவுக்குக் கொடுப்பதென்று நிச்சயமாயிற்று. ராகவனைத் தவிர வேறு யாருக்குக் கொடுத்தாலும் தான் கிணற்றில் விழுந்து விடுவதாகக் கிருஷ்ண

வேணி அவனிடம் சொன்னாள். ஆனால் கல்யாணத்துக்கு முதல் நாள் அவள் கிணற்றண்டை போய் அதை எட்டிப் பார்த்தபோது அதில் ஜலம் அழுக்காயிருந்ததால் விழாமல் பேசாமல் திரும்பி விட்டாள்.

சாதாரணமாகக் கல்யாணத்துக்கு முன் காதல் ஏற்பட்டுவிடும் கதைகளின் போக்கு இப்படித்தான். சிலசமயம் கிருஷ்ணவேணிக்கு ஆபத்து வந்துவிடுவதுண்டு. அப்பொழுது ராகவன் எங்கிருந்தாவது திடீரென்று தோன்றி அவளைக் காப்பாற்றுவான். அல்லது ஸிம்லா சீனு ஒரு வெள்ளைக்காரியை ரகசியமாய்க் கல்யாணம் பண்ணிக்கொண்டிருப்பான். அதனால் கல்யாணம் நின்றுபோகும். இதெல்லாம் ஒன்றும் நடக்காவிட்டால் ராகவன் அசட்டுத்தனமாகச் சந்நியாசம் வாங்கிக் கொள்வான். இந்தப் பழைய ரகக் கதைகள் நமக்கு வேண்டியதில்லை.

விவாகமான பிறகு காதல் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கதைகளைப் பார்க்கலாம்.

பிள்ளை கல்கத்தாவிலிருக்கிறான். அவனுடைய பெற்றோர்கள் பெண்ணைப் பார்க்கிறார்கள். அவர்களுக்குப் பெண் பிடித்துப்போய் விடவே கல்யாணம் நிச்சயமாகி விடுகிறது. பையன் கல்யாணத்துக்கு முதல்நாள்தான் வருகிறான்.

மறுநாள் விவாகம் நடக்கிறது.

மூன்ரும் நாள் மனைவி சகிதம் கல்கத்தா திரும்புகிருன்.

கல்கத்தாவில் குடித்தனம் நடத்த ஆரம்பித்து ஒரு வாரம் ஆகியும்கூடச் சதிபதிகளுக்குள் மனஸ்தாபமே ஏற்படவில்லை. ஆனல் எட்டாவது நாள் ஒரு நண்பன் வருகிருன். எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிருர்கள். அப்பொழுது கணவனுக்குத் தன் மனைவி கண்ணைச் சிமிட்டுவது தெரிகிறது. உடனே அவனுக்கு அவள் மீது சந்தேகம் உண்டாகிறது. அநாவசியமாய் அவளைத் துன்புறுத்துகிருன். தன் கணவன் தன்னை இப்படித் துன்புறுத்துவதன் காரணத்தை அறியாத அந்தப்பெண்ணே தன் கணவனுக்குத் தன்னைக் கண்டால் பிடிக்கவில்லை என்று எண்ணி ஏங்குகிருள்.

இப்படி ஏங்குவதன் பயனக அவளுக்குக் காதில் தாங்கமுடியாத வலி ஏற்படுகிறது. டாக்டர் வந்து பரீட்சித்துப் பார்த்துவிட்டு, அது கண்ணில் குறை இருப்பதால் ஏற்பட்ட வியாதி என்றும், கண்ணில் குறை இருப்பதால் அவள் கண்களைத் தன்னை யறியாமலேயேகூடச் சிமிட்டுவா ளென்றும் கூறுகிருர்.

அதைக் கேட்டானே இல்லையோ, கணவன் டாக்டரை அப்படியே நிற்க வைத்துவிட்டு

உள்ளே போய் "கண்ணே! நான் உன்மீது சந்தேகப் பட்டதற்காக மன்னிப்பாய்! மன்னித்தேன் என்று மூன்று தரம் சொன்னால் தான் நான் காப்பி சாப்பிடுவேன்" என்று கூறுகிறான். சதிபதிகள் இதற்குப் பிறகு சந்தோஷமாய் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

கண்டதும் காதல் கதை மிகவும் சர்வ சாதாரணமானது. ஆனால், இப்போது கண்ட கண்ட இடங்களில் அது ஏற்படுவதற்கு வசதிகளிருக்கின்றன. ஒரு பெண் தன் தந்தையிடம் வந்து "அப்பா! இன்று பஸ்ஸில் ஏகக்கூட்டம். சுமார் ஐம்பத்தேழுபேர் இருந்தார்கள். எல்லாரும் ஆண்கள். நான் ஏறியபோது எல்லாரும் மரம்மாதிரி இருந்தார்கள். எனக்கு இடம் கொடுக்கவில்லை. ஒருவர் மட்டும் எனக்காக எழுந்து நின்றார். நான் அந்தக் கூட்டத்தில் இடுக்கு வழியாக அவரைக் கண்டதும், அளவில்லாத காதல் கொண்டுவிட்டேன். அவரை எனக்கு விவாகஞ் செய்து வையுங்கள்" என்று கேட்கக் கூடும்.

எதைப் பார்த்தாலும் பழையமாதிரி தோன்றுகிறதே! புதிய காதல்கதை எப்படி எழுதுவது? பார்க்கலாம்.

இதோ என்முன் ஒரு தினசரிப் பத்திரிகை இருக்கிறது. அதன் முதல் பக்கத்தில் கல்யாண விளம்பரங்கள், என்ற தலைப்பின்கீழ் ஏழெட்டு

விளம்பரங்கள் வெளியாகி யிருக்கின்றன. ஒருவர் தமது பெண்ணுக்கு 'நன்ருகப் படித்த, அழகான உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த, வருங்காலத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக்கூடிய ஒரு பிள்ளை வேண்டும்" என்று கேட்டிருக்கிருர்.

இன்னெருவர் "நன்ருகப் படித்த, வீட்டு வேலைகள் எல்லாம் தெரிந்த, சங்கீத ஞானமுள்ள பெண்ணுக்குத் தகுந்த வரன் வேண்டும்" என்கிருர்.

மற்ருெருவர், தமக்கு இருபத்தைந்து வயதுக்கு மேற்படாத ஒரு பெண் இரண்டாந் தாரமாகத் தேவை என்று கேட்கிருர். மூத்த பெண்சாதியின் குழந்தை, குட்டிகள் ஒன்றும் உயிரோடு இல்லை, என்றும் தைரியம் சொல்லியிருக்கிருர்.

இன்னெருவரோ "ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நல்ல பெண்ணைக் கலியாணஞ் செய்து கொள்ளத் தைரியம் உள்ள ஒரு வாலிபன் தேவை" என்கிருர்.

இவற்றைப் படித்தபோது அந்த விளம்பரங்களைச் செய்தவர்களைப் பற்றிச் சிறிது யோசித்துப் பார்க்க ஆவலுண்டாயிற்று. பாவம், இவர்கள் எல்லாம் வரன் தேடித் தேடி அலுத்துப் போயிருக்கவேண்டும். அல்லது வரன்தேடச் சாவகாச மில்லாதவர்களா யிருக்க வேண்டும். ஆகையால்தான் வேறு வழியின்றி

விளம்பரம் செய்ய முன் வந்திருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனல், ஏழைக் குடும்பப் பெண்ணைப் பற்றிய விளம்பரத்தைப் படித்த போது, என் மனக்கண்முன் ஒருபழைய வீடும், நாலைந்து பெண்களும், அவர்களுடைய தாய் தந்தையும், ஒரு கிழவியும் தோன்றி மறைந் தனர். ஏழைகளான அவர்கள் விளம்பரம் செய்வானேன்? என்று யோசித்துக்கொண்டே போனபோது ஒரு காதல் கதை எழுதலா மென்று தோன்றிற்று. கதை எழுதிப் பார்க் கிறேன். இதைத் தொடர்கதையாகப் போட வேண்டுமென்ருல் அதை எந்தெந்த இடத்தில், என்னென்ன குறிப்புகளுடன் போடவேண்டு மென்பதைப் பற்றியும் யோஜனை சொல்லி யிருக்கிறேன்.

ஈரோடு பஞ்சநதம் ஓர் ஏழைதான். ஆனலும் ஒருவிதத்தில் அவர் அரசர்களுக்கும் மேற்பட்டவர். ஏனென்ருல், ஐந்து பெண்கள் பெற்றிருந்தும் இன்னும் அவர் ஆண்டியாக வில்லை. அவர் மூத்த பெண் ராஜசுந்தரிக்கு இருபத்தோரு வயது இன்னும் நிறையவில்லை. அடுத்த பெண் அகிலாவுக்குப் பதினெட்டரை வயதாகிறது. மூன்ருவது பெண் சுமதிக்குப் பதினறு ஆகிறது.

ராஜசுந்தரிக்கு ஒரு வரன் பார்ப்பதற்காக ஐந்து வருஷ காலமாப் பஞ்சநதம் பட்ட சிர

மத்திற்கு அளவில்லை. ஆனல் ஒரு வரனுவது கிடைக்கவில்லை.

ஒருநாள் அவர் வீட்டுக்கு வந்த ஒரு சிநேகிதர், கல்யாணமாகாத அந்தப் பெண்களைப் பார்த்துப் பரிதாபங்கொண்டார். "ஏன் பஞ்சநதம், பேப்பரில் ஒரு விளம்பரம் போடுகிறது தானே!" என்று கேட்டார்.

"விளம்பரத்துக்கு என்ன ஆகும்?" என்ருர் பஞ்சநதம்.

"இங்கிலீஷ் பத்திரிகைகளில் போட எட்டு ரூபாயும், தமிழ்ப் பத்திரிகைகளில் போட மூன்று ரூபாயும் ஆகும்."

"மூன்று ரூபாயா! அந்த மூன்று ரூபாய் இருந்தால் என் குடும்பத்துக்கு இரண்டு நாளைக்கு அரிசி வாங்கலாமே."

அதைக்கேட்ட அந்த நண்பர் பரிதாபப் பட்டு "நான் உங்களுக்காக விளம்பரம் செய்கிறேன்" என்று கூறிச் சென்ருர்.

அவர் சென்ற சில தினங்களுக்கெல்லாம் பத்திரிகையில் ஏழைப் பெண்ணைப் பற்றிய விளம்பரம் வெளியாயிற்று. அந்த விளம்பரத்தைப் பார்த்ததும் சென்னையில் லாகாலேஜில் படித்துக்கொண்டிருந்த பரமேசுவரன் என்ற வாலிபனுக்குச் சமூகத்தின்மீது பெரிய கோபம் உண்டாயிற்று. அதே சமயம் பெண்ணின்மீது பச்சாத்தாபமும் ஏற்பட்டது. அது காணுமலே காதலாகவும் மாறிற்று.

உடனே விளம்பரம் செய்தவரின் விலாஸத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டு அன்று இரவு ரயிலிலேயே ஈரோடுக்குப் பிரயாணமானான். அப்பொழுது அவன் தான் ரயிலில் பிரயாணம் செய்யவேண்டியது அவசியந்தானா, என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். "அவசியந்தான், அவசியந்தான்" என்று அவன் மனச்சாட்சி பதில் சொல்லிற்று

பரமேசுவரன் ஈரோடை அடைந்து பஞ்சநதம் வீட்டுக்குப் போனான். அங்கே வாசலில் நின்றுகொண்டிருந்த ஒரு பெண் "அப்பா யாரோ வந்திருக்கிறா" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றாள். அந்தப் பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில்.................. பரமேசுவரனுக்கு அவள் ஒரு ஸ்திரீதான் என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெரிந்து போய்விட்டது. அவளுக்கு வயது சுமார் பதினெட்டு இருக்கலாம். மேஜரானவள்தான் என்றும் ஊகித்துக்கொண்டான். அவளைப்பற்றி அவன் மனதில் பின்வரும் குறிப்புகள் பதிவாயின :—

உயரம் நாலரை அடி. அதிகப் பருமனுமில்லை; ஒல்லியுமில்லை; நடுத்தரம். நிறம் மாநிறம். அழகில் ரதிதேவிக்கு நெருங்கிய பந்து என்று சொல்வதற்கில்லை; சுமாராக நன்றாக இருக்கிறாள். கையில் கண்ணாடி வளையல்கள் மட்டுந்தான் போட்டிருக்கிறாள். ஏழைப்

பெண்ணு யிருந்தாலும் பார்ப்பதற்கு அந்தமா யிருக்கிருள். இருபத்துநான்கு வருஷத்துக்கு முன் நான் பிறந்தபோது, பகவான், நான் இவளுக்குத்தான் தாலி கட்டவேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிருன்.

பரமேசுவரன் இவ்வாறெல்லாம் எண்ண மிட்டுக்கொண் டிருந்தபோது அந்தப் பெண் 'அப்பா யாரோ வந்திருக்கிரு' என்று சொன்ன வார்த்தைகள் வேறு அவன் காதில் இன்பத்தேனுக வந்து பாய்ந்துவிட்டன. அவன் அந்தத் தேனைத் துடைப்பதற்காகக் காது களில் விரலை விட்டுக் கசக்கிக் கொண்டிருந்த போது உள்ளிருந்து ஒருவர் வந்து "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று விசாரித் தார்.

"தாங்கள் தானே பஞ்சாமிர்தம் அய்யர்?" என்று பரமேசுவரன் கேட்டான். அவன் காதில் இன்பத்தேன் வந்து வீழ்ந்திருந்ததன் பயனுக அவனுக்குப் பஞ்சாமிர்தத்தின் ஞாப கம் ஏற்பட்டிருந்தது.

"இல்லை. அவர் அடுத்த தெருவில் இருக் கிருர்."

"இந்த வீடு என்று சொன்னுர்களே!"

"இராதே, என் பெயர் பஞ்சநதம் அல் லவா!"

"ஆமாம்! ஆமாம். பஞ்சநதம்தான். தவ றிப்போய்ச் சொல்லிவிட்டேன். நான் பட்ட

ணத்திலிருந்து தங்களைத்தான் பார்க்க வந்திருக்கிறேன்.''

"என்னையா! என்ன விசேஷம்? வாருங்கள், உள்ளே போகலாம்'' என்று பஞ்சநதம் அவனை உள்ளே அழைத்துச் சென்றார்.

இருவரும் ஒரு பழைய பிரம்புப் பாயில் உட்கார்ந்ததும் பஞ்சநதம் "உங்களைத் தெரியவில்லையே எனக்கு. தாங்கள்........?'' என்று சொல்லிவிட்டு விழித்தார்.

"நான் சிவசாம்புவின் பிள்ளை.''

"சிவசாம்புவா? அவர் எங்கே யிருக்கிறாரோ?''

"அவர் காலமாய் விட்டார். நான் பட்டணத்தில் வக்கீல் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கிறேன். நான் பத்திரிகையில் தங்கள் விளம்பரத்தைப் பார்த்தேன், பார்த்ததும்........''

"ஓஹோ! அது விஷயமாகவா? யார் அங்கே, குட்டி! விசிறியும் கூஜாவில் தீர்த்தமும் கொண்டுவா?'' என்று பஞ்சநதம் கூறிவிட்டு "தங்களுக்குத் தமையன் இருக்கிறாப் போலிருக்கிறது. பிள்ளையாண்டான் என்ன பண்ணிக்கொண் டிருக்கிறான்?'' என்று விசாரித்தார்.

"எனக்குத் தமையன், தம்பி ஒருத்தரும் கிடையாது. எனக்காகவேதான் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.''

''அப்படியானல் ரொம்பச் சந்தோஷம்'' என்று பஞ்சநதய்யர் கூறிக்கொண்டிருந்த போது பரமேசுவரனுக்கு முதலில் காட்சியளித்த பெண் கூஜாவையும் விசிறியையும், கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனுள்.

பரமேசுவரன் அவளைப் பார்க்காதது போல் பார்த்துக்கொண்டே "கடிதாசு எழுதிக் கேட்டுக் கொண்டிருந்தால் அநாவசியமாய்க் கால தாமஸமாகும். நேரிலேயே வந்து பார்த்து முடித்துக் கொள்ளலாமென்று புறப்பட்டு வந்தேன்'' என்ருன்.

"உங்கமாதிரி இரக்கமுள்ளவா இருந்தால் தான் நாலு பெண்ணைப் பெற்றவர்களுக்குக் கதிமோட்ச மேற்படும். ஒரு விஷயத்தை முன்னடியே சொல்லிவிட வேண்டும். நான் விளம்பரம் பண்ணியதைப் பார்த்துவிட்டு என்னைப் பற்றிப் பிரமாதமாக நினைத்துக்கொண்டுவிடப் போகிறேள். நான் ஏழை. எல்லாம் சரியாயிருந்து பெண்ணையும் உங்களுக்குப் பிடித்திருந்தால் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனல், என்னல் தடபுடலாகக் கல்யாணம் செய்ய முடியாது. ஏதோ கன்னிகாதானமாகச் செய்து கொடுக்கிறேன். அவ்வளவுதான் முடியும்?''

"அது போதும் ஸார்! நாம் என்ன பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளப்போகிருேமா! வாழை மரத்தைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிருேமா? எதிர் ஜாமீன்

வாங்குவதும், கல்யாணத்துக்காக ஆயிரக் கணக்கில், பதினுயிரக் கணக்கில் செலவு செய்வதும் மிகவும் கண்டிக்கத்தக்கது. இப்படிப்பட்ட காரியங்களினுலேயே நமது ஹிந்து சமூகம் இன்று சீர்கேடுற்று வருகிறது. இந்தத் தீய பழக்கங்களை வேரோடு கிள்ளி எறியவேண்டும். அப்படிக் கிள்ளிய இடத்தில் கொதிக்கக் கொதிக்க வெந்நீரை விட்டு அது மறுபடியும் கிளம்பாமல் செய்யவேண்டும். செய்யவேண்டியது அவசியமா, இல்லையா? அவசிய மென்றே சொல்லுகிறேன்" என்று பரமேசுவரன் ஆத்திரத்துடன் பேசிக்கீழே ஒரு குத்து விட்ட மாத்திரத்தில் 'அப்பாடா!' என்று பஞ்சநதம் கையை இழுத்துக் கொண்டார்.

பரமேசுவரன் தான் கல்லூரியில் 'சமூக சீர்திருத்தம்' என்ற விஷயம் பற்றி அடிக்கடி சொற்பொழிவு ஆற்றுதல் வழக்கம். இப்போது பஞ்சநதம் பேசும்போது அந்த ஞாபகம் வந்து தன்னை மறந்து அத்தகைய பிரசங்கத்துக்கு ஆரம்பித்துவிட்டான்.

"அப்பாடா!" என்று கையை எடுத்துக் கொண்ட பஞ்சநதம் கையைத் தடவி விட்டுக் கொண்டே மெதுவாகப் பின்னல் நகர ஆரம்பித்தார். அப்பொழுதுதான் பரமேசுவரனுக்கு அவர் தன்னுடைய மூளையின் நிலைமையைப் பற்றிச் சந்தேகப்படுகிருர் என்று தோன்றிற்று. உடனே அவன் "ஸார்! எனக்

இருந்த ஆத்திரத்தில் அப்படிப் பேசிவிட்டேன். தவறுதலாக உங்கள் கைமீது பட்டுவிட்டது. மன்னிக்கணும்'' என்றான்.

"பாதகமில்லை'' என்றார் பஞ்சநதம்.

"எப்பொழுது முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம்? அதோ பாருங்கள் மணி அடிக்கிறது. ஜாதகம் கூடப் பார்க்கவேண்டியதில்லை.''

"அடுத்த மாதத்தில் வைத்துக் கொள்ளலாம். ஆனல் நீங்கள் முதலில் பெண்ணைப் பார்க்கவேண்டாமா?''

"நான் பார்த்தாகி.......'' என்று பரமேசுவரன் சொல்லிக்கொண்டிருந்தபோது வெளியிலிருந்து இரண்டு பெண்கள் உள்ளே நுழைந்தார்கள். ஒருத்தி பெரியவளா யிருந்தாள். இன்னெருத்தி சிறியவள்.

பஞ்சநதம் அவர்களைக் கண்டதும் "ராஜ சுந்தரி! எங்கே போயிருந்தே! வா! இவருக்கு நமஸ்காரம் பண்ணு. பட்டணத்திலே யிருந்து உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்'' என்றார்.

பரமேசுவரன் மனதுக்குள் அப்பொழுது ஒரு பெரிய பூகம்பமேற்பட்டிருந்தது. மனதிலிருந்து எண்ணங்கள், ஆசைகள், கற்பனைகள் எல்லாம் கடபுடவென்று உருண்டன! 'இது யாரடா இந்தப் பெண்?' என்று அவன் ஆச்சர்யப்பட்டான்.

"இவள்தான் என் மூத்த பெண் ராஜ சுந்தரி. அந்தக்குட்டி சுமதி. நீங்கள் வந்தபோது பார்த்தீர்களே, அவள்தான் அகிலாண்டம். இரண்டாவது பெண்" என்று பஞ்சநதம் தமது பரம்பரையைப் பற்றிக் கூறி னார்.

தனக்கு நமஸ்கரித்துவிட்டுச் சென்ற ராஜ சுந்தரியைப் பரமேசுவரன் சற்றுத் தைரிய மாகவே நேருக்கு நேர் பார்த்தான். உடனே அவன் மனதில் பின்வரும் குறிப்புகள் பதிவா யின:—வயது இருபத்திரண்டிருக்கும். நன்ருக வளர்ந்திருக்கிருள். கை கால்கள் வாட்ட சாட்ட மாய் இருக்கின்றன. தலை மயிர் மிக நீளம். முகம் உருண்டை என்றும் சொல்ல முடிய வில்லை, நீளமென்றும் சொல்ல முடியவில்லை. அவள் உடல் அமைப்பு சாமுத்திரிகா இலட் சணங்களின்படி இல்லை என்ருலும், முகத்தில் ஒருவிதச் சிரிப்பு இயற்கையாகவே குடிகொண் டிருக்கிறது. அந்தச் சிரிப்பைத்தான் மோக னச்சிரிப்பு என்பார்கள் போலும்.

"பெண் ரொம்பச் சமர்த்து" என்ருர் பஞ்ச நதம்.

"பார்த்தாலே தெரிகிறது" என்று பர மேசுவரன் சிரித்துக்கொண்டே சொன்ஞன். ஆனல் அவன் மனதில் இப்பொழுது பூகம்ப அதிர்ச்சி நின்றுபோய்ப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. அதில் புதிது புதிதாகப்

பெரிய பெரிய அலைகள் ஆகாயத்தை நோக்கி எழும்பி எழும்பிக் குதித்தன!

"அவள் சமையல் பண்ணினுல் மிகவும் திவ்யமாயிருக்கும்" என்று பஞ்சநதம் சொன்ஞர்.

பரமேசுவரன் அவளுடைய முக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான்.

"ஆவக்காய் ஊறுகாய் மிக நன்ருய்ப் போடுவாள்" என்று பஞ்சநதம் மேலும் புகழ்ந்தார். பெண்ணின் அழகைப்பற்றியோ, அல்லது தாம் கொடுக்கப்போகும் சீர் செனத்திகளைப் பற்றியோ அதிகம் சொல்வதற்கில்லையாகையால் அவர் இத்தகைய புகழ்ச்சிகளில் ஈடுபட்டார்.

பரமேசுவரனுக்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லை. அவன் அந்த வீட்டு வாசலில், முதலில் வந்து நின்றபோது பார்த்த பெண்தான் விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்த பெண் என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

அப்படி நினைத்ததன் பயனுகவும் மற்ற உணர்ச்சிகளின் பயனுகவும் அவன், தான் அந்தப் பெண்ணையே கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக மனப்பால் குடித்துக் கொண்டிருந்தான். ஆனுல், இப்போது என்ன செய்வது?

தனக்கு நமஸ்கரித்துச் சென்ற பெண்ணைப்பற்றி என்ன முடிவு சொல்வது? அவன்

மனது இப்போது பெரிய போர்க்களமாகி அங்கு பலவிதமான எண்ணங்கள் ஒன்றுடனொன்று முட்டிப் போராடிக்கொண்டிருந்தன. அச்சமயம் ஓர் அறைப் பக்கம் வளையல் சத்தம் கேட்கவே அவன் திரும்பிப் பார்த்தான்.

அங்கே அகிலாண்டம் நின்றுகொண்டிருந்தாள். அவள் இப்போது வெட்கப்படவில்லை. அத்திம்பேராய் வரப் போகிறவரைப் பார்ப்பதற்கு வெட்கப்படுவார்களா? அவள் அங்கே கூச்சமற்று சகஜமாய் நின்றுகொண்டிருந்ததைக் கவனித்த பரமேசுவரனுக்கு மனம் படாதபாடு பட்டது.

அவன் பஞ்சநதத்தினிடம் "கொஞ்சம் தனியாய்ப் பேசலாமா?" என்றான்.

பஞ்சநதம் எழுந்திருக்கவே இருவரும் வாசற்பக்கம் சென்றார்கள்.

பரமேசுவரன் மிகவும் சிரமப்பட்டு, தன் மனதிலுள்ளதைப் பச்சையாய் எடுத்துச் சொன்னான். அகிலாண்டத்தையே தான் கல்யாணஞ் செய்துகொள்ள எண்ணியதாகக் கூறினான்.

பஞ்சநதம் அதைக் கேட்டு முதலில் சிறிது ஒன்றுஞ் சொல்ல முடியாமல் தவித்தார். பிறகு "நீங்கள் சொல்வது சரிதான். உங்களிஷ்டப்படி அகிலாண்டத்தையே கல்யாணஞ் செய்து கொள்ளுங்கள். ஆனால் ராஜசுந்தரி மூத்தவளாயிற்றே. அவளுக்குக் கல்யாணம் ஆனபிறகு

தான் அகிலாண்டத்தைப்பற்றி யோசிக்க முடியும். அல்லது பெரியவளுக்கும் வரன் கிடைத்தால் இரண்டு பேருக்கும் சேர்த்தே முகூர்த்தம் வைத்து விடலாம்." என்ருர்.

"அது வரைக்கும் பொறுத்துக் கொண் டிருக்கிறேன்" என்ருன் பரமேசுவரன். பிறகு அவன் சிறிதுநேரம் இருந்துவிட்டு மறுநாள் வருவதாகச் சொல்லிச் சென்ருன்.

பஞ்சநதம் நடந்த விஷயங்களைத் தன் மனைவி மக்களிடம் ஒரு தினுசாக எடுத்துக் கூறினுர். அதாவது அவர், ராஜ சுந்தரியின் மனது புண்படாதிருக்கும் முறையில் நாஸூக் காகப் பரமேசுவரன் அபிப்பிராயத்தைப் பற்றித் தெரிவித்தார். அப்படிச் சொல்லும் போது, பரமேசுவரன், அகிலாண்டத்தைப் பற்றி யாரோ சிநேகிதன் கூறியதைக் கேட்டு அவளைத்தான் பார்க்க வந்ததாக ஒரு பொய் சேர்த்துச் சொன்னுர். இதைக் கேட்ட ராஜ சுந்தரியின் மனம் படாரென்று வெடித்துவிடும் போலிருந்தது.

அகிலாண்டம் மனதுக்குள் ஓரளவு சந் தோஷப்பட்டாலும் தமக்கை வருத்தப்படு கிருளே என்று தானும் வருத்தப்பட்டாள்.

மறுநாள் பரமேசுவரன் வந்தபோது அவ னைப் பஞ்சநதம் மரியாதையுடன் வரவேற்ருர். அவன் அவரிடம் "நான் இன்றைக்குப் போக லாமென்றிருக்கிறேன்" என்ருன்.

"அப்புறம்!"

"போய்க் கடிதம் எழுதுகிறேன். ஆனால் போகிறதற்கு முன்........"

"என்ன?"

பரமேசுவரன் சற்றுத் தயங்கி விட்டு "அகிலாண்டத்துக்கு என்னைப் பிடித்திருக் திருக்கிறதோ, இல்லையோ? எதற்கும் அவளை ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டுமென்று ஆசை" என்ருன்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகள் போக்கே அலாதி" என்று சிரித்துக்கொண்டே சொல்லி விட்டு "அகிலாண்டம்" என்று கூப்பிட்டார். அவள் வந்ததும் "உன்னிடம் அவர் என் னமோ சொல்லவேணுமென்கிருர்" என்று கூறிவிட்டு வெளியேறினர்.

பரமேசுவரனும், அகிலாண்டமும் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர். பரமேசுவரன் கடைசியில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "நான் உன் வாயாலேயே ஒரு விஷ யம் தெரிந்துகொள்ள வேண்டும். உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா, இல்லையா?" என்று கேட்டான்.

அகிலாண்டம் அதற்குத் தலையாட்டிச் சிரித்த மாதிரியிலிருந்து அவளுக்குத் தன்னை மணப்பதில் ஆசைதான் என்று ஊகித்துக் கொண்டான்.

பிறகு சிறிது நேரம், இருவரும் மறுபடி யும் மௌனமா யிருந்தார்கள்.

"ஆனால்...." என்று அகிலா திடீரென்று ஆரம்பித்தாள்.

"ஆனால் என்ன?"

"ஒரே ஒரு நிபந்தனை."

"நிபந்தனையா? என்ன செய்ய வேண்டும் சொல். புலிப்பால் கொண்டுவர வேண்டுமா? சப்த சமுத்திரத்தின் மத்தியில் ஒரு மலைத் தீவில் ஒரு பாதாளக் கிடங்கில் வசிக்கும் ராட்சசன் ஒளித்து வைத்திருக்கும் ரத்தின மோதிரத்தை எடுத்து வரவேண்டுமா? என்ன செய்ய வேண்டும், சொல்" என்று பரமேசுவரன் வேடிக்கையாகக் கேட்டான்.

"அவ்வளவு பெரிய காரியம் ஒன்றும் செய்யவேண்டாம். முதலில் அக்காவுக்கு ஒரு வரன் கண்டுபிடியுங்கள்" என்றாள் அகிலாண்டம்.

"இதுதானா பிரமாதம்? கண்டு பிடிக்கிறேன். கண்டு பிடித்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்" என்று கூறி மார்தட்டினான்.

பிறகு எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு அன்றே சென்னைக்குப் பயணமானான்.

அவன் மறுநாள் சென்னை வந்து சேர்ந்து காலேஜுக்குப் போனான். அன்று அவன் பாடங்களைச் சரியாகக் கவனித்துக் கேட்கவில்லை.

தன் வகுப்பிலிருந்த பையன்களை ஒருவன் ஒருவனாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

காலேஜ் விட்டபிறகு அவன் தன் எதிரிலிருந்த ஒரு பையனைக் கூர்ந்து கவனித்தான். முதலிற் பாதாதி கேசாபரியந்தம் உற்று நோக்கினான். பிறகு கேசாதி பாதபரியந்தம் ஒருமுறை பார்த்தான். தன்னைப் பரமேசுவரன் முறைத்துப் பார்ப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த போது அந்தப் பையன் "என்னடா ஹிப்னாட்டிஸம் செய்யப் போகிறாயா? அப்படி வெறித்துப் பார்க்கிறாயே!" என்றான்.

"இல்லை, ராஜசுந்தரி...." என்று தன்னை அறியாமலேயே கூறினான் பரமேசுவரன்.

"என்ன ராஜசுந்தரியா?" என்று அந்தப் பையன் உரக்கக் கேட்கவே மற்றப் பையன்களும் வந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

[இந்த இடத்தில் "நேயர்கள் பலர் தந்திமூலமாயும், கம்பி இல்லாத்தந்தி மூலமாயும் 'இந்தத் தடவை முடிக்கக்கூடாது' என்று கேட்டுக்கொள்ளவதால் முடிக்கவில்லை" என்று போடலாம்.]

'ராஜ சுந்தரி' என்ற வார்த்தை காதில் பட்ட மாத்திரத்தில் பல மாணவர்கள் பரமேசுவரனைச் சூழ்ந்து கொண்டனர்.

"அது யாருடா அந்த ராஜ சுந்தரி?" என்று ஒருவன் கேட்டான்.

"இத்தனை நாளாய் எனக்கு அவளைப் பற்றிச் சொல்லவே இல்லையே" என்றான் இன்னொருவன்.

"ஆசாமி திடீரென்று எங்கேயோ ஊருக்

குப் போனனே என்ற சந்தேகம் அப்போதே தோன்றிற்று. விஷயம் இப்படியா?" என்று மூன்றுமவன் கூறி மூக்கில் விரலை வைத்தான்.

வேறு ஒருவன் குறுக்கிட்டு "அவன் அப்படி எல்லாம் தப்பு வழிக்குப் போகமாட்டான். ஸ்திரீகளென்றால் தனி மரியாதை காண்பிப்பானே! அவன் பஸ்ஸில் உட்கார்ந்து மூன்று வருஷ காலமாயிற்று. எந்த ஸ்திரீயாவது வந்து உட்கார இடமில்லாமல் தவித்தால் முதலில் எழுந்து நிற்பது பரமேசுவரன்தான். முதல் முதலில் வியாசங்களிலும், பிரசங்கங்களிலும் 'பெண் தெய்வம்' என்ற வார்த்தையை உபயோகித்தது அவன்தான். அப்பேர்ப்பட்ட பரமேசுவரனையா இப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று அவனுக்காகப் பரிந்துகொண்டு பேசுவதுபோல் பரிகாசம் செய்தான்.

பரமேசுவரனுக்குக் கோபமாக வந்தது. யாருடனும் பேசாமல் தன் அறைக்குப் போய்ப் புத்தகங்களை வீசி எறிந்துவிட்டுக் கடற்கரைக்குச் சென்றான்.

அங்கே அவனுடைய நண்பர்கள், வேறு சிலர் அங்குமிங்குமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

பரமேசுவரன் அவர்களில் ஒருவனை ரகுபதியின் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு "இன்றைக்கு அலைகள் எப்படி அடிக்

கிறது பார்த்தாயா?" என்று பேச்சுக் கொடுத்தான்.

"ரொம்ப ஜோராக இருக்கு" என்று பதில் வந்தது.

"சூரியன் மலைவாயில் விழும்போது தங் கப்பாளங்களை யாரோ ஒளித்து வைப்பது போலிருக்கிறதல்லவா?"

"ஆமாம்."

"தென்றல் அலைகளை முத்தமிட்டுத் தவழ்ந்து வருகிறது, என்ன சுகமாக இருக்கிறது?"

"பிரம்மானந்தம்மா யிருக்கிறது."

இப்படிச் சிறிது நேரம் பேச்சுக் கொடுத்த பின்னர் "ஆமாம்! உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று விசாரித்தான்.

"இல்லை."

"இந்த வருஷம் செய்து கொள்வதாக உத்தேசந்தானா?"

இவன் ஏன் இப்படிக் கேட்கிறான் என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டே ரகுபதி "நல்ல பெண்ணாகக் கிடைத்தால் செய்துகொள்ள வேண்டியதுதான்" என்றான்.

"ஒரு பெண் இருக்கிறாள். நல்ல குடும்பம். நல்ல சுபாவம். பார்ப்பதற்கு வசீகரமாயிருப்பாள். வீட்டுக்காரியங்கள் எல்லாம் தெரியும்."

"அப்புறம்?"

"அப்புறமென்றால்?"

"அவள் அப்பா என்ன செய்கிறார்? என்ன சொத்து, சுதந்திரம் இருக்கிறதென்று தெரிய வேண்டாமா?"

"என்னடா! பொம்மனாட்டிகள் மாதிரி கேள்வி கேட்கிறாயே? நல்ல பெண்ணாயிருந்தால் பார்த்துப் பண்ணிக்கொள்ள வேண்டியதுதானே?"

"இருந்தாலும் பண விஷயத்தையும் கவனிக்க வேண்டியதுதான். எனக்கென்னமோ எதிர் ஜாமீன் வாங்குவதற்கு இஷ்டமில்லை. ஆனால், எங்க அம்மாமி குறைந்தது நாலாயிரம் ரூபாய் வாங்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண் உனக்கு என்ன உறவு?"

"உறவு இல்லை."

"பின்னே?"

"உறவாக ஆகப்போகிறாள். மச்சினிமுறை. நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போக எண்ணியிருக்கும் பெண்ணுக்குத் தமக்கை."

"என்னது தமக்கையா? அப்படியானால் பெரியவளுக்குக் கல்யாணம் ஆகாமலா சின்னவளுக்கு ஆகப்போகிறது?"

"அதற்காகத்தான் நான் பெரியவளுக்கு வரன் பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"ஓஹோ! ராஜசுந்தரி என்று சொன்னாயே அந்தப் பெண்தானா?" என்று விஷமச் சிரிப்புடன் கேட்டான் ரகுபதி.

"ஆமாம்."

"பரமேசுவரா! என்னைத் தொந்தரவு செய்யாதே. நீ வேறு யாரையாவது விசாரித்துப் பாரு."

"சரி, ஆனால், நான் உன்னை இப்படிக் கேட்டதைப்பற்றி ஒருத்தரிடமும் சொல்லி விடாதே" என்று கெஞ்சினான் பரமேசுவரன்.

"நன்றாயிருக்கிறது, நான் சொல்வேனா?" என்றான் ரகுபதி.

இதுமாதிரி பரமேசுவரன் ஏழெட்டுப் பையன்களைத் தனித் தனியே கூப்பிட்டு விசாரித்துப் பார்த்துவிட்டான். எல்லோரும் ஏதேதோ சால்ஜாப்புச் சொன்னார்கள். அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. ஒருவருக்கொருவர் இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லிப் பரமேசுவரனைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இதில் பரிகாசம் செய்வதற்கு ஒன்றுமில்லைதான். இருந்தாலும் மாணவர்களுக்கு இது மாதிரி விஷயம் பேச அகப்பட்டால் லேசில் விட்டுவிடுவார்களா?

பரமேசுவரன் இந்தப் பரிகாசங்களினால் மனந் தளர்ந்து போய்விடவில்லை. தனக்குத் தெரிந்த பையன்கள் இருக்குமிட மெல்லாம் கடிதம் எழுதி அவர்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா—என்று விசாரித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு ராஜசுந்தரியைப் பற்றி நினைத்துப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அவளுக்கு வரன் தேட அவன் முயற்சி செய்து வந்ததில் அகிலாண்டத்தைவிட அவள் உருவமே அவன் மனக்கண்முன் வந்து நின்றது.

அவனுக்குத் தஸரா சமயம் காலேஜ் லீவு விட்டார்கள். அப்பொழுது ஒருநாள் ஈரோடு போய் வரலாமென்று புறப்பட்டுச் சென்றான். அந்த ஊருக்குப் போவதற்குமுன் வழியிலிருந்த ஒரு தோட்டத்தில் சிறிது களைப்பாறிவிட்டுப் போகலாமென்று உட்கார்ந்தான்.

அப்பொழுது அந்தத் தோப்பின் வழியே ஒரு வாலிபன் கையில் ஒரு புத்தகத்தைப் பிரித்துப் படித்த வண்ணம் நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் கவனம் முழுதும் படிப்பிலேயே சென்றிருந்ததால் வழியில் மரஞ் செடி கொடிகள் இருப்பதைக் கூடக் கவனிக்கவில்லை. இவ்வாறு படித்துக்கொண்டு சென்ற வாலிபன் திடீரென்று காணப்படவில்லை. பூமி அப்படியே அவனை விழுங்கி விட்டதுபோல் பரமேசுவரனுக்குத் தோன்றிற்று.

உடனே அவனைத் தேடுவதற்காகப் பரமேசுவரன் எழுந்திருந்து ஓடினான். நல்ல வேளை, அந்த வாலிபன் சென்ற வழியில் ஒரு ஆழமான கிணறு தரையோடு தரையாய் இருப்பதைச் சற்றுத் தூரத்தில் வரும்போதே கண்டு

விட்டான். இல்லாவிட்டால் அவனும் அதில் விழுந்திருக்க வேண்டியதுதான்.

படித்துக்கொண்டு சென்ற பையன் கிணற்றுக்குள் தான் விழுந்திருக்க வேண்டுமென்று பரமேசுவரன் ஊகித்துக் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். அவன் ஊகித்தது சரியாகத் தான் இருந்தது. அந்த வாலிபன் கிணற்றில் முழங்கால் அளவு ஜலத்தில் நின்றுகொண்டிருந்தான். ஜலம் தரை மட்டத்தி லிருந்து சுமார் இருபது அடி தூரத்திலிருந்தது. ஆழம் இல்லாததனுல், ஆபத்தில்லைதான். ஆனல் கிணற்றின் சுவர்களில் காலை வைத்து ஏறிவரப் படிகளோ, அல்லது, சிறிய பிறைகளோ இல்லாததால் விழுந்தவன் சுலபமாக ஏறிவந்து விடமுடியாது. எதையாவது பிடித்துக்கொண்டு தான் ஏறிவர முடியும்.

பரமேசுவரன் கீழே குனிந்து பார்த்த போது அந்த வாலிபன் புஸ்தகத்தில் தான் படித்துக் கொண்டிருந்த பக்கத்தில் சுவரிலிருந்த ஒரு புல்லைப் பிடுங்கி அடையாளமாக வைத்துவிட்டுப் பிறகு உயர நோக்கினுன்.

"எப்படி ஏறுகிறதென்று தெரியவில்லையே" என்று கத்தினுன்.

அவன் கத்தினது பரமேசுவரன் காதில் விழவில்லை.

அவன் இரண்டாம் முறை கத்தினுன். அதுவும் கேட்கவில்லை. அப்பொழுது தான் பர

மேசுவரனுக்கு 'கிணற்றிலிருந்து பேசுவது போல் பேசுகிறது' என்ற உபமானத்தின் உண்மை தெரிந்தது.

பரமேசுவரன் அந்த வாலிபனைத் தப்பு விப்பதைப்பற்றி யோசித்துப் பார்த்தான். உடனே தான் கொண்டுவந்திருந்த கைப்பெட்டியிலிருந்து ஒரு பெட்ஷீட்டையும், இரண்டு கதர் அங்க வஸ்திரங்களையும் ஒன்றுடனொன்று முடித்துப் போட்டான். பிறகு கீழே படுத்துக் கொண்டு, அந்த முடிப்பைக் கிணற்றுக்குள் தொங்கவிட்டான்.

கிணற்றிலிருந்த அந்த வாலிபன் அதைப் பிடித்துக்கொண்டு மெதுவாக உயர ஏறி வரலானான். பரமேசுவரன் நல்ல பலசாலியாகையால் பிடியை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க முடிந்தது.

வாலிபன் கொஞ்சங் கொஞ்சமாக ஏறி வந்துவிட்டான். இன்னும் நாலடிதான் பாக்கி. அப்பொழுது அவனையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பரமேசுவரனுக்கு அவன் சுமாராய் அழகான பையன் என்று தோன்றிற்று. தவிர, அவன் அப்படிப் பெரிய பணக்காரப் பையன் இல்லை என்றும் ஊகித்தான்.

உடனே ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய், "நான் ஒரு காரியம் சொல்கிறேன். அதன்படி செய்கிறாயா?" என்று கேட்டான்.

"என்ன காரியமோ?"

"முதலில் ஒப்புக்கொண்டால்தான் சொல்வேன்."

"முடியாது."

"முடியாதா? இன்னெருதரம் சொல்லு."

"முடியாது. அதெப்படி இன்னதென்று தெரியாத காரியத்தைச் செய்ய ஒப்புக்கொள்ள முடியும்?"

"முடியாவிட்டால் இப்படியே இந்த பெட்ஷீட்டைக் கீழே விட்டுவிட்டுப் போய்விடுவேன்" என்று பரமேசுவரன் பயமுறுத்தினுன்.

"ஐயையோ! அப்படிச் செய்துவிடாதே. நான் என் தாய் தகப்பனுருக்கு ஒரே பிள்ளை" என்று கதறினுன் அந்த வாலிபன்.

அந்தக் கதறலைக் கேட்ட பரமேசுவரன் மனம் சற்றே இளகியது. இவ்வாறு தான் தயாதாட்சண்யமில்லாமல் நடந்து கொள்வதற்காகத் தன்னையே கடிந்துகொண்டான். ஆனல், அதே சமயத்தில் ராஜசுந்தரியின் முகம் அவன் மனக்கண்முன் தோன்றவே, அவனுடைய பச்சாத்தாபமெல்லாம் பறந்தோடிவிட்டது. ராஜசுந்தரிக்கு வரனே அகப்படாமலிருந்து விட்டால் அவள் மனமிடிந்து போய் இது மாதிரிக் கிணறு ஒன்றில் தானே விழுந்து தற்கொலை செய்துகொள்ளக் கூடும் என்று எண்ணியபோது அவனுக்குத் தற்காலவாலிபர்கள்மேல் கோபம் வந்தது. அதன் பலனாய்

அவன் மனது கல்லாய்ப் போய்விட்டது. அவன் அந்த வாலிபனைப் பார்த்து "நீ பிழைக்க வேண்டுமென்றால் நான் சொல்லுகிறபடி செய்ய ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்" என்றான்.

"சரி, ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று பதில் வந்தது.

"அப்படி வெறுமனே சொன்னால் போதாது."

"பின்னே?"

"சர்வ வல்லமையுள்ள தெய்வ சாட்சியாக நீ சொல்கிறபடி செய்கிறேன் என்று சொல்" என்றான் பரமேசுவரன். அவன் சட்டப் பரீட்சைக்குப் படிப்பவனல்லவா?

வாலிபன் அப்படியே பிரமாணம் செய்ததும், பரமேசுவரன் அவனை மெதுவாக இழுத்து வெளியில் கொண்டுவந்து சேர்த்தான்.

வெளியில் வந்து நின்றதுதான் தாமதம். அந்த வாலிபன் அரைத் துணியைக் கச்சம் கட்டிக்கொண்டு கைச் சட்டையை மடக்கிக் கொண்டு "ஏய்! இப்போது உன்னை என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? நான் எக்கச் சக்கமான நிலைமையி லிருக்கும்போது என்னிடம் பிரமாணம் வாங்கிக்கொண்டாயே" என்று சொல்லிக் கூத்தாடினான்.

பரமேசுவரனுக்கு அதைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. ஏனென்றால், பலசாலியான

பரமேசுவரனுக்கு அந்தப் பையன் தன்னை ஒன்றும் செய்ய முடியாதென்று தெரியும். பரமேசுவரன் கோபமடையாமல் நிதானமாக, "உன் துணியெல்லாம் நனைந்திருக்கிறது. சட்டை மேலேயும், பாசி பட்டிருக்கிறது" என்று கூறித் தன் பெட்டியைத் திறந்து ஒரு வேஷ்டியையும் சட்டையையும் எடுத்துக் கொடுத்தான். அதைக் கண்டதும் வாலிபனது கோபம் சற்றுத் தணிந்தது. பரமேசுவரன் கொடுத்த உடையை வாங்கி அணிந்துகொண்டு நின்றான். அப்பொழுது பரமேசுவரன் "இந்தா, என் கன்னம்! உன் கோபத்தைத் தீர்த்துக்கொள்" என்று தன் கன்னத்தை நீட்டினான்.

தன்னைக் காப்பாற்றியவன் இப்படிக்கூறியதைக் கேட்டதும் அந்த வாலிபனுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது.

"மன்னிக்கணும். நீ உதவி செய்யாவிட்டால் என் கதி என்ன ஆகியிருக்குமோ? ஆமாம், நீ எதற்காக என்னை நடுக்கிணற்றில் தொங்க விட்டுக்கொண்டே பிரமாணம் செய்யச் சொன்னாய்?" என்றுகேட்டான்.

"சொல்கிறேன், உன் பெயரென்ன?"

"சேனாபதி."

"எந்த ஊரோ?"

'திருச்சினாப்பள்ளி. அங்கேயே படித்துக் கொண்டிருக்கிறேன். இங்கே லீவுக்கு என்

மாமா வீட்டுக்கு வந்திருக்கிறேன்."

"தாயார் தகப்பனார் எல்லோரும்?"

"அவர்கள் ஊரிலிருக்கிறார்கள்."

"சொத்து என்ன இருக்குமோ?"

"நாங்கள் அவ்வளவு பணக்காரர்களில்லை. ஏதோ சாப்பாட்டுக்குக் கொஞ்சம் இருக்கிறது."

"அண்ணன் தம்பிகள் எத்தனை பேரோ?"

"ஒருவருமில்லை. நான் ஒரே பிள்ளை. இதெல்லாம் எதற்காக விசாரிக்கிறாய்?"

"நான் உனக்குக் கல்யாணம் செய்து வைக்கப்போகிறேன்."

"என்னது, கலியாணம் செய்துவைக்கப் போகிறாயா?"

"ஆமாம்! இந்த ஊரில் ஒரு பெண் இருக்கிறாள். அவளை நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்" என்று பரமேசுவரன் நிதானமாகவும் அழுத்தந் திருத்தமாகவும் கூறியதைக் கேட்டபோது சேனாபதி அடைந்த ஆச்சரியத்துக் களவில்லை. தன்காதில் விழுந்த வார்த்தைகளை அவனால் நம்ப முடியவில்லை. ஏதோ பயித்தியத்தினிடம் வந்து அகப்பட்டுக் கொண்டோமே என்றுகூட நினைத்தான். தப்பித்து விடலாமென்று மெதுவாக நழுவ ஆரம்பித்தான். அவன் மனதிலுள்ளதைக் கண்டு கொண்டவன்போல் பரமேசுவரன் அவன் கையைப் பிடித்துக்கொள்ளவே, சேனாபதியின்

பயம் அதிகரித்தது. ஆனால் பரமேசுவரன் சிரித்துக்கொண்டே "ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளென்றால் இப்படிப் பயப்படுகிறாயே!" என்றான்.

"நான் பெண்ணைப் பார்க்கவேண்டாமா?"

"பெண் வாட்டசாட்டமாய் வளர்ந்து, மூக்கும் முழியுமாய் இருக்கிறாள். கால், கை நொண்டியில்லை. இப்போதே அவளை நேரே போய்ப் பார்த்துவிடலாம்."

"எங்க அப்பா, அம்மாவைக் கேட்கவேண்டாமா?" என்றான் வாலிபன்.

"அவர்களிடம் அப்புறம் சொல்லிவிட்டால் போகிறது."

"என்ன பணம் எதிர் ஜாமீன் கொடுப்பார்கள்?" என்று சேனாபதி விசாரித்தான்.

அதைக்கேட்ட பரமேசுவரன் அவனை வெறுப்புக் கலந்த சிரிப்புடன் பார்த்துவிட்டு "அவர்கள் ஏழை. ஏதோ கல்யாணஞ்செய்து கொடுப்பார்கள். அவ்வளவுதான்" என்றான்.

"எங்க அப்பா, என்னைப் படிக்க வைச்ச செலவையாவது பெண் வீட்டுக்காரர்களிடமிருந்து வாங்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறாரே."

"அப்படியா? இந்தப் பெண்ணைக்கூடக் கொஞ்சம் படிக்க வைத்திருக்கிறார்களாம். பாட்டும் சொல்லிக் கொடுத்திருக்கலாம். சமையல் வேலை சொல்லிக் கொடுத்திருப்பார்கள். அந்

தச் செலவையெல்லாம் உனது படிப்புச் செல வில் கழித்துக்கொள்கிருயா?'' என்று பரமேசு வரன் எகத்தாளமாய்க் கேட்டான்.

"உனக்கு ஏன் இந்தக் கல்யாணத்தில் இவ் வளவு சிரத்தை? அந்தப் பெண்ணுக்கு நீ உறவா?''

"உறவாகப் போகிறேன்.''

"உறவாகப் போகிறேனென்ருல்?''

"இரண்டு பெண்கள் இருக்கு. நீ ஒரு பெண்ணையும், நான் ஒரு பெண்ணையும் கல் யாணம் செய்துகொள்ளப் போகிருேம்.''

"இதென்ன, கூத்தாயிருக்கிறதே!''

"கூத்தாய்த்தா னிருக்கும். உன்னைப் போன்றவர்கள் கொஞ்சம் படித்துவிட்டு மாதம் நாற்பது, ஐம்பது ரூபாய் சம்பாதிப்பதற்காக, இரண்டாயிரம் மூவாயிரம் எதிர் ஜாமீன் வேண்டுமென்ருல் அது கூத்தாயிராது. இல்லை யா?'' என்று பரமேசுவரன் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டான்.

"இன்று யார் முகத்தில் விழித்தேனே, உன்னிடம் வந்து அகப்பட்டுக் கொண்டேன். பிரமாணம் வேறு பண்ணித் தொலைத்துவிட் டேன். இப்போது என்ன பண்ணச் சொல் கிருய்?'' என்ருன்.

"என் பின்னேடு வா!''

"சரி, கிளம்பு'' என்ருன் சேனபதி.

இருவரும் பஞ்சநதத்தின் வீட்டுக்குப் புறப்பட்டார்கள். போகும் வழியில் ஒருவரோடொருவர் பேசவில்லை. பரமேசுவரன் சேனபதிமீது வைத்த கண்ணை எடுக்கவில்லை. அவன் அகஸ்மாத்தாகத் தன் கையில் கத்தியுடன் கூடிய சாவிக் கொத்தை எடுத்து வைத்துக் கொண்டு அதைப் பிரித்துப் பார்த்தபோது சேனபதிக்கு உள்ளூறக் கொஞ்சம் பயந்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இருவரும் பஞ்சநதத்தின் வீட்டை யடைந்தனர். அங்கே வாசலில் நின்றிருந்த ஒரு பெண் இவர்களைக் கண்டாள். அவள் சேனபதியை ஆச்சரியத்துடன் கவனித்தாள். பிறகு பரமேசுவரனைப் பார்த்து, நகை புரிந்த வண்ணம் உள்ளே போய்விட்டாள்.

"பரமேசுவரன்! இன்னுமொருதரம் பிரமாணம் செய்யவேண்டுமா? சொல்லு" என்றான் சேனபதி.

"ஏன்?"

"ஏன! உனக்கு இன்னும் பெண்களை வர்ணிக்கத் தெரியவில்லை. பெண் இப்படி இருப்பாளென்று சொல்லியிருந்தால் நான் அப்போதே சரியென்று சொல்லி யிருப்பேனே. இவளை எனக்குப் பிடிச்சுப் போச்சு."

"யாரை?"

"இப்போது உள்ளே போனளே, அந்தப் பெண்ணை. அவள் பெயர் என்ன?"

"அ....கி....லா....ண்....ட..........ம்" என்று சொன்னபோது பரமேசுவரனுக்குத் தொண்டையை அடைத்துக்கொண்டது. அப்பொழுது அங்கே பஞ்சநதய்யர் வந்து இருவரையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

"உங்களைக் காணோமே, கடிதாசு ஒண்ணும் இல்லையே, என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்" என்று பரமேசுவரனிடம் கூறினார்.

"சொன்ன காரியத்தை முடித்துக் கொண்டு வரலாமென் றிருந்தேன்."

"இவாள்.......!" என்று, பஞ்சநதம் பரமேசுவரனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம்! வரன்தான்" என்றான். பிறகு சேனாபதியினுடைய குடும்பத்தைப் பற்றியும் மற்ற விஷயங்களைப்பற்றியும் சிறிது பேச்சு நடந்தது.

அப்பொழுதெல்லாம் பரமேசுவரன் மனதில் ஒரு பெரிய போராட்டம் நடந்துகொண்டிருந்தது. தான் மூத்தவளான ராஜசுந்தரிக்கு வரனைத் தேடி வந்திருந்த அந்தப் பையன் அகிலாவைக் கண்டதும் காதல் கொண்டு விட்டதனால் மேலே என்ன முடிவு செய்வதென்று தெரியாமல் தத்தளித்தான். அவன் மனத்திரை முன் ஏற்கனவே நடந்த விஷயங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகக் காட்சியளித்தன. அவன் பஞ்சநதத்தின் வீட்

டிற்கு முதல் முதல் வந்ததற்குக் காரணம் காதல் அல்ல. அவருடைய பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொண்டு அவருக்குச் சிரமமில்லாமல் செய்வதற்குத்தான். ஆனால், அவன் அகஸ்மாத்தாக முதலில் அகிலாண்டத்தைப் பார்க்க நேர்ந்தது. ஆனால் ராஜசுந்தரியைப் பார்த்த பிறகும், பின்னர் அவளுக்காக வரன் தேடி அலைந்தபோதும் அவளைப் பற்றிய எண்ணங்களே அவன் மனதில் அதிகம் எழ ஆரம்பித்தன. இதன் பயனாய் நாளடைவில் ராஜசுந்தரியே அவன் மனதில் அதிகம் குடிகொள்ளலானாள். தன் கல்யாணத்தைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் ராஜசுந்தரிதான் காட்சியளிப்பாள். அவனுக்கு அவளை விவாகம் செய்துகொள்ள ஆசைதான். அதற்குச் சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அகிலா என்ன நினைத்துக் கொள்வாள்?

அவன் இப்படி எல்லாம் எண்ணிக்கொண்டிருந்தபோது பஞ்சநதம் சேனாபதியைப் பார்த்து "உங்களுக்கு என்ன வயதாகிறதோ?" என்றார்.

"இருபது நடக்கிறது?" என்றான். "இருபதா?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார். ஏனென்றால், ராஜ சுந்தரிக்கு அந்த வயதுக்கு மேல் ஆகியிருந்தது. பரமேசுவரனே வரன் தேடுவதில் தனக்கிருந்த உற்சாகத்தில் பையனுடைய வயதைப் பற்றி விசாரிக்க மறந்து

போனதை உணர்ந்தான். உடனே அவன் பஞ்சநதத்தைத் தனியாக அழைத்துக் கொண்டு போய், சேனுதிபதி அகிலாவைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவதைப் பற்றியும், மற்ற விஷயங்களைப் பற்றியும் விவரமாகச் சொன்னுன். தான் ராஜசுந்தரியை விவாகஞ் செய்து கொள்வதை ஆக்ஷேபிக்கவில்லை என்பதையும் குறிப்பாகத் தெரிவித்தான்.

பஞ்சநதம் உள்ளே சென்று தன் மனைவியிடமும் பெண்களிடமும் விஷயங்களைத் தெரிவித்துவிட்டுக் கடைசியாக "அகிலா, நீ என்ன சொல்கிருய்?" என்று அவளைக் கேட்டார். அவர் இப்படிக் கேட்டது கூடத்தில் உட்கார்ந்திருந்த இரண்டு வாலிபர்கள் காதிலும் விழுந்தது.

ஒரு நீதிபதி தீர்ப்பு வாசிக்கப் போவதை எதிர்பார்த்திருப்பது போல் அவர்கள் முகம் இருந்தது.

"அப்பா! நான் அக்காவுக்கு எப்படியாவது கல்யாணம் ஆகவேண்டுமென்று, அப்பொழுது சரி, என்றேன். இப்போது அவர் அழைத்துக் கொண்டு வந்திருக்கிருரே அவரைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது" என்ருள். இது காதில் விழுந்தபோது சேனுபதியின் முகம் மலர்ந்தது. பரமேசுவரன் தலையை ஆட்டினுன்.

"அகிலா, நீ தங்கமென்ருல் தங்கம்.

எப்பொழுதும் எனக்காகத் தியாகம் செய்யத் தயாராயிருக்கிருய். அவர் பேபரில் விளம்பரத்தைப் பார்த்து விட்டு என்னைக் கேட்க வந்தாரே அப்பொழுதே அவர் எனக்குப் பர்த்தா என்று நிச்சயித்தேன். ஆனல் அது கை கூடாது போலிருந்தது. இப்போது நல்ல வேளையாக இரண்டு பேர் இஷ்டப்படியும் அமைந்து விட்டது. ஆனல் அவர் மனசு எப்படி இருக்கிறதோ ?'' என்ருள் ராஜசுந்தரி.

இந்த வார்த்தைகள், பரமேசுவரன் காதில் இன்பத் தேன் போல் வந்து பாய்ந்தது !

மறுநிமிடம் அவன் ''ராஜசுந்தரி!'' என்று தன்னை யறியாமலே கூப்பிட்டான். அன்பு ஒழுகும் அவன் வார்த்தைகளைக் கேட்டதும் '' இதோ '' என்ருள் ராஜசுந்தரி.

காதலுக்குக் கண், காது ஒன்றுமில்லை யல்லவா ?

பயங்கர நார்த்தனர்

'சரளா! யாரோ உன்னைத் தேடுகிறார் பார்!' என்று அவளுடைய பாட்டி கூறினாள்.

ஹாலிலிருந்த சரளா வாசற் பக்கம் வந்து எட்டிப் பார்த்துவிட்டு "யாரோ புருஷா வந்திருக்கா! ஏ அம்பி, யாரென்று போய்ப் பார்!" என்று தன் தம்பியினிடம் சொன்னாள்.

அப்பொழுது அந்த மனிதன் வீட்டுக்குள்ளேயே நுழைந்து விட்டான். "நான்தான் சாரநாதன்" என்று கூறிக் கொண்டே ஹாலுக்கு வந்தான்.

அவனைக் கண்டதும் சரளா வெட்கத்தால் தலை குனிந்தாள். பிறகு சமாளித்துக்கொண்டு "வாருங்கள்" என்று வரவேற்றாள்.

"நீ யாரப்பா? எனக்குத் தெரியவில்லையே!" என்றாள் பாட்டியம்மாள்.

"நாலைஞ்சு வருஷத்துக்கு முன்னே என்னோடுகூடப் பள்ளிக்கூடத்திலே படிச்சவர்" என்று சரளா அறிமுகப்படுத்தினாள்.

"உட்காரப்பா" என்று பாட்டி கூறியதும் சாரநாதன் கீழே போட்டிருந்த ஒரு பாயில் அம்பியின் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"உங்க பேர் என்ன மாமா?" என்று அம்பி விசாரித்தான்.

"சாரநாதன்" என்று பதில் கூறி விட்டு "நான் நாலு வருஷத்துக்கு முந்தி இங்கே தான் படித்துக் கொண்டிருந்தேன். எங்கப்பா வுக்கு நாகபூருக்கு மாற்றலாகி விட்டது. ஆகையினால் நானும் அங்கேபோய்ப் படிக்கும் படியாயிருந்தது" என்று தன்னைப் பற்றித் தெரிவித்துக் கொண்டான்.

"இப்பவும் அங்கேதான் இருக்கயாக் கும்?" என்று பாட்டி விசாரித்தாள்.

"இல்லை. அப்பாவுக்கு இன்னும் வடக்கே காஷ்மீரத்துக்கு மாற்றலாகி விட்டது. நான், எங்க அம்மா, தங்கை எல்லாரும் இந்த ஊரோ டே வந்து விட்டோம். எனக்கும் இந்த ஊரி லேயே வேலை கிடைத்தது."

"சரளா! கொஞ்சம் காபி கொண்டு வந்து கொடேன்" என்று பாட்டி சொன்னதும், அவள் உள்ளே போய் ஒரு டம்ளரில் காப்பி கொண்டு வந்து வைத்தாள்.

"சரளா நான் முன்னே பார்த்ததற் கிப்போ ரொம்பப் பெரியவளாய்ப் போய் விட் டாள். நான் அகஸ்மாத்தாக இந்தத் தெரு வோடே வந்து கொண்டிருந்த போது, வாசலில் இவள் நின்று கொண்டிருந்தாள். சரளா மாதிரி யிருக்கிறதே என்று சந்தேகப்பட்டுக் கொண்டே வந்தபோது இவள் உள்ளே போய் விட்டாள். எதற்கும் விசாரித்து விட்டுப்

போகலாமென்று வந்தேன். சரளா இப்போது என்ன பண்ணிக்கொண்டிருக்கிறாள் ?"

"என்னத்தைப் பண்ணுகிறது ? நாலு வருஷமாச்சு, அவ அப்பா அம்மா இரண்டு பேரும் காலமாகி. அப்புறம் படிக்க வைக்க வில்லே. கல்யாணத்தைப் பண்ணி வைச்சுவிட லாம்னு இரண்டு வருஷமா முயற்சி பண்ணிண் டிருக்கேன். இன்னும் ஒன்றும் நடக்கலே. நாலாயிரம் ஐயாயிரம்னு கேட்கிரு! இத்தனே பணத்துக்கு எங்கே போறது ?"

கல்யாணம் என்று பாட்டி சொன்னதுமே சரளா உள்ளே போய் விட்டாள். சாரநாதன் சிறிது நேரம் யோசனை செய்து கொண்டிருந்து விட்டுப் பிறகு விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

சாரநாதன் சரளாவுடன் பத்தாவது வகுப் பில் சேர்ந்து படித்தான். படித்தானென்று லும் அவர்களுக்குள் அதிகமான பேச்சு வார்த்தை கிடையாது. எப்போதாவது சர்வ சாதாரணமாக ஏதாவது ஓரிரண்டு வார்த்தை பேசுவார்கள். அவ்வளவுதான். அப்போ தெல்லாம் அவன் அவளைப் பற்றி ஒரு பள்ளிக் கூடத்தில் படிக்கும் பெண் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான அபிப்பிராயமும் கொண் டது கிடையாது. ஆனல், நான்கு வருஷ காலத் துக்குப் பிறகு இப்போது அவளைப் பார்த்த போது அவனுக்குத் தன்னையறியாமலே அவள்

மீது ஆசை உண்டாயிற்று. அவளுக்கு விவாகம் ஆகவில்லையென்று கேள்விப்பட்டதும் கூட அனுதாபமும் சேர்ந்து கொண்டது.

முதல் முறை அவன் சரளா வீட்டிற்கு வந்து சென்ற பிறகு இரண்டு தினங்களுக்கெல்லாம் மறுபடியும் வந்தான். அவன் அப்படி வந்ததைக் கண்டு சரளா ஆச்சர்யமடைந்தாள். "எதற்காக இப்படிப் புருஷர்கள் இல்லாத வீட்டிற்கு வருகிறான்?" என்று கோபமும் கொண்டாள். ஆனால் அவள் அப்படித் தன்னைப்பற்றித் தவறாக நினைக்கக் கூடுமென்று ஊகித்தவன்போல சாரநாதன் அவளிடம் தானாகப் பேச்சுக் கொடுக்காமல் பாட்டியிடமே முதலில் பேசலானான்.

"பாட்டி என் ஜாதகம் கொண்டு வந்திருக்கிறேன். கொடுக்கட்டுமா?" என்றான்.

பாட்டிக்குப் பரம சந்தோஷம். "கொடுடாப்பா! பகவான்தான் உன்னை அனுப்பிச்சிருக்கார். ஜாதகம் நன்றாயில்லாது போனால் கூட நீயே அவளைக் கல்யாணம் பண்ணிக்கிண்டா எனக்குக் கவலை விட்டுடும். உங்களுக்குத்தான் ஒருத்தரை ஒருத்தர் முன்னாடியே தெரியுமே. ஏன் சரளா! உனக்கு இந்தப் பிள்ளையைப் பிடிச்சு........" என்று கூப்பிட்ட போது சரளா அங்கு இல்லை.

இந்தப் பேச்சை எல்லாம் கவனித்துக்

கொண்டிருந்த அம்பி சரளாவைப் போய் இழுத்து வந்தான்.

"பள்ளிக்கூடத்திலேயே அவளுக்கு பேசக் கூச்சம். வாத்தியார் ஸைபர் போட்டாலும் போடட்டுமென்று வாயைத் திறந்து பதில் சொல்லமாட்டாள்" என்று சாரநாதன் பரிகாசம் பண்ணினன்.

"நான் ஜாதகம் பார்க்கச் சொல்கிறேன். இவள் ஜாதகத்தையும் நாளைக்குக் கொடுக்கிறேன். சரளா! நீயே ஒரு நகல் எடுத்துக் கொடுத்துவிடு" என்ருள் பாட்டி.

"நாளைக்குக் காலையிலே வரேன். தயாராய் வைச்சிரு" என்று சாரநாதன் சொன்ஞன். அப்பொழுது சரளா தலையாட்டினள். அந்தத் தலையாட்டலிலிருந்தே சாரநாதன் அவள் தன்னைக் காதலிக்கிருள் என்பதை அறிந்துகொண்டான்.

மறுநாள் அவன் சரளா வீட்டிற்கு வந்தான் என்று சொல்லத் தேவையில்லை. அதற்கு மறுநாளும் வந்தான். ஜாதகம் மிகவும் நன்ருயிருக்கிறதென்று ஜோசியர் கூறியதாகத் தெரிவித்தான். அதற்கும் அடுத்த நாள் அவன் வந்தபோது "சரளா! எங்க அம்மாவும் அக்காவும் உன்னை வெள்ளிக்கிழமை யன்று பார்க்க வரப்போகிரு" என்று அவளிடம் தெரிவித்தான்.

"இந்த வெள்ளிக்கிழமையா ?"

"ஆமாம். இன்றைக்குச் செவ்வாய்க் கிழமை யோனே? இன்னும் இரண்டு நாளைக் கெல்லாம்!"

"நிஜமாகவா !"

"ஏன் இப்படிப் பயப்படுகிருய் ?"

"ஒருவேளை என்னை அவர்களுக்குப் பிடிக் காமற் போனல் ?"

"ஏன் பிடிக்காமற் போகும்? நான் உன் மேல் ஆசையா யிருக்கிறேனென்று அவாளுக் குத் தெரியும். ஆகையினலே எனக்குப் பிடிச் சுப்போனல் அவாளுக்கும் பிடிச்சுப் போனப் பலேதான்."

"அதெப்படி? நான் என்ன அவ்வளவு அழகா? தவிர நாங்கள் பணக்காராளுமில்லை. வயசும் அதிகமாயிருத்துனு சொல்லமாட் டாளா ?"

"உனக்கு என்ன நாற்பது ஆகியிருக் குமா?" என்று சிரித்துக்கொண்டே கேட் டான்.

"இருபதுக்கு மேலேயே ஆகிறதே ?"

"இப்போது அந்த வயசுக்குக் குறைஞ்சு எந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் நடக் கிறது ?"

"அப்படியா! ஆனல் எனக்கு முகம் முற் றிப்போயிருக்கிறது. ஏக்கத்தினலே கண் குழி விழுந்து கிழவி மாதிரி இருக்கேன்."

"நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள இஷ்டப்படவில்லை போலிருக்கு. அதனல்தான் இந்த மாதிரி எல்லாம் பேசுகிருய்."

"அதெல்லாம் இல்லை. நிஜமாகவே சொல்கிறேன். முகத்தில் எத்தனை பரு வெடித்திருக்கிறது பார்த்தீர்களா ? காதுப் பக்கத்தில் வீங்கி உருண்டையா யிருக்கு. இதெல்லாம் என்னை விகாரப்படுத்த வில்லையா ?"

"சரளா! நீ இதுமாதிரியே பேசிக்கொண்டு போனல் எனக்குக் கோபம் வரும். உன்னைப் பார்க்கப் பார்க்க இன்னும் பார்த்துக்கொண்டே இருக்கணும் போலிருக்கு. எனக்கு நன்ருய்ப் பிடித்துப் போன பிறகு என் கிழத்தாயாருக்கும் தங்கைக்கும் உன்னைப் பிடித்தாலென்ன, பிடிக்காவிட்டாலென்ன ?"

"அப்படியில்லை. அவாள் எப்படியிருந்தாலும் வரப்போகிற நாட்டுப் பெண்ணைப் பற்றிய குறைகள் மட்டும் அவாளுக்கு ஒண்ணுக்குப் பத்தாகத்தான் படும். ரதிதேவியே, நேரே வந்தால்கூட நார்த்தனராக வரவிருக்கிறவள் அவளை அழகு என்று இலேசில் ஒப்புக்கொள்ள மாட்டாள்."

"சரளா! உனக்கு இத்தனை பேச்சு எங்கிருந்து வந்தது? நான்தான் நீ ஒருத்தரையும் பற்றிப் பயப்படவேண்டாம் என்கிறேனே? என் தங்கை திரிபுரம் ரொம்ப நல்லவள்.

அவளைப் பார்த்தபிறகு நீயே சொல்வாய்" என்றான்.

இந்தச் சமயத்தில் பாட்டி வந்துவிடவே பேச்சு நின்றது. "பாட்டி! நான் வெள்ளிக் கிழமையன்று என் தாயாரையும் தங்கையையும் அழைத்து வருகிறேன்" என்று கூறி விட்டுச் சென்றான்.

அவன் போனது முதல் சரளா கவலையிலாழ்ந்தாள். தன்னைப் பார்க்க வருகிறவர்கள், தான் நன்றாயில்லை என்று சொல்லிக் கல்யாணம் நடக்காமற் செய்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளுக்கு.

உண்மையில் சரளாவை அழகு என்று சொல்வதற்கில்லை. வயது இருபது, இருபத்தொன்று என்று ஆகிக்கொண்டு வரும்போதெல்லாம் 'கல்யாணம் இன்னும் ஆகவில்லையே' என்ற ஏக்கம் அவள் முகத்தில் குடிகொள்ள ஆரம்பித்ததனால் முகத்தில் களை குன்றியிருந்தது. ஆனால் அவளுடைய கள்ளங் கபடமற்ற முகமும், துருதுருப்பான பார்வையும் அவளுக்கு ஓர் அலாதி அழகைத் தந்தது.

சரளா கண்ணாடியின் எதிரில் நின்று தன் அழகைப் பரிசீலனை செய்ய ஆரம்பித்தாள். அந்தப் பரீட்சையில் இறங்கியிருந்தபோது தான் அழகென்று கருதியிருந்தவர்களுடன் தன்னை ஒப்பிட்டுக்கொண்டாள். அப்பொழுது அவளுக்குத் தான் மிகவும் விகாரமானவள்

என்று தோன்றியது. அன்று பகல் முழுவதும் அவளுக்கு இதே கவலைதான். சாரநாதனின் தங்கை தன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே முகத்தைச் சிணுக்கிக் கொள்வதுபோல் அவளுக்குத் தோன்றிற்று. அவள் சாரநாதனிடம் தன்னைப்பற்றி மட்டமாகக் கூறி அதன் பயனாய் அவள் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டப்படாவிட்டால் என்னசெய்கிறதென்று நினைத்துப் பார்த்தபோது அவளுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. கடவுள் எதற்காக நார்த்தனர் என்ற ஒருத்தியைப் படைக்கிறான் என்று கூட அவளுக்கு ஆத்திரமாய் வந்தது. அந்தச் சமயத்தில் அவள், தான் தன் தம்பிக்கு அக்காள் என்பதையும், தானும் நார்த்தனராக வரக்கூடுமென்பதையும் பற்றி நினைக்கவில்லை. சாரநாதனின் தங்கை தான் அழகாயில்லை என்று சொல்லிவிட்டால் அந்த அவமானத்தை எப்படிச் சகித்துக் கொண்டிருப்பது என்று எண்ணி எண்ணி ஏங்கினாள். கடைசியில் அவள் யோசனை செய்து பார்த்து ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

அப்பொழுது மாலை மணி நான்கு இருக்கும். பக்கத்துத் தெருவரையில் போய்விட்டு வருவதாகப் பாட்டியிடம் கூறிவிட்டு சரளா வெளியில் கிளம்பிச் சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் 'டாக்டர் சுந்தரி' என்ற போர்டு மாட்டியிருந்த ஒரு வீட்டுக்குள் நுழைந்தாள்.

அங்கே உண்மையில் 'ரதியே உருவெடுத்து" வந்ததுபோன்ற ஸ்திரீ டாக்டர் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு வயது இருபத்திரண்டு, இருபத்து மூன்றுக்குமேல் இராது. அவளுடைய சிவந்த அழகான முகத்தில் பால் வடிந்து கொண்டிருந்தது. அவள் சரளவைப் பார்த்ததும் "என்னம்மா! நான் இப்போது வெளியே கிளம்பப் போகிறேன். இப்பொழுது வந்தாயே. நாளைக்கு வாயேன்" என்றாள்.

"நாளைக்கா? முடியாது?" என்றாள் சரளா.

"நான் இந்த இடத்தில் தினமும் சாயங்காலம் நாலுமணி வரையில்தான் இருப்பேன். அதற்கப்புறம் நாலரை மணிக்கு ஆஸ்பத்திரிக்குப்போய் ஆகவேண்டும். அங்கே எனக்காகப் பலபேர் காத்துக்கொண்டிருப்பார்களே. நான் என்ன பண்ணட்டும்?"

"இன்றைக்கு மட்டும் எனக்காகக் கொஞ்சம் தயவு செய்யுங்கள்."

"அப்படி என்ன அவசரம்? உனக்கு என்ன உடம்பு?"

"நீங்கள் ஒருவரிடமும் சொல்லமாட்டீர்களே?"

"டாக்டர்கள் தங்களுக்குத் தெரிந்த ரகசியங்களை ஒருத்தரிடமும் சொல்வது வழக்க

மில்லே. ஆகையினல் நீ எதுவா யிருந்தாலும் என்னிடம் தைரியமாய்ச் சொல்லலாம்.''

"இன்னும் இரண்டு தினங்களில் என்னேக் கல்யாணத்துக்காகப் பிள்ளே வீட்டுக்காரர்கள் பார்க்க வரப்போகிருர்கள்'' என்று சரளா ஆரம்பித்தபோது டாக்டருக்கு அவள் விஷ யத்தில் ஸ்வாரஸ்ய மேற்பட்டது.

"பிள்ளேக்குத் தாயாரும் தங்கையும் வரப் போகிருர்களாம். அந்தத் தங்கையைப் பற்றி நினேத்துப் பார்த்தாலும் எனக்குப் பயமா யிருக்கிறது. எனக்கு இதோ காதுப் பக்கத் தில் சிறிது வீங்கி உருண்டையா யிருக்கிறதல் லவா? அதைப் பார்த்துவிட்டு அவள் 'பெண் நன்ருய் இல்லே' என்று சொல்லி விட்டால் என்ன பண்ணுகிறது? அப்புறம் கல்யாணம் நின்றுவிடும். ஆகையால் அது இருந்த இடந் தெரியாமல் ஆபரேஷன் செய்துவிடவேண்டும். முகத்தைப் பரு வேறு விகாரப்படுத்துகிறது. அதற்கும் ஏதாவது மருந்துவேண்டும்'' என்று சரளா விவரமாகக் கூறி முடித்தாள்.

அவள் சொல்லியதைக் கேட்டதும் டாக்ட ருக்கு இரக்கமும் சிரிப்பும் தோன்றிற்று. பிறகு அவள் சரளாவின் வீக்கத்தைச் சோதனே செய்து பார்த்துவிட்டு "இது ஒன் றும் பிரமாதமில்லே. இந்தமெழுகில் கொஞ்சம் எடுத்து இரண்டு தரம் தேய்த்தால் வீக்கம் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும்''

என்று சொல்லி ஒரு மெழுகு டப்பாவைக் கொடுத்தாள். பிறகு ஒரு சீசாவில் சிறிது திராவகத்தை விட்டு "இதைப் பன்னீரில் கலந்து பருக்களின் மேல் போடு. அழுங்கிப் போகும்" என்றாள்.

சரளா மருந்தை வாங்கிக் கொண்டே "வெள்ளிக்கிழமைக்குள் கட்டாயம் சரியாய்ப் போய்விடுமா?" என்றாள்.

"அதைப்பற்றி நீ சந்தேகப்பட வேண்டியதே இல்லை. இப்படி குழந்தைமாதிரி ஏன் பயப்படுகிறாய்?"

"ஏனா? எனக்கு அவரை ரொம்பப் பிடித்திருக்கிறது. அவருக்கும் என்னைப் பிடித்திருக்கிறது. இப்படி யிருக்கிறபோது வேறே இரண்டுபேர் வந்து பார்த்து ஏதாவது சொல்லி அவர் மனது மாறிவிட்டால் என்ன பண்ணுகிறது? அந்தப் பயந்தான்."

சரளாவைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த டாக்டர் "நான் சில யோசனைகள் சொல்கிறேன். அதன்படி செய்கிறாயா?" என்றாள்.

"ஊம்!" என்று பதில் வந்தது.

"நீ கோண வகிடு எடுத்துக்கொண்டிருக்கிறாய். உனக்கு அது நன்றாய் இல்லை. நடுவில் எடுத்துக்கொள். நீ தலைமயிரை 'லூசாக' நெற்றியில் தொங்கும்படி பின்னிவிட்டுக் கொண்டிருக்கிறாய். உன் நெற்றிக்கு அது

பொருத்தமாக இல்லை. நன்ருக மேலுக்கு எடுத்து வாரிப் பின்னிக்கொள், உன் உடம்பு அமைப்புக்கு 'பிளெயின்' புடவையை விடப் பூப்போட்ட புடவைகள் தான் நன்ருயிருக்கும். லோலக் இப்போது தொங்கும் நீளத்தில் பாதி தொங்கினல் போதும்" என்று பல சில்லறை யோசனைகள் சொன்னள்.

"ரொம்ப தாங்கஸ் டாக்டர்" என்று கூறி விட்டு, "நான் என்ன பணம் கொடுக்கணும்?" என்று கேட்டாள் சரளா.

"நீ ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை. ஆனல், உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறது யார்? அதை மட்டும் சொல்லிவிடு" என்று கேட்டாள்.

சரளா பதிற் சொல்லவில்லை.

"வெட்கப் படுகிருயாக்கும்? அப்படி யானல் அவனுடைய தாயார், தகப்பனர் அவர் களைப்பற்றி யாவது தெரியுமா?"

"விபரமாகத் தெரியாது. ஆனல் தங்கை பெயர் திரிபுரமென்று சொன்னதாக ஞாபகம்."

"ஓ!" என்ருள் டாக்டர்.

"அந்த அம்மா உங்கமாதிரி நல்லவளாக இருக்கக்கூடாதா என்று வேண்டிக்கொண் டிருக்கிறேன். நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினள் சரளா.

"எனக்குக் கல்யாணக் கடிதாசு போட மறந்துவிடாதே" என்று டாக்டர் சிரித்துக் கொண்டே சொன்னுள்.

வெள்ளிக்கிழமை வந்துவிட்டது. அன்று மாலை ஏழு மணி சுமாருக்கு சரளா வீட்டு வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. சாரநாதன் இறங்கி முதலில் உள்ளே வந்தான்.

அவன் உள்ளே வந்து சற்றுத் தூரத்தில் கதவுப் பக்கத்தில் நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சரளாவைக் கண்டதும், யாரோ புதிதாக ஒரு பெண் வந்திருக்கிருப்போல் இருக்கிறது என்று எண்ணினுன். சரளா அவ்வளவு மாறிப் போயிருந்தாள். டாக்டர் செய்த சிகிச்சை ஒரு புறமிருக்க, அவளுக்குத் தான் இப்போது முன்போல் விகாரமாயில்லை என்ற பெருமையும் முகத்தில் தாண்டவமாடியதால் பார்ப்பதற்கு நல்ல வசீகர முள்ளவளாகக் காணப்பட்டாள்.

சாரநாதனின் பின்னுல் வந்த அவனுடைய தங்கை திரிபுரத்தைக்கண்டதும் சரளா தன்னை அறியாமலேயே ஹாலுக்கு வந்தாள். அவள் முகத்தில் திகைப்புக் குடிகொண்டிருந்தது.

"சரளா! என் தங்கை திரிபுர சுந்தரி இவள்தான். டாக்டர் சுந்தரி என்பார்கள். அவளைக் கண்டு பயந்துபோய் விடாதே" என்று சகோதரியை வேடிக்கையாக அறிமுகப்படுத்தி வைத்தான் சாரநாதன்.

"அக்கா! நான் உங்களைப்பற்றி என்னென்னமோ சொல்லிவிட்டேன்" என்று சரளா உளறலானாள்.

"நீ என்ன சொன்னாய்! ஒன்றுஞ்சொல்லவில்லை. உலகத்தில் நடப்பதைப் பார்த்துப் பயப்பட்டாய். அதிலென்ன தப்பு? அண்ணா! நீ இவளைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்."

"இல்லாவிட்டால்?" என்று சாரநாதன் கேட்டான்.

"இல்லாவிட்டால், உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று சர்டிபிகேட் கொடுத்துவிடுவேன்" என்றாள்.

"சரிதான். இப்போது நானல்லவா உனக்குப் பயப்படவேண்டியிருக்கிறது" என்றான் சாரநாதன்.

என் மனைவி!

(ஒரு வேடிக்கை வழக்கு)

மிஸ் சாந்தகுமாரிக்கு நாளது தை மாதத்தில் ஒரு சுபயோக சுபதினத்தில் விவாகம் செய்வதென்று அவர்களுடைய பெரியோர்கள் எல்லாருஞ் சேர்ந்து நிச்சயித்திருந்தார்கள். ஆனால், அந்தக் கல்யாணம் சட்ட விரோதமான தென்றும் அது நடப்பதைத் தடை செய்து ஓர் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் மிஸ்டர் ராஜாமணி ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு மனுச் செய்துகொண்டார். மாஜிஸ்டிரேட் மனுவைத் தள்ளிவிடவே அவர் இப்போது ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டிருக்கிறார், அப்பீல் நீதிபதி கனம் மந்திராஜு அவர்கள் முன் விசாரணைக்கு வந்தது.

அன்று கோர்ட்டில் எள்ளுப் போட்டால் கொள்ளு விழாது, அவ்வளவு கூட்டம்! எங்கு பார்த்தாலும் ஸினிமா நடிகர்களும், நடிகைகளும், பட முதலாளிகளுமாகவே காணப் பட்டனர்.

ஸர் வாயாடி எழுந்திருந்து "நான் இந்த வழக்கில் மனுதார் ராஜாமணியின் சார்பாக ஆஜராகிறேன். எதிர் மனுதார் தமது பெண்

சாந்தகுமாரிக்கு அடுத்த மாதம் பத்தாந்தேதி விவாகம் நடத்த நிச்சயித்திருக்கிறூர். அவர் அப்படிச் செய்யாமலிருக்கத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும்'' என்று ஆரம்பித்தார்.

நீதிபதி :—இதென்ன அநியாயமா யிருக்கிறது ? பெண்களுக்கு வரன் கிடைப்பது குதிரைக்கொம்பாகஇருக்கும்போது விவாகங்களைத் தடைசெய்ய வேறு வேண்டுமா ? எத்தனையோ பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்ய வேண்டுமென்று சொல்வார்களே, அது எத்தனை ? மூந்நூற்று நாற்பதா, இரண்டாயிரத்து எட்டா?

ஸர் குல்லாசாமி :—(எதிர் மனுதாரின் வக்கீல்) :—கோர்ட்டாருக்குச் சட்டத்தில் மட்டுமின்றி உலக விஷயங்களும் 'அத்துபடி' ஆகியிருக்கிறது. ஒரு கல்யாணம் பண்ணி வைக்கச் சரியாக ஓர் ஆயிரம் பொய் சொல்லலாம்.

ஸர் வாயாடி :—நல்லது. ஆனல் இப்போது அப்படிப் பொய்யாவது சொல்லிச் சாந்தகுமாரிக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை.

நீதிபதி :—ஏன் ?

ஸர் வாயாடி :—ஏனென்ருல் அவளுக்கு ஏற்கெனவே விவாக மாகிவிட்டது !

நீதிபதி :—ஆகிவிட்டதா ? யாரைக் கல்யாணஞ் செய்துகொண்டாள் ?

ஸர் வாயாடி :—எனது கக்ஷிக்காரர் மிஸ்டர் ராஜாமணியைத்தான். ஆகையினுல் தான் அவர் சாந்தகுமாரியை "**என் மனைவி**" என்று பாத்தியம் கொண்டாடி, அவளுக்கு இரண்டாம் முறை விவாகஞ் செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிருர்.

நீதிபதி :—அவர்களுக்குள் எப்போது விவாகமாயிற்று?

ஸர் வாயாடி :—இரண்டு மாதங்களுக்கு முன் தான். எப்படி விவாகம் நடந்தது என்பதைச் சொல்கிறேன். சாந்தகுமாரி ஒரு ஸினிமா நக்ஷத்திரம்.

நீதிபதி :—ஸினிமா நக்ஷத்திரமா? ஏதோ இன்று வழக்கு ருசிகரமாக இருக்கும்போலிருக்கிறது. ஊம்! விவரமாகச் சொல்லும்.

ஸர் வாயாடி :—சாந்தகுமாரி முதலில் வெறும் சாந்தாவாகத்தான் இருந்தாள். ஒரு நாள் அவளும் அவள் தகப்பனரும் ஸினிமாப் படம் பிடிப்பதை வேடிக்கை பார்ப்பதற்காக ஒரு ஸ்டுடியோவுக்குப் போயிருந்தார்கள். அங்கே அன்று படம் பிடிக்க எல்லா ஏற்பாடுகளும் தயாராயிருந்தும் நடிக்கவேண்டிய பெண் பிரேம குமாரி எதிர்பாராதபடி வர முடியாமற் போய் விட்டது. டைரக்டர் தரபொர வாலா வேடிக்கை பார்க்க வந்திருந்த சாந்தாவைப் பார்த்ததும் "இவள் நமது பிரேமாவைப் போலவே இருக்கிருளே! இவள் தகப்பனர்

சம்மதப்பட்டால் இவளை வைத்துக்கொண்டே படம் பிடித்து விடலாமே!'' என்றார். சாந்தா வின் தகப்பனார் அதற்கு ஆக்ஷேபிக்கவில்லை. அவருக்குத் தமது பெண்ணுக்கு இப்படிப்பட்ட பாக்கியம் கிடைத்ததே என்று பரம சந்தோ ஷம். சாந்தா நடிக்க வேண்டியதெல்லாம் இதுதான். "எனக்கா வாழைப் பழம் பிடிக் காது?'' என்று சொல்லிவிட்டு ஒன்றன்பின் ஒன்ருகப் பதினைந்து மொந்தன் வாழைப் பழங்களைத் தின்ன வேண்டியது. சாந்தா இந்தப் பாகத்தைக் கொஞ்சம் கூடக் குறை சொல்வதற் கிடமில்லாமல் நடித்துக் காட்டி ளுள். கூடியிருந்தவர்கள் கரகோஷம் செய் தார்கள்.

ஸர் குல்லாசாமி:—இந்த விவரங்களைப் பிரஸ் தாபிப்பதை நான் ஆக்ஷேபிக்கிறேன். இவை யெல்லாம் வழக்கிற்கு அநாவசியம்.

நீதிபதி :—மிஸ்டர் குல்லாசாமி! நடுவில் குறுக்கிடாதேயும். சென்ற வாரமெல்லாம் கொலை வழக்குகளையும், திருட்டு வழக்குகளை யும் விசாரித்து மிகவும் அலுத்துப் போயிருக் கும் எனக்கு இந்த விவரங்கள் மனதுக்கு மிகவும் ஆறுதலளிக்கிறது. தவிர அவை பின் ஞல் நான் தீர்ப்புக் கூறுவதற்கு உபயோகப் பட்டாலும் படலாம்.

ஸர் வாயாடி : சாந்தா உடனே சாந்த குமாரியாகிவிட்டாள். பத்திரிகைகளெல்லாம்

அவள் போட்டோவைப் பிரசுரித்து "ஸினிமா வானில் ஒரு புதிய நட்சத்திரம்", "டைரக்டர் தர பொரவாலாவின் புதிய சிருஷ்டி" என்று பாராட்டின. படமுதலாளிகள் நான் நீ என்று போட்டிபோட்டுக்கொண்டு அவளைப் படங் களில் நடிக்க ஒப்பந்தஞ் செய்து கொள்வதற்கு முன் வந்தார்கள். ஒரு பட முதலாளி அவளுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் வீதம் பத்து வருஷத்துக்குச் சம்பளம் கொடுத்து வருவதாகவும், தவிர பத்து ஏக்கர் விஸ்தீர்ண முள்ள ஒரு வாழைத் தோட்டத்தை சன்மான மளிப்பதாகவும் கூறினர்.

ஆனல் பெண்ணின் தந்தைக்கு அவளை இப்போது ஸினிமாவில் விட இஷ்டமில்லை. அவளை யாருக்காவது விவாகம்செய்து கொடுத்து விட விரும்பினராதலால் அவர் ஒரு 'காண்டி ராக்டை'யும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனல் பலபேருடைய தொந்தரவின்பேரில் ஒரே ஒரு படத்தில் மட்டும் பெண்ணை நடிக்கவிட ஒப்புக் கொண்டார். அதன்படி மிஸ் சாந்தகுமாரி 'ஆயி ரம் தலைபின்னிய அதிவேக காந்தாமணி" என்ற படத்தில் நடித்தாள்.

நீதிபதி : அதென்ன படம்! ஆயிரம் தலை பின்னிய........

ஸர் வாயாடி : அதிவேக காந்தாமணி.

நீதிபதி : அதுமாதிரி யெல்லாம் படம் பிடிக்கிறர்களா ?

ஸர் வாயாடி: இப்பொழுதெல்லாம் அதான் பாஷன்! பொது ஜனங்களுக்கு அது மாதிரி படங்கள்தான் பிடிக்கிறதாம்.

நீதிபதி: நான் ஒரு சனியனையும் பார்த்த தில்லை.

ஸர் வாயாடி: அந்தப் படத்தில் மிஸ் சாந்தகுமாரி ஒரு பால்ய காந்தாமணியாக நடிக்கிறாள். அப்பொழுது அவளுக்கு நூறு தலைதான் பின்னத் தெரியும். அவளுடைய பின்னல் வேகத்தைக் கேள்விப்பட்ட மந்திரி குரூரன் குமாரனான ராஜாமணி அவளைக் கல்யாணஞ் செய்து கொள்ளுகிறான். சாந்த குமாரி மணப் பெண்ணாக வந்து மிஸ்டர் ராஜாமணிக்கு வாழ்க்கைப் படுகிறாள்.

ஸர் குல்லாசாமி: வாழ்க்கைப்படவில்லை. வாழ்க்கைப் படுவதாக நடிக்கிறாள். அவ்வளவு தான்.

நீதிபதி: அவர் முழுக் கதையையும் சொல்லட்டும். நடுவில் குறுக்கிடாதேயும்.

ஸர் வாயாடி: அந்தக் காட்சியில் கல்யாணச் சடங்குகள் எல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் நடந்தேறின. அதனால்தான் என் கக்ஷிக்காரரர் சாந்தகுமாரி தனக்கு அக்கினி சாட்சியாய் வாழ்க்கைப் பட்டுவிட்டாளென்றும் அவளுக்கு மறுபடியும் விவாகஞ் செய்யக்கூடாதென்றும் தடை உத்தரவு பிறப்பிக்கும்படி கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறார்.

நீதிபதி : ஆனல் சாந்தகுமாரி நடிகை என்ற ஹோதாவில்தானே அப்படிச் செய்தாள் ?

ஸர் வாயாடி : ஆமாம் !

நீதிபதி :—பின்னே வழக்கு எங்கிருந்து வந்தது.

ஸர் வாயாடி :—ஆனல் எல்லாம் தத்ரூபமாக இருக்க வேண்டுமென்பதற்காக படம் பிடிப்பவர்கள் ஓர் உண்மையான கல்யாணத்திற்குச் செய்யும் ஏற்பாடுகளைவிட அதிகமான ஏற்பாடுகளே செய்திருந்தனர். முதல்தரமான கொட்டகைப் பந்தல் போட்டு வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. வைதிகர்களாக வந்திருந்தவர்கள் ஒன்று பாக்கி விடாமல் கல்யாண சம்பந்தமான எல்லா மந்திரங்களையும் சொன்னர்கள். மணமகன் மணமகள் கழுத்தில் தாலியைக் கட்டினன். அப்பொழுது ஜாம் ஜாம் என்று மேளம் முழங்கிற்று. பெரியவர்கள் ஆசீர்வாதம் செய்தார்கள்.

நீதிபதி : தாலிகூடக் கட்டுகிருர்களா ?

ஸர் வாயாடி : ஆமாம், பிரபுவே.

நீதிபதி : அப்புறம் என்ன ஆயிற்று ?

ஸர் வாயாடி : அது விஷயம் எனக்குத் தெரியாது. படத்தில் மட்டும் "பத்து வருஷங்களுக்குப் பின்" என்று எழுத்தில் எழுதிக் காண்பிக்கிருர்கள். அப்பொழுது அவள் அதிக வயதானவளாயிருக்கிருள். ஆனல் அதெல்லாம்

இந்த வழக்குக்குச் சம்மந்தமில்லை. என் கட்சிக் காரர் ராஜாமணி அவளைத் தொட்டுத் தாலி கட்டினரல்லவா! அதனல்தான், அவர் தாம் அந்தப் பெண்ணுக்கு சாஸ்திரப்படியும், சட்டப் படியும் கணவன் என்று பாத்தியம் கொண்டாடு கிருர்.

ஸர் குல்லாசாமி: ஒருவர் தாம் நடிக்கும் போது ஒரு பெண்ணுக்குத் தாலி கட்டினல் அவர்கள் சதிபதிகளாகிவிட முடியுமா?

ஸர் வாயாடி: ஏன் ஆகமுடியாது? அர்ஜு னன் அல்லி ராணிக்குத் திருட்டுத்தனமாகத் தாலி கட்டிவிட்டுப் பிறகு அவள் தன் மனைவி என்று பாத்தியங் கொண்டாடவில்லையா?

ஸர் குல்லாசாமி: அது வெறும் புராணக் கதை.

ஸர் வாயாடி: கதையா யிருந்தாலும் ஒரு சமூகத்தில் பின்பற்றப்படும் சம்பிரதாயத் தைக் குறிப்பிடுகிறதல்லவா? இருந்தாலும் என் நண்பர் சொல்வதுபோல் தாலி கட்டினல் மட்டும் ஒரு பெண் மனைவியாகி விடமாட்டா ளென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஸர் குல்லாசாமி: அப்படிச் சொல்லும்.

நீதிபதி: பின்னே, தாலி கட்டுவதைத் தவிர வேறு என்ன செய்ய வேண்டும்? எனக் குக் கல்யாணமாகி முப்பது வருஷத்துக்கு மேலாகிவிட்டதால் எல்லாம் மறந்து போய் விட்டது.

ஸர் வாயாடி: இந்தக் கதைகளில் வரும் மந்திரி பிராமணர். ஆகையால் பிராமண சமூக சம்பிரதாயப்படியே எல்லாம் நடந்தாக வேண்டும். இப்போது அவர்கள் வழக்கப்படி ஸப்த பதி நடந்தால்தான் விவாகம் பூர்த்தியான தாகும். இந்த விவாகத்தில் இதெல்லாம் ஒன்றும் குறைவில்லாமல் நடந்தது.—படம் 'முதல்தர' மாக இருக்கவேண்டு மென்பதற்காக அத்தியயனஞ் செய்த அசல் வைதிகர்களையே நடிக வைதிகர்களாக ஏற்பாடு செய்திருந்தார்கள். சாதாரணமாகக் கல்யாணங்களில் வைதிகர்கள் அவசர அவசரமாக மந்திரங்களை அரை குறையாகச் சொல்வது வழக்கம். சந்தடியில் அந்த அரைகுறை மந்திரங்களும் யார் காதிலும் விழுவதில்லை. ஆனல் பிரஸ்தாப விவாகத்தில் 'மைகரா போனில்' சரியாக விழுவதற்காக வைதிகர்கள் மந்திரங்களை நிறுத்தி ஸ்பஷ்டமாக உச்சரித்தார்கள். "ஏகமிஷே; விஷ்ணுஸ்வர்ன் வேது" "த்வே ஊர்ஜே" "திரீணி ஊர்ஜே" என்று ஸப்தபதி மந்திரங்களைக் கணீர் கணீரென்று சொன்னார்கள். பெண் அம்மியை மிதித்து அருந்ததியைப் பார்த்தாள். ஆகையால் இந்தக் கல்யாணம் நிஜமாகவே நடக்கும் விவாகங்களைவிட அதிக சாஸ்திரோக்தமாகவே நடந்தது. இப்படி எல்லா அம்சங்களும் குறைவின்றி நடந்தேறியிருக்கும்போது என் கக்ஷிக்காரர், சாந்தகுமாரி தமக்குச் சட்ட

பிரகாரமும் சாஸ்திரப்படியும் மனைவியென்று பாத்தியம் கொண்டாடுவது நியாயந்தானே.

ஸர் குல்லாசாமி : வெள்ளைக்காரத் தேசப் படங்களிலும் கல்யாணக் காட்சிகள் வருகின்றன. ஆனால் அங்கேயெல்லாம் இது மாதிரி ஸினிமாவில் நடித்த பெண்ணை தம் மனைவியென்று கூற யாரும் முன் வந்ததில்லை. இதை நிரூபிக்க என் கக்ஷிக்காரர் சார்லி சாப்ளின், கிரெட்டா கார்போ, பிரெடிரிக் மார்ச் முதலிய நாலாயிரம் ஸினிமா நடிகர்களை விசாரிக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

ஸர் வாயாடி : மேல்நாட்டுப் படங்களில் விவாகம் நடத்துவதென்றால் இதுமாதிரி முழுக்க, முழுக்க சாஸ்திரோக்தமாகச் செய்வதில்லை. கல்யாணமென்றால் ஒரு மாதா கோவிலைக் காட்டுவார்கள். பிறகு அங்கிருந்து மணப்பிள்ளையும் பெண்ணும் மணக் கோலத்துடன் செல்லும் காட்சியை மட்டும் காண்பிப்பார்கள். அல்லது கல்யாண விருந்து நடப்பதைக் காண்பிப்பார்கள். அதிலிருந்து விவாகம் நடந்து விட்டதென்று நாம் ஊகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஸர் வாயாடி : ஏன் இல்லை. பாதிரி வேஷம் போட்டவர் மணப்பெண்ணையும் பிள்ளையையும் பார்த்து வழக்கமான கேள்விகளைக் கேட்கும் எத்தனையோ ஸினிமாக்களை நான் பார்த்திருக்கிறேன்.

ஸர் குல்லாசாமி: இருக்கலாம். ஆனல் கிறிஸ்துவர்களுள் ஒரு விவாகம் மதப் பூர்வமானதற்கு அது ஒரு மாதா கோயிலில் நடந்தாக வேண்டும். ஸினிமா விவாகங்கள் அங்கே கோவில்களில் நடக்கிறதென்று சொல்ல முடியுமா? தவிர அங்கே நிஜமான பாதிரி வந்து கல்யாணஞ் செய்விப்பதாகச் சொல்வார்களா?'

(ஸர் குல்லாசாமி, இந்தக் கேள்விகளுக்கு வேண்டுமென்றே பதிற்சொல்லாமல் தம் ஜூனியர் வக்கீலோடு ஏதோ இரகசியம் பேசுகிறார்.)

ஸர் வாயாடி: ஆனல் ஹிந்து விவாகங்களில் மாங்கல்ய தாரணமும் ஸப்தபதியும் மிக முக்கிய அம்சங்கள். அவர்கள் கோவில்களிலோ, சத்திரங்களிலோ, வீடுகளிலோ எங்கே வேண்டுமானலும் கல்யாணத்தை நடத்தலாம். மந்திரங்கள் சொல்லி நடத்துவதுதான் முக்கியம்.

நீதிபதி: இந்த விவாகம் சரியானதென்று நிரூபிக்க இன்னும் ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் சொல்லிவிடும்.

ஸர் வாயாடி: வேண்டியது உண்டு. தம்பதிகள் இருவரும் ஊஞ்சல் ஆடினர்கள். விவாகத்தின்போது ஸ்திரீகள் லாலி பாடினர்கள். குதித்துப் பாடினர்கள். ஹாரத்திக்காகப் போட்ட பணத்தைப் பங்கிட்டுக் கொள்வதைப் பற்றிச் சண்டை கூட ஏற்பட்டதென்றல் நிஜமான கல்யாணம் என்பதற்கு வேறு என்ன சாட்சிவேண்டும்?

ஸர் குல்லாசாமி : நான் சில விஷயங்களைச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன். தாங்கள் என் நண்பரின் குயுக்தியான வாதத்தினால் ஏமாந்துவிட மாட்டீர்களென்று எனக்குத் தெரியும். தங்களுடைய சட்ட ஞானமென்ன? அனுபவமென்ன? தங்கள் அழகென்ன? தாங்கள்........

நீதிபதி : மணி என்ன ஆகிறது? டிபனுக்கு நேரமாகவில்லையா ?

ஸர் குல்லாசாமி: மணி ஒன்றுதான் ஆகிறது.

நீதிபதி : அப்படியானால் எனக்கு ஏன் வயிற்றைப் பசிக்கிறது ?

சில வக்கீல்கள் இதற்குப் பதிற் சொல்வதற்காகச் சட்ட புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தார்கள்.

நீதிபதி : சரிதான். வீட்டில் இன்று வழக்கத்தைவிடச் சீக்கிரம் சாப்பிட்டு விட்டேன். இப்போது ஒரு மணி நேரம் மணியைத் தள்ளி வைத்துவிட்டார்களல்லவா, இதில் ஒன்றும் புரியவில்லை.

நீதிபதி இப்படி முனகிக்கொண்டேயிருந்தவர் திடீரென்று ஏதோ ஞானோதயம் தோன்றியதுபோல நாற்காலியில் ஒருதரம் எழுந்திருந்து உட்கார்ந்துவிட்டு "ஸர் வாயாடி! உமது கக்ஷிகாரருக்கு என்ன கிழமை கல்யாணம் நடந்தது? எத்தனை மணிக்கு என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

ஸர் வாயாடி : (கட்டுகளைப் புரட்டிப்பார்த்து விட்டு) வெள்ளிக்கிழமை காலை பதினேரு மணிக்கு.

நீதிபதி (புன்சிரிப்புடன்) : நல்லது. நான் இந்த வழக்கில் இப்போதே தீர்ப்புக் கூறிவிடுகிறேன். தயவு செய்து எல்லோரும் இங்கே இன்றுகூடியிருக்கும் நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதை விட்டுத் தயவுசெய்து என்னைக் கொஞ்சம் கவனியுங்கள்.

இது ஒரு விநோதமான வழக்கு. நான் என் மாமனர் சிபார்சின்பேரில் முதல்முதல் ஜில்லா நீதிபதியாகி, பிறகு என்னுடைய முயற்சியால் ஹைகோர்ட் நீதிபதியான வரையில் இது மாதிரியான வழக்கை விசாரித்ததே இல்லை.

ஒரு பெரிய சமூகத்தார் மிகப் புனிதமாகக் கொண்டாடும் மத அனுஷ்டானங்களை இப்படிப் படங்களில் சந்தியிலிழுப்பதை நான் பலமாகக் கண்டிக்கிறேன். சில படங்களில் பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம் முதலிய மகா மந்திரங்களையும் நாக்கில் நரம்பின்றிச் சொல்கிறார்கள். 'தத்ரூபமாக' நடத்து வதற்கும் ஓர் எல்லை வேண்டும். மத உணர்ச்சியைப் பாதிக்கும் இத்தகைய காட்சிகளை, படங்களைத் தணிக்கை செய்யும் ஸென்ஸார்கள் எப்படி அநுமதிக்கிறார்களென்று தெரியவில்லை. முத்தம் கொடுக்கும் பாகங்களை மட்

டும் ஒரு தரத்துக்குப் பத்து தரம் போட்டுப் பார்த்து விட்டுக் கத்தரித்து எடுப்பதுதான் அவர்கள் கடமை என்று நினைக்கிறார்கள் போலிருக்கிறது.

ஸப்தபதி நடந்தால் விவாகம் சட்ட பூர்வமானதாகவும் சாஸ்திர பூர்வமானதாகவும் ஆகிவிடுகிறது. ஹிந்து சமூகத்தில் இது சம்பந்தமாகப் பெரிய கிளர்ச்சி ஏற்பட வேண்டுமென்பதற்காக மனுதார் கோருவது போல் தடை உத்தரவு பிறப்பித்து விவாகத்தை ஊர்ஜிதப் படுத்த வேண்டுமென்று ஆசைப் படுகிறேன். ஆனால் விவாகம் முழுதும் சாஸ்திரோக்தமாக நடைபெறாததால் அப்படிச் செய்ய முடியாததற்கு வருந்துகிறேன். பிரஸ்தாப விவாகம் பழைய மணிக் கணக்குப்படி வெள்ளிக்கிழமை தினம் பதினொன்றரை மணிக்குக் கொழுத்த ராகுகாலத்தில் நடந்திருப்பதால் சாஸ்திரப்படியும் சட்டப்படியும் செல்லத் தக்கதல்ல.

ஆகையால் வாதியின் மனுவைத் தள்ளி விட்டேன். வாதி பிரதிவாதிக்கு இரண்டு தார் வாழைப்பழங்கள் நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டியது.

ஒட்டியாணக் கலகம்

தீபாவளி என்றதும் நமக்குப் பல விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. படபடா, காது வலி, புதுப்புடவை, ஜவுளிக்கடைக் கடன், வெங்காய வெடி, வெங்காய ஸாம்பார், தலை தீபாவளி, மனஸ்தாபம், கங்கா ஸ்நானம், விடியற்காலத் தூக்கத்துக்கு முழுக்கு, நரகாசுரவதம், பக்ஷண சம்ஹாரம் இப்படி எத்தனையோ அரிய பெரிய விஷயங்கள்.

ஆனால், தீபாவளிக்கு வேட்டகத்துக்குச் செல்லும் மாப்பிள்ளைகளும், அவர்களைப்பற்றி எழுதும் கதாசிரியர்களும் இந்த அற்ப விஷயங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. அவர்கள் விசாரமெல்லாம், "பெண்ணுடன் பேசுவதெப்படி?" என்ற பெரிய பிரச்னையைத் தீர்ப்பதைப் பற்றித்தான். இதற்காக அவர்கள் மிகவும் சிரமப்பட்டு ஒரு சுலபமான வழி கண்டு பிடித்திருக்கிறார்கள். கேவலம் இருபது முப்பது டம்ளர் சுத்த ஜலத்தை வைத்துக் கொண்டே அவர்கள் இந்தக் காதல் நாடகத்தை நடத்தி விடுகிறார்கள்.

மாப்பிள்ளை காலையில் காப்பி சாப்பிட்டு

விட்டு உட்கார்ந்திருக்கிறார். முதல் நாள் இரவு சாதம் சாப்பிட்டபோது ஒரு டம்ளர் ஜலம் குறைவாகச் சாப்பிட்டது அவருக்குத் திடீரென்று ஞாபகத்துக்கு வருகிறது. உடனே அம்பிப் பயலைக் கூப்பிட்டு, “ஏய்! அக்காவை ஒரு டம்ளர் தீர்த்தம் கொண்டுவரச் சொல்லு. நீ கொண்டுவரவேண்டாம். கீழே போட்டு விடுவே. இந்தா ஏழு தம்பிடி. ஒரு ஊசி சரம் வாங்கிக்கோ” என்கிறார். பையன் ஓடிப் போய் அக்காளிடம் விஷயத்தைச் சொல்கிறான்.

அக்காள் உடனே ஒரு தரம் கண்ணாடியில் பார்த்துக்கொண்டுவிட்டு, பிறகு ஒரு டம்ளரில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு கிளம்புகிறாள். அவள் நாணிக்கோணிக்கொண்டு நடந்து வந்து மாப்பிள்ளையின் கையில் தீர்த்தம் கொடுக்கக் கையை நீட்டும் சமயம் பார்த்துத் துரைசாமி அய்யர் வந்து விடுகிறார்.

துரைசாமி, கல்யாணத்தின்போது மாப்பிள்ளைக்கு எதிர்த்தாப்போல் உட்கார்ந்து சாப்பிட்ட பாத்தியமுள்ளவர். இவரைக் கண்டதும் பெண் டம்ளரைக் கையில் கொடுக்காமல் கீழே வைத்துவிட்டுப் போய்விடுகிறாள். மாப்பிள்ளை, துரைசாமியை மனதுக்குள் சபித்துக் கொண்டே பேசி விடை கொடுத்தனுப்புகிறான்.

பத்து நிமிஷங் கழித்துப் பெண்ணின் தாயார் பெண்ணைப் பார்த்து, “சும்மா அடுப்

பங்கரையை ஏன் சுற்றிச் சுற்றி வரே! மாப்பிள்ளைக்குத் தீர்த்தம் கீர்த்தம் வேண்டியிருக்கும். கொண்டுபோய்க் கொடு” என்கிருள்.

பெண்ணும் அப்படியே போகிருள். மாப்பிள்ளை டம்ளரை வாங்கி அரை உத்தரணி ஜலம் சாப்பிட்டுவிட்டுப் பேச ஆரம்பிக்கிருர். அதற்குள் பெண்ணுக்கு அத்தை வந்து நின்று கொண்டு மாப்பிள்ளையை க்ஷேமம் விசாரிக்கத் தொடங்குகிருள். “மாப்பிள்ளை! எப்போ கிராப் வைச்சுக் கொண்டேள்?” என்கிருள். மாப்பிள்ளைக்கோ ஸலூனுக்குப் போன தேதி ஞாபகம் வரவில்லை. கோபம் பற்றிக்கொண்டு வருகிறது.

அத்தையம்மாள் போனதும் மாப்பிள் பிள்ளைக்கு மறுபடி விக்கலெடுக்கிறது. இன்னும் ஒரு டம்ளர் தீர்த்தம். இந்தத் தடவையும் யாராவது வந்து தொலைகிருர்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பெண்ணுக்குத் தாஞகவே, அவருடன் பேசப்போக வேண்டுமென்று தோன்றுகிறது. உடனே அவள் மறுபடியும் கையில் ஒரு டம்ளர் தீர்த்தத்துடன் கிளம்பி விடுகிருள்.

கலியாணம் பண்ணிக்கொண்ட பெரிய குற்றத்துக்காக இந்தத் தண்டனையா? தமது இளம் மனைவியுடன் நாலு வார்த்தை சேர்ந்தாப் போல் பேசுவதற்குள் மாப்பிள்ளை குறைந்தது பத்து டம்ளர் ஜலமாவது சாப்பிட்டு வயிற்றை

வண்ணான் சால்போல் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் இந்தக் காலத்தில் நிஜமாகவே இப்படி நடக்கிறதா? இல்லை. தீபாவளி வரையில் பெண்ணுடன் பேசாதிருக்கும் அந்தக் கர்நாடகப் பையன் யார்! அப்படி யாராவது இருந்தால் தயவு செய்து மூஞ்சியைக் காட்டுங்கள், பார்க்கலாம். கல்யாணம் ஆன ஒரு வாரத்துக்குள் பெண்ணை ஒரு ஸினிமாவுக்கோ, அல்லது ரயிலில் ஒரு ஊருக்கோ தனியாக அழைத்துச் செல்லாவிட்டால் அதில் சுவாரஸ்யமிருப்பதாக எந்த மாப்பிள்ளையும் கருதுவதில்லை. ஆடிப்பண்டிகைக்குச் செல்லும்போதோ, தலை தீபாவளியின் போதோ பேசுவதற்காக எந்தப் பையனும் காத்துக் கொண்டிருப்பதில்லை. அந்தப் பண்டிகைகளின் போது நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மனைவியுடன் திருட்டுத்தனமாக ஒரே ஒரு வார்த்தை பேசுவதில் ஏற்படும் அந்த மகத்தான இன்பத்தை இந்தக் காலத்துப் பையனோ பெண்ணோ அனுபவிக்கத் தயாராய் இல்லை.

இந்த நாடகமெல்லாம் மாப்பிள்ளை தனியாகப் போகும்போதுதான் நடக்கமுடியும். ஆனால் தலை தீபாவளியின்போது அநேகமாக அவன் சகோதரியோ, அல்லது தாயாரோ, அல்லது இருவருமோ செல்வது வழக்கம். இப்படி இவர்கள் போவதற்கு, பையன் சங்

கோளைப்படக் கூடும் என்பது ஒரு காரணம். சாமர்த்தியமாய் எல்லாம் செய்துகொண்டுவரத் தெரியாது என்பது இன்னொரு காரணம். ஆனல் மற்றொரு காரணமும் உண்டு. "இரண்டு மூன்று நாள் அவாள் வீட்டில் இருக்கப் போகிருனே. அவன் மனது எப்படி மாறிவிடுமோ?" என்று தாயார் பயப்படுவதுதான். மனது மாறக்கூடிய காலமல்லவா அது?

சாதாரணமாக மாப்பிள்ளை தனியே தலை தீபாவளிக்குப் போய்விட்டு வந்ததும் ஏதாவது எதிர்த்துப் பேசினல், "நீ தீபாவளிக்குப்போய் விட்டு வந்ததிலிருந்து ஒரு தினுசாயிருக்கிருய்" என்று தாயார் குற்றஞ் சாட்டுவதைப் பார்க்கிறோம். இப்படிச் சொல்வது மேற்படி பயத்தினல்தான்.

ஆனல் ஸ்ரீமதி மதுரத்திற்கு இந்த பயமெல்லாம் கிடையாது. ஏனென்றல் அவளுடைய ஒரே பிள்ளையான தியாகு அவள் கீறின கோட்டை இதுவரை தாண்டியதில்லை. ஏன் அந்தக் கோட்டின் எல்லைப் புறத்தில்கூட அவன் போனது கிடையாது. ஆகையினல் அவனைத் தனியே தலை தீபாவளிக்கு அனுப்ப அவள் தயங்கவில்லை. இருந்தாலும் சில விஷயங்களைச் சம்பந்தியுடன் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவளுக்கு ஆசை. இந்த ஆசை போன சித்திரையில் பிள்ளைக்குக் கல்யாணம் ஆனது முதல் நிறைவேருமல் இருந்து

வந்திருக்கிறது. அதற்காகவே அவள் தன் கணவர் அண்ணுவையருடனும் தியாகுவுடனும் தன் சம்பந்தி வீட்டுக்குக் கிளம்பத் தயாரானுள்.

தியாகு ரொம்பக் கெட்டிக்காரப் பையன். தன் தாயார் மேல் அபார வாஞ்சையுடையவன். கூடிய வரையில் அவளைத் திருப்திசெய்து வைப்போமே, என்ன தலை போய்விடப் போகிறது என்று எண்ணியிருப்பவன். அவள் தன் மாமியாருடன் சண்டை போடப் போகிருள் என்பது அவனுக்குத் தெரியும். சண்டை எதற்காக? கேவலம் ஒரு நகைக்காகத்தான். தியாகுவின் மனைவிக்குக் கல்யாணத்தின் போதே ஒட்டியாணம் வாங்கிப் போட்டுவிட வேண்டுமென்று பேச்சு. ஆனால் அப்பொழுது ஏதோ சாக்குப்போக்குச் சொல்லிவிட்டார்கள். அதைப் பற்றித்தான் அவன் தாயார் யுத்தம் தொடங்கப் போகிருள். ஆனால் அதற்காக அவன் அவளுடன் தர்க்கம் செய்ய இஷ்டப் படவில்லை. "ஏன் அம்மா! நான் கூட வரணுமா? நீ மட்டும் போய் ஒட்டியாணத்தை வாங்கிண்டு வந்துடேன்" என்று வேடிக்கையாகச் சொன்னுன். "சரிதாண்டா! கிளம்புடா!" என்று சொல்லிக்கொண்டே மதுரம் கோபித்துக்கொண்டு மூட்டை கட்டினுள். கூடவே தியாகுவின் தகப்பனர் அண்ணுவையரும் கிளம்பினர். அண்ணுவையர் இதுமாதிரி

விஷயங்களி லெல்லாம் மனைவியின் இஷ்டப் படியே நடக்கும் சுபாவமுள்ளவர்.

"சம்பந்தி அம்மாளுக்குக் கோபம் வந் திருக்கிறது. அவளைத் திருப்திப்படுத்த வேண் டும்" என்று ஒருவேளை பெண் வீட்டுக்காரர்க ளுக்குத் தெரியாமல் போய்விட்டால் என்ன பண்ணுகிறது? அதற்காக, இப்படி இப்படி நடந்துகொள்ள வேண்டும், இப்படி இப்படிப் பேசவேண்டும் என்றெல்லாம் மதுரம் யோசனை பண்ணி வைத்திருந்தாள். பெண்ணின் ஊர் தேரழுந்தூர். தஞ்சாவூரிலிருந்து பார்ஸல் பாஸஞ்சரில் போனால் அந்த ஊருக்குச் சாயங்காலம் ஆறு மணி சுமாருக்குப் போய்ச் சேரலாம். பெண் வீட்டுக்காரர்கள் அந்த வண்டியில்தான் தங்களை எதிர்பார்த்திருப்பார்க ளென்றும், ரயில்வே ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பி யிருப்பார்க ளென்றும் மதுரத்துக் குத் தெரியும். ஆகவே, அந்த ரயிலில் அவள் போகவில்லை. தேரழுந்தூரில் நிற்காத அடுத் தாப்போல் வரும் ரயிலில் ஏறிப்போய், பக்கத்தி லிருந்த குற்றாலம் ஸ்டேஷனில் இறங்கினாள். அங்கிருந்து வண்டிவைத்துக்கொண்டு தேரழுந் தூர் போனார்கள். அண்ணவையரும் தியாகு வும் அவள் இஷ்டப்படியே நடந்துகொண் டார்கள். தியாகுவுக்கு இதெல்லாம் தமாஷா யிருந்தது.

தேரழுந்தூரிலும் அவர்கள் நேரே சம்

பந்தி வீட்டுக்குப் போகவில்லை. வழியில் அண்ணாவையர் வீட்டுக்குப் பண்ணிவைக்கும் சாஸ்திரிகளின் மைத்துனர் வீடு இருந்தது. அதில் போய் இறங்கினார்கள். இவர்கள் அங்கே போகும்போது சுமார் எட்டு மணி இருக்கும். தாங்கள் வந்திருக்கும் சங்கதி எப்படியும் சம்பந்திகளுக்கு எட்டும், அவர்கள் தங்களை வந்து கூப்பிடுவார்கள் என்று மதுரம் எதிர் பார்த்திருந்தாள்.

மணி ஒன்பதாகி விட்டது. ஆனால் ஒருவரும் வரக் காணோம். அண்ணாவையருக்கும், தியாகுவுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. அண்ணாவையர் சாதாரணமாக வெற்றிலை அதிகம் போடுவதில்லை. ஆனால் அன்று அடிக்கடி வெற்றிலை போட்டுக்கொண்டு எச்சில் துப்ப வாசலில் போன வண்ணமா யிருந்தார். தமக்குத் தெரிந்தவர்கள் யாராவது அந்தப் பக்கம் போகமாட்டார்களா, தாம் வந்திருப்பதைப்பற்றிச் சம்பந்தி வீட்டில் சொல்லமாட்டார்களா என்று தவித்துக்கொண்டிருந்தார். தியாகுவும் வெளியில் போகவேண்டுமென்று பார்த்தான். ஆனால் மதுரம் "ரயிலிலே வந்தது உடம்பு சிரமமா யிருக்கும். பேசாமல் படுத்துக்கொண்டிரு" என்று சொல்லி அவனைக் கூடத்தில் படுக்கச் செய்திருந்தாள்.

மணி பத்தும் ஆயிற்று. அப்படியும் யாரும் வரவில்லை. அப்புறந்தான் மதுரத்துக்குக்

கவலை வந்துவிட்டது. "தீபாவளியும் அதுவுமாக யார் வீட்டிலோ வந்து உட்கார்ந்திருக்கிறோமே! நாமே போய் விடலாமா?" என்று யோசனை செய்து கொண்டிருந்தபோது அண்ணாவையர் பதினைந்தாவது தடவையாக எச்சில் துப்ப வெளியே போய்விட்டு வந்தார். அவர் வந்த மறு நிமிடம், "என்ன அண்ணா! இப்படிப் பண்ணினேளே! நீங்கள் ரயிலிலே வருவீர்களாக்கு மென்று நான் ஸ்டேஷனிலே போய்க் காத்துக் கொண்டிருந்தேன். நேரே ஆத்துக்கு வரக் கூடாதோ?" என்று சொல்லிக் கொண்டே சம்பந்தி சுப்புசாமி உள்ளே வந்தார்.

"இந்த ஆத்துக்காராளை எங்களுக்கு ரொம்பத் தெரியும். இரண்டு வார்த்தை பேசி விட்டுப் போகலாமென்று வந்தோம். நாழியானதே தெரியவில்லை. குழந்தையும் தலையை வலிக்கிறதுன்னு படுத்துக்கொண்டிருக்கான்" என்று மதுரம் சொன்னாள். தலையைப் பிடித்துக்கொண்டே படுத்திருந்த தியாகு மாமனாரைக் கண்டதும் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே எழுந்திருந்தான். பிறகு எல்லாரும் சம்பந்தி வீட்டுக்குக் கிளம்பிச் சென்றார்கள்.

பெண்ணின் தாயார் மீனாட்சி அம்மாள் மதுரத்தை மிகவும் பலமாக வரவேற்று உபசரித்தாள். ஆனால் மதுரம் அதற்கெல்லாம் ஏமாந்து போகக் கூடாதென்று தீர்மானம் பண்ணிக்கொண்டு, வெட்டொன்றும் துண்டு

இரண்டுமாகப் பதில் சொல்லி வந்தாள். சாப்பாட்டின் போதுகூட மதுரம் தன் கோபத்தைக் காண்பிக்க மறக்கவில்லை. சமையல் என்னமோ முதல் தரமாய்த்தானிருந்தது. ஆனால், ஒன்றுவது வாயில் வைக்க யோக்யதை இல்லை என்று சொல்வதுபோல் மதுரம் இலையில் வைத்ததை எல்லாம் ஒதுக்கி விட்டாள்.

சாப்பாடு ஆனதும் சுப்புசாமி தீபாவளிக்கு வாங்கி யிருந்த புடவை, வேஷ்டிகளை யெல்லாம் கொண்டு வந்து காண்பித்தார். பெண்ணுக்கு வாங்கி யிருந்ததை யெல்லாம் மதுரம் அலக்ஷ்யமாய்ப் பார்த்துவிட்டு, "சரி, புடவை வாங்கி யிருக்கேள். இன்னும் என்ன பண்ணியிருக்கேள்?" என்று கேட்டாள்.

சுப்புசாமிக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவர் தம் மனைவியைப் பார்க்கவே அவள், "நீங்கள் ஒட்டியாணத்தைப்பற்றிக் கேட்பேளென்று தெரியும். இப்போ செலவு ஜாஸ்தி. பவுன்கூட ரொம்ப விலை ஏறிப் போச்சு. உங்காத்துக்கு அனுப்பறத்துக்குள்ளே பண்ணிப் போட்டுவிட மாட்டோமா? எங்களுக்கு இல்லையா அந்தக் கவலை?" என்று சமாதானம் சொன்னாள்.

"நீங்கள் ஆறு மாஸமாக இப்படித்தான் சொல்லிண்டிருக்கேள். எனக்கு அப்பவே தெரியுமே, இது மாதிரி நடக்கும்னு. எல்லாம் சூட்டோடு சூடாப் பண்ணினால்தான் உண்டு."

"அதென்ன அப்படிச் சொல்றேள்?"

"உலகத்திலே அப்படித் தானே நடக்கிறது? முகூர்த்தம் நிச்சயம் பண்ணுகிறதுக்கு முன்னுடி, அதைப் பண்றேன் இதைப் பண்றேன்னு சொல்றது. கலியாணம் ஆனதும் 'நாங்கள் பெரிய குடும்பம் இல்லையா? இந்த ஒரு பெண்ணுக்கே எல்லாம் பண்ணிப்பிட்டால் பாக்கிக் குழந்தைகளுக்கு ஒன்றும் செய்ய வேண்டாமா?' என்று கேட்கிறது. இந்த யோசனை முன்னுடியே இருக்கணும்."

"நீங்க என்ன சொன்னாலும் நாங்கள் கேட்டுக் கொண்டுதான் ஆகணும்" என்று சுப்புசாமி குறுக்கிட்டுப் பேசினர். தம் மனைவியும் எங்கே சண்டைக்கு ஆரம்பித்துவிடப் போகிருளோ என்று அவருக்குப் பயம்.

"எங்கள் மேலே வஞ்சனை இல்லை. எங்களாலே முடிஞ்சபோது செய்து போடரேும்" என்று மீனுட்சி சொல்லிக்கொண்டிருந்தபோது மதுரம் தன் பிள்ளையைப் பார்த்து, "ஏண்டா! தலைவலி ஜாஸ்தியாயிருககோ?" என்று கேட்டாள்.

தியாகு அம்மாவுக்கு விட்டுக்கொடுக்காமல் "சுரம்கூட அடிக்கிருப்போலிருக்கு" என்ருன்.

உடனே சுப்புசாமி, "நான் நல்ல மருந்தா வச்சிருக்கேன்; கொண்டு வரேன்" என்று சொல்லி எழுந்துசென்று அலமாரியி லிருந்து மருந்து பாட்டில் கொண்டு வந்தார். அதி

விருந்த மருந்தில் ஒரு நெல்லிக்காயத்தனை எடுத்து மாப்பிள்ளையிடம் கொடுத்து வாயில் போட்டுக் கொள்ளச் சொன்னார். தியாகுவுக் குத் திருடனுக்குத் தேள் கொட்டியது போலி ருந்தது. அவன் வேறு வழியில்லாமல் மருந் தைப் போட்டுக்கொண்டான். அதன் கசப்புச் சொல்லி முடியாது. கொய்னா, எட்டிக் கொட்டை, வேப்பங்காய் இத்தனையின் 'எஸென்ஸூ'ம் அதில் சேர்ந்ததுபோல் இருந் தது. அவன் கஷ்டப்பட்டு மருந்தை முழுங்கிக் கொண்டிருந்தபோது சுப்புசாமி பெண்ணைக் கூப்பிட்டு, "குட்டி! மாப்பிள்ளைக்கு ஒரு டம்ளர் ஜலம் கொண்டு வந்து கொடு" என்றார். தியாகு வுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது, மருந்து கசப்புத் தாங்காமல் தான் மூஞ்சியை கோர மாய் வைத்துக்கொண்டிருக்கும் சமயத்திலா தன் மனைவி தீர்த்தம் கொண்டு வரவேண்டும் என்று ஏங்கினான். ஆனால் என்ன பண்ணு கிறது?

சுப்புசாமி, "இந்த மருந்தை அரை மணிக்கு ஒரு தரம் மூன்று நாலு வேளை சாப் பிட்டால், தலைவலி, சுரம் எல்லாம் பறந்து போயிடும்" என்று சொல்லிவிட்டுத் தாமும் கொஞ்சம் போட்டுக்கொண்டார்.

ஒட்டியாணப் பேச்சு மட்டில் பலமாக நடந்து கொண்டிருந்தது. நடுவில் தியாகு தலையை அதிகமாய் வலிக்கிறதென்று சொல்லி

விட்டு எழுந்திருந்தான். ரேழி பக்கம் வந்ததும் காமிரா உள்ளில் ஒரு 'ஈஸிசேர்' இருப்பதைப் பார்த்து அதில் படுத்துக் கொள்ளலாமென்று நுழைந்தான்.

அங்கே அவனுடைய தர்ம பத்தினி விசாலம் கூடத்துப் பக்கம் இருந்த கதவை உருக்களித்து வைத்துக்கொண்டு, பெரியவர்கள் சண்டை போடுவதைக் கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் தியாகு அடிமேலடி வைத்து நடந்து சென்று சப்தம் போடாமல் நாற்காலியில் படுத்துக்கொண்டான். பேச்சுக் கேட்பதில் இருந்த சுவராஸ்யத்தில் விசாலத்துக்கு அவன் வந்தது தெரியவே இல்லை. தியாகு விசாலத்தின் நடவடிக்கைகளைத் தமாஷாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

சம்பந்திகளுக்குள் தர்க்கம் பலமாகிக் கொண்டிருந்தது. அப்பொழுது மணி பன்னிரண்டு அடிக்கவே சுப்புசாமி, "குட்டி! மாப்பிள்ளைக்கு மருந்து கொடுத்து நாழி யாயிடுத்து. மருந்தும் ஜலமும் கொண்டுவா!" என்று கூப்பிட்டார்.

விசாலம் அலமாரியி லிருந்து மருந்து எடுத்துக் கொண்டு போவதற்காகத் திரும்பினாள். அப்பொழுது நாற்காலியில் தியாகு உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

தியாகு சிரித்துக்கொண்டே எழுந்திருந்து அவளைப் பக்கத்தில் வரும்படி சைகை செய்தான். அவள் கிட்ட வந்ததும், "நீ மருந்து எடுத்துக்கொண்டு போனயோ காதைப் பிடிச்சுத் திருகிவிடுவேன்" என்று வேடிக்கையாக அவள் காதைத் திருகினன்.

"ஆனல் தலைவலி போகவேண்டாமா?" என்று அவள் கேட்டாள். அவளுக்கு அப்போது ஏற்பட்டிருந்த அந்த வெட்கத்திலும் கூட அவளால் பதில் சொல்லாதிருக்க முடியவில்லை.

"இப்பொழுது தேவலை."

"தலைவலி ஜாஸ்தியா யிருக்குன்னேளே. சேர்ந்தாப்பலே இரண்டு தடவை சாப்பிட்டா சரியாப்போய்விடும்" என்று அவள் குறும்பாகச் சொன்னள்.

"தலை வலியுமில்லை, மண்ணாங்கட்டியுமில்லை, பேசாதிரு. அந்த மருந்துக் கசப்பு என்னல் தாங்க முடியவில்லை. அம்மாவுக்காக உடம்பு சரிப்படவில்லை என்று சொன்னேன். அவள் அப்படித்தான் கோபமாயிருப்பா. நாழியாக நாழியாகக் கோபம் தணிஞ்சு போகும்" என்று கொஞ்சம் உரக்கவே சொன்னன்.

அவன் இப்படிச் சொல்லி முடித்ததும், "தியாகு! யாரோடே பேசிக்கொண்டிருக்கே?" என்று மதுரம் கேட்டாள்.

தியாகு சமாளித்துக்கொண்டு "அடுத்தாத்

துப் பையனோடே பேசிக்கிண்டிருந்தேன்" என்றான். விசாலம் சிறிது நேரம் வாசற்பக்கம் போய் நின்றுவிட்டுப் பிறகு உள்ளே போய் விட்டாள்.

மணி பதினொன்றரை ஆயிற்று. ஒட்டியாண விஷயத்தில் மீனாட்சி கொஞ்சங்கூட அசைந்து கொடுக்கவில்லை. "சௌகரியப்பட்டால்தானே செய்ய முடியும்?" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

மதுரத்துக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏண்டா தியாகு! இராத்திரி எத்தனை மணிக்கு நம்ம ஊருக்கு வண்டியிருக்கு?" என்று விசாரித்தாள்.

"எனக்குத் தெரியாது. ஆனால் இப்பவே கிளம்பி ஸ்டேஷனிலேயே போய்ப் படுத்துக் கொண்டிருந்தால் வண்டி வந்தபோது ஏறிப் போய்விடலாம்!" என்றான்.

அண்ணாவையரும், "அதுதான் சரியான யோசனை. மதுரம், கிளம்பு" என்று அங்கவஸ்திரத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியில் கிளம்பத் தயாரானார். தகப்பனாருக்கும் பிள்ளைக்கும் மதுரத்தின் சங்கதி தெரியும். அவள் என்னதான் கண்டிப்பா யிருந்தாலும் காரியத்தில் விட்டுக் கொடுக்க மாட்டாளென்றும், ஊருக்குப் போகிறேனென்று சொல்வதெல்லாம் வெறும் பயமுறுத்தலென்றும் அறிவார்கள். அவளைக் காபரா படுத்தவே அவர்கள்

அப்படி ஊருக்குக் கிளம்பத் தயாரானார்கள்.

இந்த மர்மம் தெரியாத சுப்புசாமியும், மீனாட்சியும் பயந்து போய்விட்டார்கள். சுப்புசாமி, "நான் ஒட்டியாணத்துககாக எண்ணூறு ரூபாய் கொடுத்துடறேன். அவ்வளவுதானே? விடியற்காலம் பணத்தைப் பார்த்துக்குங்கோ" என்று சொல்லிவிட்டு, சுப்புசாமி தம் துண்டை உதறி மேலே போட்டுக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டார். அத்துடன் பேச்சு முடிந்தது.

* * *

இரவு சுமார் ஒரு மணி இருக்கும். திண்ணையில் சுப்புசாமியும் அண்ணாவையரும் பேசிக்கொண்டிருந்தார்கள். "நீங்கள் எனக்கு ஒரு ஒத்தாசை பண்ணணும்" என்று சுப்புசாமி சம்பந்தியைக் கேட்டார்.

"என்னாலே முடிஞ்சதைச் செய்யக் காத்துக்கொண்டிருக்கேன்."

"ஒரு முக்கியமான காரியத்துக்காகப் பணம் கடன் வாங்கி வைச்சிருக்கேன். அதிலேயிருந்து எண்ணூறு ரூபாய் எடுத்துக் காலம்பற கொடுக்கிறேன். அதைப் பார்த்தா உங்க சம்சாரத்துக்குத் திருப்தியாய்ப் போயிடும். ஆனால் ஊருக்குப்போகிறபோது பணத்தை நீங்கள் எங்கிட்டே திருப்பிக் கொடுத்து விடுங்கோ. நான் பத்துப் பதினஞ்சு நாளிலே உங்களுக்கு அந்தத் தொகையை அனுப்பி விடறேன்" என்றார்.

அண்ணுவையர் மிகவும் இரக்க சுபாவ முள்ளவர். எப்படியாவது தலை தீபாவளி தகராறு இல்லாமல் நடக்க வேண்டுமென்பதற்காக அவர் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொண்டார்.

விடியற்காலம் நாலு மணி சுமாருக்கு மதுரத்தம்மாளின் கண்ணில் படும்படி கையில் கரன்ஸி நோட்டுக் கட்டுகளை வைத்துக்கொண்டு சுப்புசாமி வீட்டுக்குள் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருந்தார். அதைப் பார்த்தபோது மதுரத்துக்குத் திருப்தியா யிருந்தது. பிள்ளை எழுந்திருந்து வந்ததும், "ஏண்டா தியாகு, உடம்பு ஒண்ணுமில்லையே. எண்ணெய் தேச்சுக்கலாமோன்னே!" என்ருள்.

"இராத்திரி ஈஸி சேரிலே போய்ப் படுத்துக் கொண்டேனே, அப்பொழுதே சரியாய்ப் போயிடுத்து" என்று விஷமச் சிரிப்புடன் அவன் பதில் அளித்தான்.

கங்கா ஸ்நானமாயிற்று. மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் புதுப் புடவையையும் வேஷ்டிகளையும் சாஸ்திரிகள் ஓதிக் கொடுக்கத் தயாரா யிருந்தார். அப்பொழுது சுப்புசாமி தட்டில் எண்ணூறு ரூபாய்களையும்வைத்து ஓதச்சொன்ஞர். மாப்பிள்ளை பணத்தை எடுத்துத் தன் தகப்பஞரிடம் கொடுத்து விடுவானென்று அவர் நினைத்தார். ஆனல்சாஸ்திரிகள் ஓதுவதற்குள் மதுரம் அந்தப் பணத்தை மிகவும் நிதானமாகத் தன் கையிலெடுத்துக் கொண்டாள்.

"கொஞ்சம் இருங்கோ, இதோ வந்தூட்டேன்!" என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து சென்றாள்.

சுப்புசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. பணத்தை எடுத்துக்கொண்டு போன மதுரம் தான் ஊரிலிருந்து கொண்டு வந்திருந்த பெட்டியைத் திறந்தாள். நோட்டுக் கட்டை அதில் பத்திரமாக வைத்தாள். பிறகு அதிலிருந்து ஒரு பெரிய வெல்வெட் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து அதைத் திறந்து தட்டில் வைத்தாள். அந்தப் பெட்டிக்குள் ரொம்ப நாகரிக வேலைப்பாடு அமைந்த முதல் தரமான ஒட்டியாணம் ஒன்று இருந்தது.

காரியம் இப்படி நடக்கப் போகிறதென்று சுப்புசாமி எதிர் பார்க்கவேயில்லை. அவர் போட்டிருந்த பிளான் எல்லாம் தலைகீழாய்ப் போய்விட்டது. அவரும் அண்ணாவையரும் ஒருவரை யொருவர் ஆச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டு பொட்டுக்கூடை முழி முழித்தார்கள். மதுரம் வேண்டுமென்றே அவர்களைப் பார்க்காமல் மீனாட்சியின் பக்கம் திரும்பி, "இந்தத் தீபாவளிக்கு எப்படியும் குழந்தைக்கு ஒட்டியாணம் போட்டுப் பார்த்து விடறதென்று வைராக்கியம் வைச்சிருந்தேன். இது முப்பது பவுன். கிட்டத்தட்ட ஆயிரத்து முன்னூறு ரூபாய் ஆகிறது. அதிகப்படி ரூபாயை நான் போட்டுக்கொள்கிறேன். நீங்கள் இந்தப் பணம்

கொடுக்காமலிருந்தாலும் நான் என்னமோ போடத்தான் போகிறேன்" என்ருள்.

இரண்டு புருஷர்களும் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்கள். மீனுட்சி அம்மாளுக்கு அவளையறியாமலே சந்தோஷம். பெண்ணைப் பற்றிச் சொல்லவேண்டுமா?

எல்லாரும் புது ஆடை உடுத்திக் கொண்டார்கள். சுப்புசாமி, "குட்டி! மாப்பிள்ளைக்கு மருந்து கொடுக்கிறயா?" என்ருர்.

"தலைவலி மருந்துதானே? இதோ கொண்டு வந்துவிட்டேன்" என்ருள் விசாலம்.

"எனக்குத்தலைவலி, சுரம் ஒன்றும் கிடையாது" என்று தியாகு அழுத்தம் திருத்தமாகச் சொன்னுன்.

"நான் தீபாவளி மருந்தைன்ன சொன்னேன்?" என்ருர் சுப்புசாமி.

முதல் நாளிரவு இருந்த கெடுபிடி குறைந்ததும் எல்லாரும் கொஞ்சம் சகஜமாகப் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

"நீங்கள் இப்படிக் கோவிச்சுக்குவேளென்று நான் நினைக்கவே இல்லை" என்ருள் மீனுட்சி.

மதுரம் சொன்னுள்: "வேணுமென்று தான் கோவிச்சுக்கிண்டேன்? நீங்களே பாருங்கோ, கல்யாணத்தின்போது, ஒட்டியாணம் பண்ணிப் போடறதாகச் சொன்னேள். ஆனுல் கல்யாணமாகிக் கிட்டத்தட்ட ஏழெட்டு மாஸ

மாச்சு. அதைப்பற்றிப் பேச்சு மூச்சே கிடையாது. கல்யாணத்தின்போதே அதற்காகத் தகராருச்சு. உங்காத்திலே யாரோ 'தாலி கழுத்திலே ஏறட்டும், அப்புறம் பேசிக்கொள்கிறேன்' என்று சொல்லிக்கொண்டிருந்தா. இதுதான் என் கோபத்தைக் கிளப்பிவிட்டுடுத்து. தாலி கழுத்திலே ஏறின என்ன பண்ணிவிடுகிறதாம்?" என்று கேட்டாள்.

"இந்த வம்பெல்லாம் கல்யாணங்களுக்கு வருகிற பேர் பண்ணிவிடுகிறது."

"வாஸ்தவந்தான். நான் அதையெல்லாம் லக்ஷியம் பண்ணவில்லை. நீங்கள் பணம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நானே போட்டு விடுகிறதென்று தான் ஒட்டியாணத்தை வாங்கிண்டு வந்தேன். ஆனல் இராத்திரி இவா இரண்டுபேரும் திண்ணையிலே படுத்துண்டு பேசிண்டிருந்தது என் காதிலே விழுந்தது" என்று சொல்லிவிட்டு அண்ணவய்யரையும் சுப்புசாமியையும் பார்த்தாள்.

அப்பொழுதுதான் அவர்களுக்கு அவள் பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டியதன் மர்மம் தெரிந்தது. ஆனல் சுப்புசாமி அந்த விஷயம் தனக்குத் தெரியாததுபோல "ஜெர்மன்காரன் இப்போ என்ன பண்ருனும்?" என்று யுத்தத்தைப்பற்றி பேச்சுத் தொடுத்தார்.

"என்ன பேசிண்டிருந்தா?" என்று மீனாட்சி ஆவலுடன் விசாரித்தாள்.

"என்கிட்ட இருக்கிற பணத்தைக் கொடுக் கறுப்போல கொடுக்கறேன். நீங்க திருப்பி எங்கிட்டயே கொடுத்தூடுங்கோ'ன்னு உங்காத் துக்காரர் சொல்லிண்டிருந்தார். இவரும் அதற்கு ஒப்புக்கொண்டார். அதுக்குத்தான் நான் பணத்தை முதலிலே கையிலே எடுத்து வைச்சிண்டேன்."

"அப்படியா சங்கதி? எனக்கு இதெல் லாம் தெரியாதே" என்று சொல்லிவிட்டுத் தன் கணவனைப் பார்த்து, "சம்பந்திக்கு எப் படியாவது பணத்துக்கு ஏற்பாடு பண்ணுங் கோனு எத்தனை சண்டை போட்டேன்? கையிலே தம்பிடி கிடையாதுன்னு சாதிச் சேளே" என்று ஆரம்பித்து விட் டாள்.

சுப்புசாமி இதற்குப் பதில் சொல்ல முடி யாமல், "பழைய கதை எல்லாம் இப்போ ஏன் பேசறே?" என்று சொல்லிக்கொண்டே வாயில் ஒரு குஞ்சாலாடை எடுத்து அப்படியே போட் டுக்கொண்டார். அதைத்தின்றுவிட்டுப் பதில் சொல்வார் என்று அவர் மனைவி எதிர்பார் தாள், ஆனல் அவர் ஒன்றைத் தின்று முடித்த தும் இன்ருென்றை வாயில் எடுத்துப் போட் டுக்கொண்டார்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டே பக்ஷணத் தட்டைக் காலி செய்துவிட்டார்கள். "விசாலம்! கொஞ்சம் பக்ஷணம் கொண்டு

வா!'' என்று மீனாட்சி பெண்ணைக் கூப்பிட்டாள். ஆனால் அவளைக் காணோம்.

"அது மெத்தையிலே பட்டாசு சுடறதுங்க" என்றாள் அப்பொழுது உள்ளே வந்த வேலைக்காரி.

"தியாகுவையும் காணோமே?' என்றாள் மதுரம்,

"மாப்பிள்ளை அய்யாதானே? சுடறபோது அம்மாவுக்கு பயமாயிருக்குமாம்; அதுக்காக துணைக்குப் போயிருக்கிறாரு."

"ஏன்! மதுரம் நீ பட்டாசு சுடறயா? நான் கட்டைப் பிரிச்சு ஒண்ணு ஒண்ணு எடுத்துக் கொடுக்கிறேன்'' என்று அண்ணாவையர் கேட்டார்.

"போங்கோன்னா!'' என்றாள் மதுரம்.

அப்படிச் சொன்னபோது அவள் பதினைந்து வயஸுப் பெண்ணாக மாறியிருந்தாள்!

Commercial Printing & Publishing House, G.T., Madras.

பண்ணை மலர்கள்

நாமக்கல் கவிஞர் :			
தமிழன் இதயம்	3	8	0
அவளும் அவனும்			
(காலிகோ)	5	0	0
(ரெக்ஸைன்)	8	0	0
என் கதை	6	8	0
கவிஞன் குரல்	3	0	0
இசைத்தமிழ்	1	8	0
பிரார்த்தனை	0	8	0
சங்கொலி	3	0	0
அரவணை சுந்தரம்	0	6	0

அச்சமில்லை (ராஜாஜி)	0	8	0
சம்ஸார சாகரம் (துமிலன்)	2	8	0
ஆடும்பாலம் (தஞ்சை ஆத்மநாதன்)	1	12	0
கப்பலோட்டிய தமிழன்			
(சிவஞான கிராமணி)	0	8	0
குருவிக் கூடு (குயிலன்)	0	3	0
மௌனப் பிள்ளையார் (சாவி)	1	12	0
நாளை உலகம்			
(தியாகி ராம. சடகோபன்)	0	8	0

ரெக்ஸைன் விலை ரூ. 8-0-0
சாதாரணப் பதிப்பு ரூ. 5-0-0

Cover printed by Shakti Press Ltd., (Shanti Press), Royapettah, Madras